# ஞானச்சுடர்



வைகாசி

2011



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள்வழி




இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம்
-விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

பொருள் : மனைவியோடும் வீட்டிலிருந்து பொருள்களைக் காப்பாற்றி வாழும் செய்கையெல்லாம் விருந்தினரை உபசரித்து அவர்க்கு உபகாரஞ் செய்வதற்காகவே ஆகும். (81)

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

பொருள் : உண்பது மரணத்தை நீக்கும் அமிர்தமாயினும், தன்னிடத்தே வந்த விருந்தினர் வீட்டின் வெளியே இருக்க அதனை ஒருவன் உண்ணுதல் முறையாகாது. (82)

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

### யோகநெறி


ஆச்சுதென்று நீசொல்லி அசட்டைசெய் யாதேயெடி
போச்சுதெடி யோகசித்தி - தங்கமே
பூசைசெய்ய மறவாதே 13

மறந்தாலும் பிறந்தாலும் மாண்டாலும் இருந்தாலும்
மறவாத தெய்வமெடி - தங்கமே
மற்றொன்றுமஞ் சாதேயெடி 14

நாமுமே நாமாக நமக்குள்ளும் நாமாகத்
தாமுமே தாமாகத் - தங்கமே
தனித்திருந்து பார்த்திடெடி 15

தேவர்கடம் இருப்பிடமும் திக்குத் திகாந்தமெல்லாம்
இச்சபையில் உள்ளதெடி - தங்கமே
இருந்திளைப் பாறிடெடி 16

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ



# ஞானச்சுடர்




வெளியீடு- 2 சுடர்- 161

2011 வைகாசி


## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சிவபுராணம் ஓதுதல் | தி. பொன்னம்பலவனார் | 01- 02 |
| திருக்கோயில்.... | செல்வி வ. இராசமலர் | 03- 06 |
| கந்தனே கலியுகத்... | கே.வி. குணசேகரம் | 07- 09 |
| சைவ ஆலயத்திற்கு.... | பு. கதிரித்தம்பி | 10- 11 |
| வித்தகா! உன்....... | திருமதி பா. சிவனேஸ்வரி | 12- 15 |
| சந்தோஷத்தைப் பணயம்... | ஜக்கி வாசுதேவ் | 16- 18 |
| சைவ சித்தாந்தம் | எஸ்.ரி. குமரன் | 19- 21 |
| துன்பம் துடைக்கும்.... | செ. ஜடா | 22- 23 |
| பாம்பன் சுவாமிகளும்... | T. நாகராசா | 24- 26 |
| புதுமைக்கும் வழிகாட்டியாக... | இரா. சாந்தன் | 27- 29 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 30- 31 |
| சிறுவர் கதைகள் | - | 32- 33 |
| கீர்த்தித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 34- 36 |
| வருடாந்த வைகாசிப்.... | - | 37- 38 |
| சிலப்பதிகாரமும் சிவன்... | நா. நல்லதம்பி | 39- 41 |
| நித்திய அன்னப்பணி | - | 42- 43 |
| தகவற் பக்கம் | மு.க. மாசிலாமணி | 44- 47 |
| யாழ்ப்பாணத்தில் சிறப்பான... | மூ. சிவலிங்கம் | 48- 51 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 52- 54 |
| சைவத்தினாலும் முடியும்... | ச. லலீசன் | 55- 57 |
| நலிவுறும் பள்ளிகளுள்.. | நீர்வைக்கிழார் | 58- 60 |
| சந்நிதியான் | அற்புதன் | 61- 64 |
| தமிழகத் திருக்கோயில்.. | வல்வையூர் அப்பாண்ணா | 65- 68 |



அன்பளிப்பு: மலர் ஒன்று 30/- ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்: 021 321 9599

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் சித்திரைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:

சித்திரைமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திருமதி சிவராஜா (நல்நடத்தை உத்தியோகத்தர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது உரையில் ஆச்சிரமமானது பல்வேறு சேவைகள், பணிகளைச் செய்துவருகின்றது. அவ்வகையில் தினமும் அன்னப்பணியை வழங்கி அடியார்களின் பசிப்பிணியைப் போக்குகின்றது. அது மாத்திரமன்றி ஞானச்சுடர் என்னும் மலரை வெளியிட்டு மக்களது அறிவுப்பசியைப் போக்குகின்றது என்று சபையோருக்கு எடுத்துரைத்தார்.

மேலும் அவர் தனது உரையில் இன்றைய காலகட்டத்தில் வாழ்கின்ற இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் மற்றும் ஏனையோர்களுக்கு இவ் ஞானச்சுடரில் இடம்பெற்றுள்ள விடயங்கள் சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது என்று கூறியதோடு, இனிவரும் காலங்களிலும் ஞானச்சுடர் சிறந்த வழிகாட்டியாக அமையவேண்டும் என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:

160ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையினை திருமதி தவமலர் சுரேந்திரநாதன் (இளைப்பாறிய அதிபர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து தனது உரையில், சந்நிதிவேற்பெருமானின் திருவருள் நிறைந்திருக்கும் இம் மலரை நான் மதிப்பீடு செய்வதென்பது இயலாத காரியம். இருந்தும் ஒரு வரையறைக்குட்படுத்தி மதிப்பீடு செய்கிறேன் என்றும், இம்மலரானது தொடர்ச்சியாக வெளிவருவதற்குக் காரணம் வேற்பெருமானின் திருவருளே என்று வியந்து கூறினார்.

மேலும் இம்மலரானது அழகான அட்டைப்படத்துடனும், சமயக் கருத்துக்கள் பொதிந்துள்ள கட்டுரைகள், கவிதைகள், பொன்மொழிகள், பாடல்கள் எனப் பல விடயங்களைத் தாங்கி எல்லோரும் பயன்பெறும் வகையிலும் ஞான நன்முத்தாக உலகெங்கிலும் திகழ்கின்றது என்றும் கூறித் தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்கள்.

# சுடர் தரும் தகவல்

ஆலயத்திற்குச் செல்லுதல், ஆண்டவனைத் தரிசித்தல், தரிசிக்கும் பொழுது சரியான நடைமுறையைக் கையாளுதல் போன்ற விடயங்களில் எமது சமயத்தவர்கள் நலிவுற்றவர்களாகவே காணப்படுகின்றனர் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியுள்ளது.

இந்த விடயங்களுடன் ஆலயச்சுத்தம் என்ற விடயத்திலும் நாம் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. ஆலயம் எப்பொழுதும் சுத்தமாகவே காணப்படவேண்டும். அதனைச் சுத்தமாக வைத்திருப்பது அனைவரதும் கடமையாகும்.

ஆலயத்திற்குச் செல்வதனால் எமக்கு என்னென்ன பயன்கள் கிடைக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோமோ அத்தகைய பயன்கள் எல்லாம் எமக்குக் கிடைக்க வேண்டுமானால் அதற்கு ஆலயச் சுத்தமும் அவசியம் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த விடயத்தில் தமிழகத்தில் நிகழ்காலத்தில் பல ஆலயங்களில் உள்ள நிலைமைகளுடன் ஒப்பிடுமிடத்து எமது நாட்டிலுள்ள ஆலயங்களின் சுத்தம், சுகாதாரம் என்பன ஓரளவேனும் சிறப்பாகக் காணப்படுவது ஒரு முன்னேற்றமான அம்சமாகும். இத்தகைய சிறப்பான சூழ்நிலைகள் தொடர்ந்தும் பேணப்படுவதில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தொடர்ந்தும் கவனம் செலுத்துவது அவசியமானதாகும்.

"ஆலயச் சுத்தம் ஆண்டவன் தரிசனம்" "சுத்தம் பேணி இறையருள் பெறுவோம்" போன்ற வாக்கியங்கள் தமிழ் நாட்டின் பல ஆலயங்களில் தொங்கவிடப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. ஆலயச்சுத்தம் அங்கே மோசமடைந்துள்ளது என்பதே இதன் அர்த்தமாகும். இதற்கு அதிக சனத்தொகை, அறியாமை போன்றவை காரணங்களாக அமையக்கூடும். ஆனாலும் எந்தவிலை கொடுத்தாயினும் ஆலயச் சுத்தத்தையும், சுகாதாரத்தையும் பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமானதாகும்.

நல்லவற்றைச் செய்கின்ற இடமாக ஆலயத்தைப் பயன்படுத்தத் தவறும்பொழுது அங்கே குடியிருக்கும் ஆண்டவனிடமிருந்து நாம் நல்லனவற்றை எவ்வாறு எதிர்பார்க்க முடியும் என்பதை மனிதன் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

உ

# கனியே ஓடி வாடா

கருணைக் கடலே செல்வச் சந்நிதி
கற்பகமே வா வா
கந்தா முருகா கதிர்வடி வேலா
கண்ணே பாலா வா
அருமை யுடைய வென்தன் மடியில்
அழகா நீ யிருந்தால்
அணைத்துன் தலையை வாரி முடிந்து
அலர் மலர் பல புனைவேன்
உரிமை யான்பால் இளநீர் பன்னீர்
உடன்பஞ் சாமிர்தமும்
ஒன்றா யாட்டி பட்டுஞ் சாத்தி
உயர்நீறு பொட்டிடுவேன்
கருமை யஞ்சனம் கண்ணில் தீட்டி
கனமணி மாலை யிட்டே
கையைக் கூப்பியுன் கால்மலர் தொழுவேன்
கனியே ஓடி வா டா

# சந்நிதி எழுந்தருள் வேலவனே

கண்ணின் மணியே பொன்னின் தொட்டில்
கனிவாய் உனை யேத்தி
கந்தா முருகா கார்த்திகேயா
எனவே தாலாட்டி
வண்ண வளைக்கை சப்பாணி கொட்டவே
வரங்கள் தாவென்பேன்
வலமாய் வீதி சுற்றிட நீயும்
வருவாய் விளையாடி
மண்ணின் மாந்தர் அன்பிற் குழைவோய்
மற்றவர் வாடாமல்
மானங்காப்பாய் மோனம் தருவாய்
வடிவேல் உனைப் பணிந்தேன்
எண்ணில் செவ்வாய் முத்தருவாய்
எப்போ வருவாயோ?
எல்லாம் வல்ல செல்வச்சந்நிதி
எழுந்தருள் வேலவனே.

முதுபெரும்புலவர், கலாபூஷணம்
ஆசிரியர் வை.க. சிற்றம்பலவனார்.

# வைகாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

உ

**திரு P.T. பாலச்சந்திரன்**
(அவுஸ்திரேலியா)

**Dr T. ஸ்ரீஸ்கந்தராசா**
(லண்டன்)

**திரு ச. கந்தசாமி**
(தேவன் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)

**திரு மா. நாகலிங்கம்**
(லக்ஷ்மி வெதுப்பகம், பத்தமேனி, அச்சுவேலி)

**திரு க. அரியரத்தினம்**
(கதிர் தொலைத்தொடர்பு நிலையம், வல்வெட்டி)

**திரு இ. ஜெயக்குமார்**
(ஆஸ்பத்திரி வீதி, சங்கானை)

**திரு ஸ்ரீ கணேஸ்வரன்**
(சச்சி மோட்டோர்ஸ் வேக்ஸ், திருநெல்வேலி)

**திரு மா. சிவமூர்த்தி**
(வீடியோ கலாமினி, அச்சுவேலி)

**திரு கா. அருந்தவராசா**
(பிரதானவீதி, தொண்டைமானாறு)

**திரு சி. தங்கவேல்**
(கேம்பிரிட்ஜ் கல்வி நிறுவனம், நவிண்டில்)

**திரு க. கிருபாகரன்**
(சந்தைவீதி, உடுப்பிட்டி)

**திரு நா. சுந்தரம்**
(நுண்ணாய்வுப் பரிசோதகர், உரும்பராய்)

**திரு வெங்கடாசலம் திவாகர்**
(யாழ்ப்பாணம்)

**திரு P. சாந்தரூபன் G.S**
சாருகாந் தொலைத்தொடர்பு நிலையம், கெருடாவில்)

**திருமதி இ. லோகநாதன்**
(இளை. பொது முகாமையாளர், மானிப்பாய்)

**Dr V. பாலகிருஷ்ணன்.**
(முகுந்தன் வைத்தியசாலை, அச்சுவேலி)

**திரு இ. கணேசலிங்கம்**
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)

**திரு ச. தெட்சணாமூர்த்தி**
(மூர்த்தி கட்டுமாணப் பணிப்பாளர், கோண்டாவில்)


**திரு S. இராசரத்தினம்**
(இளை. பிரதேச அத்தியட்சகர், நல்லூர்)

**திரு த. விக்னேஸ்வரன்**
(தங்கராசா நகை மாளிகை, யாழ்ப்பாணம்)
**திரு அ. தனேஸ்வரன்**
(இரசாயனவியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்)
**செயலாளர்**
(கலையரசி படிப்பகம், 3ம்சந்தி, தொண்டைமானாறு)
**உரிமையாளர்**
(சுந்தரம் பிறதேர்ஸ் மருந்துக்கடை, திருநெல்வேலி)
**திரு K. அருள்வேல்**
(விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
**திரு ஆ. குலேந்திரநாயகம்**
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)
**திரு கு. ரவீந்திரன்**
(அதிபர், பஞ்சசீலம்)
**திரு ஐ.கே. சந்திரசேகரம்**
(மார்ஷல், யாழ் பல்கலைக்கழகம்)
**திரு S. கோவிந்தராஜன்**
(சைவப்புலவர், பறாளாய், சுழிபுரம்)
**செல்வி T. பெரியதம்பி**
(முன்னாள் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை)
**திரு D.M. வேதாரணியம்**
(ரதி மகால், கரணவாய்)
**செல்வி ரதிவதனி**
(மாயக்கை, தம்பசெட்டி)
**திருமதி S. சரஸ்வதி**
(குட்டகம்புரை, புலோலி)
**திரு சி. குமரகுருநாதன்**
(தில்லையம்பலப் பிள்ளையார் வீதி, அல்வாய்)
**திரு மாணிக்கம் குட்டித்தம்பி**
(வல்லியாவத்தை, கரணவாய்)
**திருமதி சீ. ஆதவன்**
(வல்லிபுரக்கோயில் வீதி, புலோலி)
**சாவித்திரி அருணாசலம்**
(தும்பளை, பருத்தித்துறை)
**திரு க. பொன்னுச்சாமி**
(அம்மன் கோயிலடி, கரணவாய்)
**திரு பேரின்பபாலசுப்பிரமணியராசா கபிலேஷன்**
(அரசவீதி, உரும்பராய் கிழக்கு)
**திரு V. சந்திரராஜா**
(நிற்சாமம், சங்கானை)

**திரு வே. கிருஷ்ணராஜா**
(C.T.B, மீசாலை)
**திரு நி. ஜெயந்தன்**
(மங்கை ஸ்ரோர்ஸ், நீர்வேலி)
**திரு வ. இராசையா**
(கேணியடி, திருநெல்வேலி)
**திரு சு. சந்திரலிங்கம்**
(ஆனைக்கோட்டை)
**செல்வி அ. வள்ளிநாயகி**
(உடுவில் தெற்கு, சுண்ணாகம்)
**உரிமையாளர்**
(குரு பிறிண்ரேஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)
**திரு பொ. கந்தையா**
(புருடிலேன், அரியாலை)
**திரு செ. கிருஷ்ணராஜா**
(கலட்டி வீதி, கோண்டாவில்)
**திரு வை. சிற்றம்பலம்**
(தேவி வாசம், கொக்குவில்)
**திரு கு. பிரதீபன்**
(பிரியா சுப்ப மாக்கற், புன்னாலைக்கட்டுவன்)
**செல்வி P. சயிலஜா**
(மயிலங்காடு, ஏழாலை)
**திரு வரதலிங்கம் செல்வமோகன்**
(மோகன்கடை, ஆவரங்கால்)
**திருமதி சாரதாதேவி விஸ்வலிங்கம்**
(கெருடாவில், தொண்டைமானாறு)
**திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை**
(பத்தமேனி, அச்சுவேலி)
**திரு சுப்பிரமணியம் கந்தையா**
(சிவன்வீதி, ஆவரங்கால்)
**திரு வ.த. இன்பராசா**
(வல்வெட்டி)
**திரு R. பிரணவன்**
(கிளுவானை லேன், கோப்பாய்)
**கலாதேவி பாலசுந்தரம்**
(சண்டிலிப்பாய் மேற்கு)
**திரு ச. செல்வவிநாயகம்**
(ஜெயபதிவாசா, உரும்பராய் தெற்கு)
**திரு வ. புவிநாதன்**
(ஐயனார் வீதி, பருத்தித்துறை)

**திரு த. உருத்திரா**
(ஆதவன் மில், புலோலி)
**திரு K. வேணுகோபாலு**
(வேணி இல்லம், புலோலி)
**திரு க. செல்வராசா**
(கட்டைவேலி, கரவெட்டி)
**திரு S. சின்னராஜா**
(வல்வெட்டி)
**திருமதி S. உமாரதி**
(மங்கை இல்லம், உடுப்பிட்டி)
**திரு ஆ. வேலாயுதம்**
(உலக்கைஓடை, கம்பர்மலை)
**திரு க. சின்னராசா**
(சித்சாலயம், அல்வாய்)
**திரு செ. ஸ்ரீதரன்**
(விமலவாசா, உச்சில் ஒழுங்கை, கரவெட்டி)
**திரு சி. மதியழகன்**
(திக்கம், அல்வாய்)
**திரு ந. இராஜகோபால்**
(ஸ்ரீ நாகேந்திரா பவனம், கரவெட்டி)
**கி. சரஸ்வதி**
(போதராமடம், துன்னாலை)
**திரு ஐ. சிவஞானம்**
(கமலவதி, கரவெட்டி)
**திரு அ. சின்னத்தம்பி**
(மாய்க்கிராயன், துன்னாலை)
**திரு கதிரவேலு சதாசிவம்**
(அந்திரான், கரவெட்டி)
**ச. ஜெகசோதிராசா**
(ஆனைக்கோட்டை மேற்கு)
**K. நித்தியானந்தம்**
(தவில்வித்துவான், கொக்குவில்)
**Dr. N. பாலசுப்பிரமணியம்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)
**செல்வி இ. வல்லிபுரம் ஆசிரியை**
(புத்தூர்)

உ




# சிவபுராணம் ஓதுதல்

**பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் அவர்கள்**

செந்தமிழும் சைவசமயமும் பெருமையுடன் விளங்கும் இடம் என்று பல பேறறிஞர்களால் காலத்துக்குக் காலம். பாராட்டப்பட்ட சிறப்புடையது நம் ஈழத்திருநாடு. இங்கு வருகைபுரியும் தமிழகத்துச் சைவப் பேரறிஞர் பாடசாலைகளில் வழங்கும் சைவ சமயப் பாடப் புத்தகங்களைக் கண்டும் ஆலயம் செல்லும் ஆண்கள் மேற்சட்டை அணியாமல் தோய்த்துலர்ந்த வேட்டிசால்வை அணிந்து செல்வதையும் கண்டு நம் நாட்டில் இப்படியான தன்மைகள் இல்லையே என்று வாயூறுவது வழக்கம். இதுமட்டுமன்றி பாடசாலைகளில் வெள்ளிக்கிழமைதோறும் சிவபுராணம் ஓதப்படுதலையும் அதனால் மாணவர்கள் அனைவரும் சிவபுராணத்தினை மனப்பாடம் செய்தவர்களாய் இருப்பது கண்டும் நம் நாட்டைக் கண்ணியமானதாகப் பாராட்டுவர்.

நம்மவர்க்குத் தூய சைவ ஒழுக்கமும் அதற்கு வேண்டிய அறிவும் அமையக் காரணமாயிருந்தது கிராமந்தோறும் நிகழ்ந்து வந்த கந்தபுராணபடனமாகும். நம் பாடசாலைகளில் வெள்ளிக்கிழமைதோறும் சிவபுராண பாராயணம் நிகழக் காரணமாயிருந்தவர் பிற மதத்தவரும் பிற நாட்டவரும் வணங்கிப் போற்றிய பூரண ஞானியான சிவயோக சுவாமிகளாவார். யாழ்ப்பாணத்திலே சைவ மக்களுக்கு சைவப் பாடசாலை நிறுவப்பட வேண்டும் எனத் தம் வாழ்வை அர்ப்பணித்த காரைநகர் அருணாசலம் அவர்களும் அருணாசலத்துடன் தொடர்புகொண்டு உழைத்த இந்துப் போர்ட் இராசரட்ணம் அவர்களும் மேற்கொண்ட பெருமுயற்சியால் அரச ஆதரவுடன் சைவப்பாடசாலைகளை ஆரம்பித்த காலத்தில் பாடசாலைகளில் வெள்ளிக் கிழமைகளில் சிவபுராண பாராயணத்தை யோகசுவாமிகள் சிபார்சு செய்து ஊக்கப் படுத்தியருளினார். இதனால் சைவப் பாடசாலைகளின் தொடர்பைப் பெற்ற பிறசமயத் தவரும் இதனை அறியவும் ரசிக்கவும் வாய்ப்பு உண்டானது.

யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் கற்ற முஸ்லீம் பிரமுகரான அசீஸ் என்பவர் தம் மாணவப் பருவத்தை நினைவு கூருகையில் "மாசில் வீணையும்" என்னும் தேவாரப் பொருளையும் சிவபுராணக் கருத்துக்களையும் தான் சிந்தித்து மகிழும் வழக்கம் தனக்கு வைத்தீஸ்வர வித்தியாலயக் கல்வியால் கிடைத்தது என அங்கு நிகழ்ந்த விழாவொன்றில் கலந்துகொண்டபோது தெரிவித்தார்.

ஆனால் இன்று சைவமக்கள் நிலை என்ன? மிகப் பெரும்பாலானவர்க்குச் சிவபுராணம் நல்ல பாடம். ஆனால் அதிலுள்ள மாணிக்கவாசகக் கருத்துக்களை அவர்கள்

அறிவார்களா? அரிய சிவபுராணம் முயற்சியில்லாமலே தமக்குச் சொந்தமானதுபற்றி மகிழ்கின்றார்களா? என்றால் மகிழ்ச்சியடைவதற்கு உரிய பதில் கிடையாது. கோழி குப்பையைக் கிளறும்போது மாணிக்கக் கற்களைக் கண்டால் அதனையும் குப்பையால் மறைத்துவிட்டுப் புழுக்களைத் தேடுவது போல மாணிக்கவாசகங்கள் நிறைந்த மனப்பாடமான சிவபுராணத்தால் மனத்தூய்மையும் சிவனருளும் பெறுவதை விட்டு வீண்பொழுது போக்கி மகிழவெனப் பெருஞ்செலவு புரிகின்றனர்.

இந்நிலையில் பாடசாலை நிர்வாகிகள் சிலர் வெள்ளிக்கிழமைகளில் சிவபுராணம் படிப்பதால் அதிகநேரம் செலவாகின்றது - எனவே அதைத் தவிர்க்கவேண்டும் எனக் கருதவும் செயற்படவும் ஆரம்பிக்கின்றனர். பாடசாலைகளில் வெள்ளிக்கிழமைகளில் சிவபுராணம் படிப்பது பலருக்கு அநியாயமாகப் படுகின்றது.

நடுநிலையில் நின்று இதனைப்பற்றிச் சிந்தித்தால் சிவபுராணம் படிப்பது நல்லதா? விடுவது நல்லதா? என்று தீர்மானம் செய்ய இயலாதுள்ளது. மிகப்பெரும் பயனைத் தரத்தக்க செயல் உரிய பயனைத் தராமல் உள்ளது என்பது ஒரு புறம். யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்த திருவருட்பயனான யோக சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்டதும் உச்ச எல்லையான பயனைத் தரத்தக்கதுமான அருஞ் செயல் தடுத்து நிறுத்தப்படுகின்றதே என்பது ஒருபுறமாகவுள்ளது.

"பன்றிக்கு முன் முத்துக்களை வைக்கலாகாது" என்ற உண்மைக்கு ஏற்ப சிவபுராணம் ஓதுதலை நிறுத்துவது சரியா அல்லது அரும்பெறல் ஆக்கத்துக்கு வழி செய்யக்கூடிய புனித செயலால் ஆயிரத்தில் ஒருவரோ இலட்சத்தில் ஒருவரோ பயன்பெற உதவவல்லதும் பாராயண நேரத்தில் அனைவரதும் நேரத்தையும் வாக்கையும் புனிதப்படுத்தவல்ல சிவபுராணம் ஓதுவது சரியா என்பதை பண்பின் அடிப்படையில் அறிவுமிக்க கல்விமான்களும் ஜனநாயக அடிப்படையில் நம் சைவ நன்மக்களும் ஒரு தீர்மானத்தை எடுப்பது அவசியம்.



உ




செல்வி இராசமலர் வல்லிபுரம் அவர்கள்

அழகு ஒரு தத்துவம் எங்கெல்லாம் அழகு பொலிகின்றதோ அங்கெல்லாம் இறைவன் உள்ளான். இயற்கை முழுவதிலும் அமைந்துள்ள அழகு நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாக உள்ளது. மனத்தில் மேலான எண்ணத்தை எழுப்புவதற்கு இத்தகைய அழகு பயன்படுகின்றது. உயர்ந்த எண்ணங்கள் மனத்தில் உதிப்பதற்கும் அழகிய இடங்கள் பெரிதும் பயன்பட்டு வந்துள்ளன. ஓர் இடத்தில் உதித்த உயர்ந்த எண்ணம் பிறகு இந்த இடத்திற்கே புதிய அருள் சக்தியை நல்கின்றது. உயர்ந்த எண்ணம் அழிவற்றது என்பதும் ஆன்றோர்கள் துணிவு. அவர்கள் எண்ணிய உயர்ந்த எண்ணங்களும் இயற்கையின் பொலிவும் ஒன்று சேர்ந்து ஓர் இடத்தைப் புண்ணிய தலமாக்குகின்றன. புண்ணிய தலத்திற்கு மூலமகிமையாக அமைவன ஆலயங்களே.

இவ்வாலயங்கள் பெரியசுற்று (பிரகாரம்) ஒன்று எடுத்து அதற்கு வாயில் ஒன்று அமைக்கப்பெறுகின்றது. அந்த வாயிலுக்கு மேலே உயர்ந்த கோபுரம் ஒன்று அமைகின்றது, அஃது உள்ளிருக்கும் கோபுரங்களை விட உயர்ந்ததாக இருப்பதால் இராசகோபுரம் என்று அழைக்கப்படுகின்றது. நெடுந் தொலைவில் இருந்தும் இதனைக் காணலாம். சில திருக்கோயில்களில் (மதுரை சொக்கலிங்கம் மீனாச்சி திருக்கோயில்) நான்கு திக்கிலும் நான்கு வாயில்கள் அமைத்து நான்கு இராசகோபுரங்கள் எழுப்பப்பெற்றுள்ளன. இராசகோபுரத்தை "தூல லிங்கம்" என்று குறிப்பிடுவதுமுண்டு. கண்ணுக்கு அது புலப்படும்பொழுது அதனையே தெய்வ சொரூபமாகக் கருதி வணங்குவது முறை. தொலைவில் இருப்பவர்க்கும் இறைவனைப்பற்றி நினைவூட்டுவதற்கே இந்த அமைப்பு ஏற்பட்டுள்ளது என்று கருதலாம். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற பழமொழியை நினைவு கூரலாம்.

இராசகோபுரத்திற்கு அருகில் வந்து அதன் அமைப்பை உற்றுநோக்கினால் அதிசயிக்கத்தக்க பல உண்மைகள் புலனாகும். கணக்கற்ற வடிவங்களை அங்கு காணலாம். விதம்விதமான வாழ்க்கை முறைகளை அவை விளக்குவனவாக அமைகின்றன. தேவர்கள், மனிதர்கள், விலங்குகள், பறவைகள், ஏனைய சிற்றுயிர்கள் அங்கு இடம்பெற்று இந்த அகிலத்திற்குக் குறியீடாக அமைகின்றது. வாழ்க்கையின் குறிக்கோளை விளக்குவதாகவும் இந்தக் கோபுரம் அமைந்துள்ளது. இராசகோபுரத்தின் வாயில்கள் பொதுவாக ஒற்றைப் படையில்தான்

அமைந்திருக்கும். இத்தகைய வாயில்கள் தத்துவத்திற்கு விளக்கமாகவும் அமைந் துள்ளன. மூன்று வாயில்கள் உள்ள கோபு ரம் சாக்கியம், சொப்பனம், சுழுத்தி என்று மூன்று அவத்தைகளைக் குறிக்கின்றது. ஐந்து வாயில்கள் உள்ள கோபுரம் ஐம்பொறி கட்குக் குறியீடாக அமைந்துள்ளது. ஏழு வாயில்கள் உள்ள கோபுரத்தில் மனம், புத்தி என்ற இரண்டும் சேர்க்கப்பெறுகின்றன. ஒன் பது உள்ள இடத்து சித்தம், அகங்காரம் என்னும் மேலும் இரண்டு தத்துவங்கள் சேர் கின்றன. இங்ஙனம் நமது உடல் அமைப்பில் உள்ள வெவ்வேறு தத்துவங்களிற்கு கோபுர வாயில்கள் சின்னங்களாக அமைந்துள்ளன என்பது ஈண்டு அறியப்படும். கீழ் குறிப்பிட்ட வாயில்கள்போக தரைமட்டத்தில் உள்ள ஒரு வாயில்தான் கோயிலினுள் செல்வதற்கு உதவுகின்றது. ஏனைய வாயில்கள் அமைக் கப்பெற்றிருந்தும் அவை ஆலயத்தினுள் புகு வதற்குப் பயன்படுவதில்லை.

இதன்மூலம் நமக்கு ஒரு கருத்து புகட்டப்பெறுகின்றது. புறக்கரணங்களும் அந்தக்கரணங்கள் பலவும் நம்மிடம் இருப் பினும் இறைவன் நாட்டம் கொள்ளும் பொழுது மனம் என்ற ஒரு கரணமே நமக்குப் பயன்படுகின்றது. ஏனைய கரணங்கள் எல் லாம் அவ்வவற்றின் நிலையிலேயே வைத்து விட்டு மனம் இறைவனைநாடி உள்முகமாக போகவேண்டும் என்பது கோட்பாடு. ஐம்புலன் களைக் கொண்டும் மனம், புத்தி முதலிய வற்றைக் கொண்டும் புறவுலகை அறிகின் றோம். புறவுலகை அறிகின்ற செயலை அப் படியே நிறுத்தி வைத்துவிட்டு மனத்தைத் துணையாகக் கொண்டு பரம்பொருளினிடத்து உள்முகமாகப் பயணம் போகவேண்டும் எனும் கோட்பாட்டை இராசகோபுர வாயினுள் செல்லும் நுழைவு விளக்கிக் காட்டுகின்றது.

இராசகோபுரத்தை அடுத்து நம் கண் ணில் விழுவது கொடிமரம், நந்தி, பலிபீடம். அதன் அருகில் சென்று வீழ்ந்து வணங்குதல் மரபு. வீழ்ந்து வணங்கும்போது மனிதன் தனது, "கீழான இயல்புகள் அனைத்தும் இந்த இடத்தில் பலிகொடுக்கப்படுகின்றன; இனி அவை தலை எடுப்பதற்கு வாய்ப்பும் இல்லை" என்று ஆழ்ந்து எண்ணுதல் வேண் டும், மேன்மையும் மேலான எண்ணமும் எஞ்சியுள்ள என்ற எண்ணத்துடன் எழுந்திருத் தல் வேண்டும். இந்த எண்ணத்தின் வலிவு அவன் புதியதொரு பிறவி எடுத்துக்கொண்ட தற்குச் சமனாகின்றது. புதிதாக வருவித்துக் கொண்டுள்ள மேலான மனப்பான்மையை இனி இந்தத் தெய்வத்திற்குரியதாக மாற்றி விடுதல் வேண்டும். திருக்கோயிலினுள் வலம் வருதல் இதன் குறியீடாக அமைந்ததொன்று.

பக்தன் வலம் வரவேண்டிய முறையை அடுத்த நிலையில் இருக்கும் கொடிக்கம்பம் விளக்குகின்றது. திருக்கோயிலைச் சுற்றி வலம்வரும்கால் உள்ளிருக்கும் இறைவன் தன் வலப்புறத்தில் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுகின்றான் பக்தன். இதுவே "வலம் வருங்கால்' என்பதன் பொருள். இது பிரா ணாயாமத்தின் சின்னமுமாகும். ஒழுங்குபட்ட மேலான மனம் பிராணாயாமத்திற்குத் தகுதி யுடையதாகின்றது. மனத்தகத்து உண்டாகும் மாறுதலுக்கு ஏற்ப சுவாசிக்கின்ற காற்றில் வேறுபாடு உண்டாகின்றது. கீழான மனப் பான்மை உடையவருக்கு சுவாசத்தின் போக்கு வரவு அல்லது பிராணாயாமம் முறையாக நிற்கின்றது. தங்கு தடையின்றி அமைதியாக வலம்வரும்போது பிராணாயாமமும் ஒழுங் காக நிகழ்ந்துவிடுகின்றது. சூக்குமமாக உட லின்கண் நிகழும் நிகழ்ச்சி பிராணாயாமம் என்பதும், வலம்வருதல் என்னும் உடலின் தூலமான செயல் அதன்புறச் சின்னமாக அமைந்து விடுகின்றது என்பதும் தெரிந்து தெளியத்தக்கவை.

**சிக்கனமாக இருப்பது ஒரு தலைசிறந்த அறச்செயல்.**

கொடிமரத்திற்கு அடுத்த நிலையில் இருப்பது இறைவனது வாகனமாகிய நந்தி யெம்பெருமான். வாகனம் எதுவாகினும் அது சீவான்மாவை குறிக்கின்றது. மூலப்பொரு ளாகிய இறைவனை நோக்கியே வாகனம் அமைந்திருக்கும். பதியை அடையவேண்டி யது பசுவின் குறிக்கோள். பதியைச் சென் றடைவதற்கு எக்காலத்திலும் இறைவன் நாட் டத்திலேயே இருத்தல் வேண்டும் எனும் கோட்பாட்டை வாகனம் விளக்கிக்கொண் டுள்ளது. திருச்சுற்றில் நடந்து வரும் பக்தன் திருக்கோயிலில் உள்ளிருக்கும் இறைவனை யும் அவனைப் பார்த்தவண்ணம் இருக்கும் வாகனத்தையும் சேர்த்து வைத்தே வலம் வருகின்றான். குறுக்கே நுழைவது முறை யன்று. வழிபடுகின்ற அனைவர்க்கும் இடைஞ் சலாக இராமல் உதவிசெய்ய வேண்டும் என்பது இதன் உட்கருத்து. பிறர் வழிபாட் டுக்கு இடையூறு விளைவிப்பவன் இறை வழிபாட்டிற்குப் புறம்பாய் விடுகின்றான். பக்தன் பிறர் வழிபாட்டிற்கு வேண்டிய வசதி கள் செய்பவன், ஆலய வழிபாட்டில் முன் னேற்றம் அடைகின்றான். இவை கருத்தில் இருக்கவேண்டியவை.

கோயிலின் கருவறை இருள் சூழ்ந் துள்ளது. காற்றிற்கும் கதிரவன் ஒளிக்கும் இங்கு இடமில்லை. இவற்றிற்கெல்லாம் ஆகமவிதிகள் இடம் தருவதில்லை என்பர் கோயிலை நிறுவும் ஸ்தபதிகள். நமது உடலமைப்பின் புறச்சின்னமாக அமைந்துள் ளது கருவறை. கருவி கரணங்களை ஒடுக்கி மனத்தை உள்முகமாகத் திருப்பினால் உண் டாகும் அனுபவத்திற்கு சின்னமாக அமைந்து உள்ளது கருவறையாகும். கண்மூடி இருக்கும்பொழுது உடலுக்குள்ளே இருக் கும் நம் நெஞ்சத்துள் காணப்படுவது ஒரே இருள்மயம். புற உலகில் இருந்து ஆன்ம ஒளி வருவதில்லை. தரிசனத்திற்காக பக்தன் திருக்கோயிலில் காண்பவை; முதலில் திரை மூடப்பெறுகின்றது. சிறிது நேரத்தில் மணி ஒலி நம் செவியிற்படுகின்றது. விரைவில் தரிசனம் கிட்டும் என்று பக்தன் ஆர்வத்துடன் எதிர்நோக்கியுள்ளான். திரை நீங்குகின்றது. உள்ளே கர்ப்பூர ஆராதனை காட்டப்பெறு கின்றது. அதன் ஒளியில் பக்தன் தெய்வத் தின் திருமேனியைக் காண்கின்றான். விக்கிர கம் என்ற எண்ணம் அவன் மனத்தில் எழுவ தில்லை. இறைவனையே தரிசிப்பதாக உணர் கின்றான். ஒலி ஒளி ஆகிய இரண்டும் மனத் தில் உதிப்பது சாதகன் தன் சாதனையில் முன்னேறி வருவதன் அறிகுறியாகும். இறுதி யில் மனத்தின் அஞ்ஞானத் திரை நீங்கு வதை அறிகின்றான். ஞான ஒளியின் தரி சனம் கிட்டுவதை உணர்கின்றான். அந்த ஞானமும் ஆன்மசொரூபமும் ஒன்றேயாகும்.

இங்ஙனம் மனத்தகத்து உண்டாகின்ற ஆன்ம தரிசனத்திற்குப் புறச்சின்னமாக அமைந்திருப்பதே இந்த ஆலய தரிசனம். மனிதருக்குத்தக்கவாறு அதை மாற்றி அமைப்பதற்கு ஆகம சாஸ்திரம் இடம் தருவதில்லை. இவ்வாலய வழிபாட்டுக்கு எமக்கு வழி அமைத்துக் கொடுக்கும் நூல்களே சிவாகமங்களாகும்.

சிவாகமங்கள் வகுத்துக்கூறும் கிரியை மரபில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் கும்பாபிடேகமாகிய பிர திஷ்டையை அடுத்து மிக உன்னத இடத் தைப் பெறுவது மகோற்சவமாகும். ஆலயங் களிலேயே வருடம்தோறும் நிகழும் "பெரு விழா'' என குறிப்பிடலாம். இவ்விழா வழிபடுவோர் உள்ளங்களிலேயே பக்தி உணர்வை மேன்மையுறச் செய்யும் சிறப்பு வாய்ந்தது. இவ் உற்சவம் இறைவனது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல்,

அருளல் ஆகிய ஐந்தொழில்களின் தத்துவத்தை உள்ளடக்கியுள்ளது. மகோற்சவத்தின் சிறப்பிற்குரிய இரதோற்சவம் சங்காரத் தொழிலை உணர்த்துவதாகும். இது பஞ்ச கிருத்தியங்களில் உயர்ந்தது. தீயவற்றை மாய்த்து நல்லவற்றை நிலைபெறச்செய்வது இறைவனின் கருணை விளையாட்டாகும். மும்மலங்களை அடக்கித் திருவருள் வெளிப்பாட்டை மேலெழச் செய்யும் நிலை சங்காரத் தொழிலுக்குண்டு.

"முப்புரம் செற்றனர் என்பர்கள் மூடர்கள்"
"முப்புரம் என்பது மும்மலகாரியம்"

என்பது திருமந்திரம். இறைவன் சங்காரமூர்த்தியாக இரதத்திலிருந்து திரிபுர சங்காரம் செய்து தீயவற்றை அழித்துவிட்டு சாந்த மூர்த்தியாக இருப்பிடத்தை அடைகின்ற காட்சி தேர்த்திருவிழாவிலன்று நாம் காணும் தெய்வீகக் காட்சியாகும். தேரானது நிற்கும்போதும் இறைவனது திருமேனியைத் தாங்கி ஆலய வீதியில் அசைந்தாடிச் செல்லும் போதும் அதன் நிகரற்ற கம்பீரமான தோற்றம் மக்கள் மனதை விட்டகலாது. "ஊர் கூடித் தேர் இழுத்தல்" என்ற முதுமொழிக்கேற்ப அனைத்து மக்களும் எத்தகைய வேறுபாடுமின்றி வடம் தொட்டுத் தேர் இழுப்பது ஓர் உன்னதமான காட்சியாகும். தேர் இருப்பில் இருந்து புறப்பட்டு மீண்டும் எத்தகைய இடையூறுமின்றி இருப்பிடத்திற்கு வந்துவிட்டால் "அரோகரா" கோசமிட்டு தமது மகிழ்ச்சியையும் பக்தி உணர்வையும் வெளிப்படுத்துவர். அந்தளவிற்கு இவ்விழா புனிதத்துவம் உடையதொன்றாக விளங்கி வருகின்றது. வேதங்களில் ஒன்றெனச் சிறப்புப் பெறும் யசுர் வேதத்தில் நடுமத்தியாகிய நாலாவது காண்டத்தில் காணப்படும் ஸ்ரீ ருத்திரத்தில் தேர் பற்றிய விரிவான குறிப்புக்கள் இடம்பெறுகின்றன.

ஆலயவழிபாட்டிற்குச் செல்லும் பக்தன் மனம் மெய் ஆகிய திரிகரண சுத்தியுடன் ஆலயத்துக்குப் போகவேண்டும் என்பது கோட்பாடு. ஆலயத்துக்குள் நுழையும்பொழுதே உலகவிவகாரங்களை ஒதுக்கி வைத்துவிடவேண்டும். இறைவனைப் பற்றிய சிந்தனையே சித்தமிசை குடிகொண்டிருக்கச் செய்துகொள்ள வேண்டும். பதை பதைப்பு, கேலி, வேகம் நிறைந்த நடமாட்டம் முதலானவற்றிற்கு அங்கு இடமில்லை. அமைதியும் சாந்தமும் வடிவெடுத்தனவாக வழிபடுபவனாக ஆகிவிடுகின்றான். திருக்கோவிலுக்குள் கூச்சலிட்டுப்பேசுவோர் வழிபடுபவர் ஆகார். இவர்கள் திருக்கோயிலின் புனிதத்தன்மையையும் ஒருவகையில் பாழ்படுத்துகின்றனர். ஒருவரோடு ஒருவர் பேசாதிருந்து வழிபாடு முடிந்த பிறகு ஓரிடத்தில் அமைதியாக அமர்ந்திருந்து தியானம் செய்வது முற்றிலும் இன்றியமையாதது. பல பெரியோர்கள் ஆழ்ந்து எண்ணிய எண்ணங்கள் நிறையப்பெற்ற இடம் ஆலயம். அதனை வழிபடுபவன் அமைதியுற்று அமர்ந்திருப்பானாயின் அந்த உயர்ந்த எண்ணங்கள் அவன் மனதில் பிரதிபலிக்கும். அதுவே ஆலய வழிபாட்டினால் அவன் அடையும் பெரும்பேறாகும். எத்தனை பேர் ஆலயத்துக்குள் வந்து வணங்குகிறார்களோ அதற்கேற்ப ஆலயத்தினுள் ஏற்கனவே அமைந்துள்ள அருள் பன்மடங்கு பெரிதாகின்றது. அருளைத் தானே அடைவதன் மூலம் ஆலயத்தின்கண் அன்பன் அதனைப்பெறுகின்றான்; பெருக்குகின்றான். ஆலய வழிபாட்டின் ஒப்பற்ற பயன் இதுவேயாகும். எனவே நாம் அனைவரும் ஆலய வழிபாட்டின் ஒப்பற்ற பயனைப் பெற்று (உய்வோமாக) இன்புறுவோமாக.

**மதுவும் மாதுவும் தீமையின் அடிப்படை.**

உ

(தொடர்ச்சி...

# கந்தனே கலியுகத் தெய்வம்



**கே. வி. குணசேகரம்** அவர்கள்

திராவிட மக்கள் வாழ்ந்த சிந்து வெளிச் சமவெளியில் நிலவிய கடவுள் வணக்கம் ஆரியர் வருகையின்பின் மாறுபட்ட போதும் அதன்பின் அவ்வணக்கம் ஆரம்பித்து இன்றுவரை நடைமுறையில் உள்ளதென்று கூறலாம். சிந்துவெளியில் இருந்த சிவ வழிபாடு, பெண் தெய்வ வழிபாடு, மரங்களை வணங்கல், நாகத்தை வணங்கல், மாதா, பிதா குருவை வணங்கல், பூமியையும், ஆறு களையும் வணங்கல், அக்னியை வணங்கல், அரசனை வணங்கல், சூரியனை வணங்கல், மும்மூர்த்திகளை வணங்கல் போன்றவை இன்றும் இருப்பதைக் காண்கிறோம்.

இன்றைய வழிபாட்டு முறைகளைச் சங்ககாலத்திலும் காணக்கூடியதாக இருக் கிறது. சங்ககால மக்கள் நிலத்தை ஐந்து வகையாக வகுத்து ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு கடவுளையும் அவர்களது கலாச் சாரத்தையும் வகுத்தனர்.

குறிஞ்சி நிலத்தெய்வமாக முருகன் வணங்கப்பட்டான் குறிஞ்சி நிலத்தில் வாழும் உயர்ந்தவர்களை பொருப்பன், வெற்பன், சிலம்பன், தாழ்ந்தோரைக் குறவர், கானவர் என்றும் வகுத்தனர். குறிஞ்சி நிலப் பறவை களாக கிளியும், மயிலும் இருந்தது. விலங்குகளாக புலி, கரடி, யானை, சிங்கம் போன்ற மிருகங்கள் இருந்தன. ஊரைச் சிறுகுடி என்றும், நீர் நிலைகளை அருவி, சுனை என்றும் அழைத்தனர். குறிஞ்சி நிலத் திற்குரிய மலர்களாக வேங்கைப்பூ, குறிஞ் சிப்பூ, காந்தள்ப்பூ என்பன இருந்தன. குறிஞ்சி நிலத்தில் சந்தனம், தேக்கு, அகில், அனேகு, நாகம், மூங்கில் போன்ற மரங்கள் வளர்ந்தன. அவர்களது இசைக்கருவிகளாக தொண்டகப் பறையும், குறிஞ்சி யாழும் இருந்தன. அவர் கள் மலை நெல், மூங்கில் அரிசி, தினை என்பவற்றை உணவாக உண்டனர். மலை நெல்விதைத்தல், தினை காத்தல், தேன் எடுத்தல், கிழங்கு வகைகளைத் தோண்டி எடுத்தல் என்பனவே குறிஞ்சி நில மக்களின் தொழில்களாகும். அருவியில் நீராடல், சுனை யில் நீராடல், வேட்டையாடல் என்பன அவர் களது பொழுதுபோக்குகளாகும்.

பாலைநிலம் வளம் குறைந்தது. அதன் தெய்வமாகத் துர்க்கை போற்றப் பட்டாள். முல்லை நிலத் தெய்வமாக திரு மால் வணங்கப்பட்டார். மருத நிலத் தெய்வ மாக இந்திரன் வணங்கப்பட்டான். நெய்தல்

செல்வத்தைவிட மேலானது செல்வாக்கு.

நிலத் தெய்வமாக வருணன் வணங்கப் பட்டான். காலப்போக்கில் ஐந்து நில மக்களும் கலியுகத் தெய்வமான முருகனின் பெருமையை உணர்ந்து முருகனை முழு முதற் கடவுளாக ஏற்று வணங்க ஆரம் பித்தனர்.

குறிஞ்சி நிலம் காடும் மலையும் சார்ந்த வளமான நிலமாகும். அங்கு வாழ்ந்த மக்களுக்கு வேண்டிய உணவுவகை களைக் காடு அவர்களுக்கு இனாமாக வழங் கியது. காட்டில் உள்ள மரங்களில் எப் போதும் கனிகள் இருக்கும். நிலத்தில் கிழங்குகள் இருக்கும். மரங்களில் தேன் இருக்கும். காட்டில் உள்ள மிருகங்களை எவ்வேளையிலும் வேட்டையாடி உண்ணக் கூடிய நிலை அங்கு வாழும் மக்களுக்கு இருந்தது. அதனால் அவர்கள் தொழில் செய்யாமலே உணவைப் பெற்று உண்டு மகிழ்ந்து வாழ்ந்தனர். அதனால் அவர் களுக்குப் பொழுதுபோக்கிற்கு அதிகளவு நேரம் இருந்தது. குன்றுகள்தோறும் குமரன் இருப்பான் என்று தொல்காப்பியமும் சங்க கால நூல்களும் கூறுகின்றன. குறிஞ்சி நிலம் குன்றுகளால் ஆனதால் ஒவ்வொரு குன்றும் குமரக் கடவுளின் கோட்டமாகவே விளங் கியது. குறிஞ்சி நில மக்கள் தினை விதைப்பர். முற்றிய தினைக் கதிர்களைக் குருவிகள் தின்னாவண்ணம் காவல் காப்பர். தினை மாவும் தேனும் விட்டுக் குழைத்து அதை ஒரு விளக்காக்கி பசுநெய்யிட்டுக் கொழுத்திச் சுட்டு தமது குலதெய்வமான முருகனுக்குப் படைத்துவிட்டு உண்பதைக் குறிஞ்சிநில மக்கள் வழக்கமாகக் கொண் டிருந்தனர்.

குறிஞ்சி நிலத்தின் மருகனான முருகனை அங்கு வாழும் மக்கள் தமது குடும்ப உறுப்பினனாகவே நினைத்து வணங் கினர். குறிஞ்சி நிலத்தில் தினைக்குக் காவல் காத்த வள்ளிமீது முருகன் காதல் வசப்பட்டு அவளைப் பல திருவிளையாடல்கள் புரிந்து மணந்தமையால் அந்நில மக்கள் முரு கனைக் காவல் தெய்வமாகவும் காதல் தெய்வமாகவும் நினைத்தனர். குறிஞ்சி நிலப் புலவர்கள் காதலின் தன்மையை மிகவும் சுவையாகப் பாடியுள்ளனர். இச்சுவையான கவிதைகள் நற்றினை, குறுந்தொகை என்ற நூல்களில் காணப்படுகின்றன.

இறையனார் என்ற புலவர் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த பெண்ணின் கூந்தலில் உண்டான நறுமணத்தை முகர்ந்து சொக் கிய தலைவனின் கூற்றாகப் பாடும் பாடல் குறுந்தொகை என்ற நூலில் முதலாவது கவிதையாக உள்ளது.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீ இயநட்பின், மயில் இயல்
செறிஎயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ? நீ அறியும் பூவே"

உனது கூந்தலின் அழகை என்னால் வர்ணிக்க முடியவில்லை. அதன் சுகந்த மணம் என் உயிரை வதைக்கிறது. "ஏ வண்டே, நீதான் பூமியில் உள்ள எல்லாப் பூக்களிலும் மொய்த்துத் தேனை உறிஞ் சுவாய். உண்மையைச் சொல். எனக்காகச் சொல்லாதே. மலர்களைத் தழுவி முகர்ந்து முத்தமிட்டு அவை நோகாவண்ணம் தேனை நீ எடுப்பதால் கேட்கிறேன் மயில் போன்ற சாயலையும் முல்லைப் பூக்களைப் போன்ற

பற்களையும் உடைய எனது காதலியின் கூந்தலில் உள்ள நறுமணத்தை விடச் சிறந்த நறுமணம் உடைய மலர்கள் எதுவும் உண்டா. பக்கம் சாராது நடுநிலை நின்று சொல்." இவ்வாறு குறுந்தொகையில் உள்ள பாடல் சொல்கிறது. இப்பாடலால் பெரும் திருவிளையாடல் ஒன்று நிகழ்த் தப்பட்டது எல்லோருக்கும் தெரியும். குறுந்தொகை என்ற நூலில் குறிஞ்சி நிலத்தின் காதற் சிறப்பை வலியுறுத்தும் பாடல்கள் 147இல் உண்டு. அதில் உள்ள இன்னொரு பாடலை அடுத்த சுடரினிற் பார்ப்போம்.

(தொடரும்...

# இறைவனை வணங்கித் திரும்பும்முன் ஏன் தீர்த்தம் அருந்த வேண்டும்



கோயில் தொழுது விட்டுத் திரும்பிவரும்முன் தீர்த்தம் வாங்க வேண்டும் என்றும் அதன்பின் பிரசாதம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுவதுண்டு.

தெய்வ அம்சத்தை மந்திர ஒலியுடன் அபிஷேகம் செய்தெடுத்த நீரே தீர்த்தமாக பக்தர்களுக்கு வழங்குவது. நம்பிக்கை மற்றும் சாஸ்த்திரத்தின் இரண்டு குணங்களும் அடங்கியதே தீர்த்தம். வேத விக்கிரகத்தின் ஸ்பரிசத்தாலும் மந்திர ஒலிகளாலும் புனிதமாக்கப்பட்ட பரிசுத்தம் முதலாவது குணம். துளசி முதலிய மூலிகைகளின் மருத்துவ-குணங்களே இரண்டாவது.

வலது கையின் ஐந்து விரலும் மடங்கும்போது உண்டாகும் கைக்குழியில் தீர்த்தம் வாங்கவேண்டும் என்பது விதி. கைக்குழியை அப்படியே உயர்த்திப்பிடித்து கையில் உயர்ந்து காணப்படும் சந்திர மண்டலத்துக்கும் சுக்கிர மண்டலத்துக்கும் மத்தியிலுள்ள இடுக்கு வாயிலாக தீர்த்தம் அருந்த வேண்டும்.

இவ்வாறு தீர்த்தம் அருந்துவதனால் நன்மைகள் பல என்பதை மேநாட்டு ஆராய்ச்சிகளும் ஒப்புக்கொண்டுள்ளன. தீர்த்தங்களில் சேர்க்கும் துளசி, குவளை, தாமரை, மந்தாரை, தெற்றி, மஞ்சள் என்பவையின் மருத்துவ குணங்கள் முக்கியமாக இரத்த ஓட்டம் உணர்வடைகின்றது. இரத்தத்திலுள்ள அசுத்தங்களை அகற்றி உடலை சுத்திகரிக்கின்றது.

இந்துமத ஆசாரத்தில் தீர்த்தம் அருந்துவதின் அவசியத்தைப்பற்றி விளக்கமுண்டு. பொதுவாக உதடுகளில் உமிழ்நீரில்லாவிட்டாலும் வாய்க்குள் உமிழ்நீர் இருக்கும். வாய்க்குள் நாவின் அசைவின் விளைவாக உதடுகளும் எச்சிலாக மாறும். அதனால் உதடுகள் வாய்க்குள் செலுத்திவிட்டு தீர்த்தம் அருந்த வேண்டும். இரு உதடுகளும் தொடுவதைத் தவிர்க்க வேண்டும். அருந்திய தீர்த்த ஜலத்தின் மிச்சமாக உள்ளங்கையிலிருப்பதை தலையிலும், முகத்திலும், உடலிலும் தெளிக்க வேண்டும். வாங்கிய தீர்த்தத்தில் ஒரு துளிகூட தரையில் விழச்செய்யலாகாது.

**திறமைதான் ஏழையின் நிரந்தரச் சொத்து.**

உ

# சைவ ஆலயத்திற்கு அருங்கலம் பூந்தோட்டம்

**பு. கதிரித்தம்பி அவர்கள்**

பண்டும், இன்றும், என்றும் உள்ள பொருளாகிய சிவபெருமான் மானுடப்பிறவி எடுத்த மனிதனுக்கு அருள் புரியும் இடமாக விளங்குவது ஆலயம் ஆகும். மனிதன் நாடொறும் ஆலயம் சென்று வழிபட்டு மலம் நீங்கி வீடுபேறடைவான் என்று வேதங்கள் கூறுகின்றன. தேவர்கள் காணமுடியாத இறைவனை, மானுடப்பிறவி எடுத்த நாயன் மார்களும் சித்தர்களும், அடியார்களும் காண்கின்றார் என்பதை புராணங்கள் கூறு கின்றன. நாடொறும் நடைபெறுகின்ற பூசை களுக்கு பூக்கள் அவசியம் தேவைப்படு கின்றன. ஆலயத்தில் வேண்டிய நேரம் வேண்டிய பூசைகள் செய்வதற்கு அருகில் பூந்தோட்டம் இருத்தல் அவசியமாகின்றது. எனவே ஆலயத்திற்கு அருங்கலம் பூந் தோட்டம் என்று கூறுதல் மிகையாகாது.

எமது நாட்டில் ஆறுகாலப்பூசை நடைபெறுகின்ற சிவன் ஆலயங்களும், முருகன் ஆலயங்களும் உள்ளன. இவற் றைவிட ஒரு காலப்பூசை, இருகாலப்பூசை, மூன்றுகாலப்பூசை நடைபெறுகின்ற ஆலயங்கள் அதிகம். திருநாவுக்கரசு நாய னார் கூறியதுபோல அரிய பிறவியெடுத்த மனிதன் ஆசாரசீலராக தினசரி கோவிலுக் குச் சென்று பணிசெய்ய வேண்டும். அப்பர் பின்வரும் பாடல்மூலம் மனிதன் கோவிலில் செய்யும் பணியை விளக்குகின்றார்.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே"

அப்பர் சுவாமிகள் "பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி" என்று பூமாலை, பாமாலை இரண்டினாலும் இறை வனை வழிபடலாமென்று காட்டியுள்ளார். பூமாலை நாடொறும் புனைந்து இறை வனுக்குக் கொடுத்து வந்த அம்மையார் செட்டிச்சி அம்மையார் ஆவர். இவர் கோவி லுக்கு மாலை கொண்டு சென்று, ஆற்றுப் பெருக்கால் திரும்பி வரமுடியாத நிலையில் மகளின் பிரசவத்திற்கு இறைவன் செட்டிச்சி அம்மையார் உருவில் நின்று கடமை செய் ததை நினைக்கும்போது புல்லரிக்கின்றது.

**ஆற்றல் உள்ள இடத்தில் அகம்பாவமும் இருக்கும்.**

மாலை தொடுக்கும் மலர்கள் புனிதம் உடையனவாக இருக்கவேண்டுமென்று சைவத்தை அழியாது காத்த பெருங்குரவர் கூறுகின்றார். ஐந்தாம் குரவரெனப் போற்றப் பட்ட ஆறுமுகநாவலர் அவர்கள் மரம் செடி கொடி மரங்களை இடுகாடு சுடுகாடு இல்லா நிலமாகவும், பசுச்சாணி இடு பசளை யாகவும், புனித நீர் பாய்ச்ச வேண்டுமென் றும், ஆசாரமில்லாதவர்கள் பூந்தோட்டம் செல்லவோ, பூப்பறிக்கவோ வேண்டத்தக்க வரல்ல என்று "சைவவினாவிடை" என்னும் நூலில் கூறியுள்ளார். அதுமட்டுமன்றி இறை வனுக்குகந்த நறைகொண்ட மலர்களை திருவைந்தெழுத்தை ஓதிக்கொண்டு பறிக்க வேண்டுமென்று ஆணித்தரமாகக் கூறியுள் ளார். ஆறுமுகநாவலர் கூறிய முறைப்படி பூந்தோட்டம் ஆலயத்திற்கு அருகாமையில் அமையவேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டு கின்றது. எனவே ஆலயத்திற்கு அருங்கலம் "பூந்தோட்டம்" என்பதை சைவ அடியார்கள் நன்கு உணர்ந்துகொள்ளல் வேண்டும்.

சைவ ஆலயங்களுக்கு அருகாமை யில் பூந்தோட்டங்கள் அமைந்த கோவில் கள் ஒரு சிலவே என்று கூறலாம். இந்த வகையில் தொண்டைமானாறு ஆலயப் பூந் தோட்டம், நல்லூர் முருகன் ஆலயப் பூந் தோட்டம் அமைந்திருப்பதை சைவ அடியார்கள் அறிவார்கள். தொண்டை மானாறு முருகன் ஆலயப் பூந்தோட்டம் ஒரு நூற்றாண்டைக் கடந்தது என்று பூசகர் கள் கூறுகின்றார்கள். இந்தப் பூந்தோட்டத் தில் 1951ஆம் ஆண்டு (அப்பொழுது வயது 16) எமது ஊரவர்களுடன் சேர்ந்து பூந் தோட்டம் கொத்தச் சென்றேன். அங்கு பூசகர் துரைஐயா அவர்கள் எம்மை வர வேற்று பூங்கொல்லைப் பயிர்களுக்கு பசுச் சாணி இட்டு கொத்தச் சொன்னார்கள். எங் களுக்கு தையல் அம்மா சமைத்தார்கள். வேலை முடிந்ததும் தையல் அம்மா மடத் தில் உணவு உண்ண வரிசையாக அமர்ந் தோம். அம்மா இன்முகத்துடன் உணவு படைத்தார். இலை நிறைய சாதம் இருந் தது. நாங்கள் சாப்பிடும்போது, அம்மா, "நீங்கள் வெட்கப்படவேண்டாம்" என்று சொல்லி இரண்டாம் முறையும் உணவு படைத்தார். நாங்களும் அளவுமிஞ்சிய உணவை சுவையாக உண்டு, இன்று இரவு உணவு தேவையில்லை என்று கதைத்துக் கொண்டோம். உணவு உண்டபின் அம்மா வுக்கு நன்றியைத் தெரிவித்து, முருகனை முகப்பில் நின்று வழிபட்டு, எமது ஊருக்கு பரவைக் கடலூடாகப் புறப்பட்டோம். என்ன ஆச்சரியம், என்ன அற்புதம் கரையைக் கடந்ததும் பசி வயிற்றைக் கிள்ளியது. ஓடிச்சென்று வீட்டில் உணவு உண்டோம். இந்நிகழ்வுகளை இன்றும் நினைக்கும்போது முருகனின் திருவிளையாடலையும், அற் புதங்களையும் காண ஆலயம் இழுக்கின் றது. இன்று பூஞ்சோலை முன்பிருந்த பொலிவு குறைந்து இருப்பதைக் கண்டு மனம் வருந்துகின்றது. சந்நிதி முருகனின் பூஞ்சோலை திரும்பவும் பழைய நிலையை அடையுமென நம்புகின்றேன். அப்பர் கூறியதுபோல்,

"பூவினுக் கருங்கலம் பொங்குதாமரை
ஆவினுக்கருங்கலம் அரனைஞ்சாடுதல்
கோவிலுக்கருங்கலம் கோட்டமில்லது
நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே"

"கோயிலுக்கருங்கலம் பூந்தோட்டம்" நாவலர் வகுத்த பிரமாணங்களுக்கு அமைந்து நெறிப்பட்டு நிற்கின்றது.

உ

(தொடர்ச்சி...

# வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ



திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

செந்தில் குமரன் மகாவரப்பிரசாதி. கண் கண்ட தெய்வம் நல்லவர்களுக்கு வரும் துன்பத்தைப் போக்குபவன். ஐந்து வயது வரையும் வாய்திறந்து பேச வகை தெரியாது வாயில்லாப் பாலகனாக இருந்த குமரகுருபர சுவாமிகளின் திருவாக்கைத் திறந்து கந்தர் கலிவெண்பாவும், பிள்ளைத் தமிழும், ஏனைய பிரபந்தங்களும் கேட்க செந்தில்நாதன் வாயூறி நின்ற திருவிளை யாடலைப் பார்ப்போம்.

17ஆம் நூற்றாண்டில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஸ்ரீ வைகுண்டத்தில் சண்முகசிகாமணிக் கவிராயருக்கும், சிவ காமியம்மைக்கும் செந்தில்வேலன் அருளால் பிறந்தவர் குமரகுருபர சுவாமிகள். ஐந்து வயது நிரம்பியும் குழந்தை பேசாமல் இருந்தது. பெற்றோர் தவித்தனர். திருச் செந்தூர் முருகனிடம் சென்று தங்கள் குறை யைச் சொல்லி அழுது புலம்பி முருகன் சந்நிதியே கதியென்று கிடந்தனர். பிள்ளை வரம் தந்த கந்தவேள் பிள்ளையின் குரலமு தம் கேட்க வழியின்றிச் செய்து விட்டான். பிள்ளை பேசினால்த்தான் நாங்கள் உயிர் வாழ்வோம் என அழுது தொழுதனர். பால கன் ஏதும் உணராதவனாக கோயில் மண்ட பத்தில் ஓடிவிளையாடினான். அடுத்த நாள் காலையில் மூவரும் கடலில் மூழ்கிவிடு வதாகப் பெற்றோர் கெடு வைத்திருந்தனர். உண்ணா நோன்பிருந்த அசதியுடன் இரவு முருகநாம ஜெபம் செய்தபடி பிரகாரத்தில் படுத்திருந்தனர். குழந்தை நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான். செந்தில்நாதன் இனியும் சோதனையை இந்தப் பக்தர்கள் தாங்க மாட்டார்களென்று கருவறையை விட்டு வெளியே வந்தான்.

முழுமதியன்ன ஆறுமுகங்களும், பன்னிரு விழிகளிலே கருணைவழிய அழகன் முருகன் வேலோடு நடந்தான். உறங்கிக் கொண்டிருந்த பாலகனை நெருங்கினான், தண்டபாணித் தெய்வத்தின் தண்ணருள் கமலப் பாதங்களில் ஒலித்த சதங்கையின் சங்கீத ஒலிகேட்டு உலக உயிர்களெல்லாம் மோனத்தில் ஆழ்ந்திருக்க பாலகன் மட்டும் கண் மலர்ந்தான். ஒளிபிரகாசத் திருமேனியின் அழகிலே குழந்தை மெய்மறந்த நிலையில் கிடந்தது. ஞானமும் வித்தையும் அருளும் நாயகன் பாலனைத் தொட்டு எழுப்பினான். "குமரா, குருபரனே! விழித்தெழுகு" அஞ் ஞான இருள் அகற்றி மெய்ஞான விழிப்பு நல்கும் அருட்குமரன், பாலனைத் தொட்ட துமே, மெய்விதிர்த்து எழுந்தான். குமரனின் கொவ்வைச் செவ்விதழ் குறுஞ்சிரிப் பினைக்கண்டு தானும் இளநகைபூத்தான். கோயிலில் வணங்கிய பெருமானைப்

கூட்டத்தின் பின்னே செல்பவன் தனக்குப் பின்னே கூட்டம் வரும் என எதிர்பார்ப்பது தவறு.

போலவே இருக்கும் இவர் யாரெனத் திகைத்து, வைத்த விழி வாங்காமற் பார்த்தான்.

மயக்கங்களைத் தீர்க்கவந்த மால் மருகன் பாலகனைப் பரிவுடன் நோக்கி, "வாய் திறந்து காட்டு" என்றதும் வாய் திறந் தான். நாவினிலே வேலால் ஆறெழுத்து மந்திரத்தை எழுதியருளினான் வேலவன். அக்கணமே ஞானமும், கல்வியும் பாலனை நாடிவந்தன. "தந்தையே, தாயே" என்று பாலகன் குரல் கொடுத்ததும் முருகன் மறைந்தான்.

அமுதகானம் கேட்டதுபோல பெற் றோர் விழித்தார்கள். "தந்தையே, தாயே" என்று மறுமுறை குழந்தை அழைக்கவும், தாயார் நம் செல்வன் பேசுகிறான். எல்லாம் குமரனின் அருள். சண்முகநாதனின் பன்னிரு விழிகளும் இவன்மீது கருணையைப் பொழிந்தனபோலும்" என்று தாய் கூறி மகிழ்ந்து மகனை மார்போடணைத்து ஆனந் தக்கண்ணீர் பெருக்கினாள். தந்தையாரும் மகனை மார்போடணைத்து முருகன் சந்நிதிக் குச் சென்று வணங்கினர். அப்போது பாலகன், "பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய, பாமேவு தெய்வப் பழமறையும்" என்று தொடங்கும் பிரபந்தத்தை அற்புதக் குரலிலே சண்முகப்பெருமானை நோக்கி கந்தர் கலி வெண்பா பாடினார். முருகப்பெருமானால் 'குமரா, குருபரா' என்றழைக்கப்பெற்றதால் 'குமரகுருபரர்' என்ற திருநாமம் பெற்றார். முருகன் அருளால் பேசாத குழந்தை பேசி யது! பேசியதா! முருகன் புகழ் பாடியது. பெற்றோருக்கு வியப்பும், திகைப்பும். நம் குழந்தைதானா கந்தவேளுடன் பேசுகிறது என்று பெருமிதமடைந்தனர். சிலகாலம் திருச்செந்தூரிலே தங்கியிருந்து முருகப் பெருமானை பாடலால் வழிபட்டு வந்தவர், பின்னர் செந்திலாண்டவன் அருளால் தலயாத்திரைக்காகப் புறப்பட்டார். அப்போது "குமர குருபரா, நீ யாத்திரை செல்லும்போது எந்த இடத்தில் உன் வாக்குத் தடைப் படுகிறதோ, அங்குள்ள மகானிடம் ஞான உபதேசம் பெற்றுக்கொள்" என்று அசரீரி எழுந்தது. இதைக்கேட்டதும் குமரகுருபரர் மகிழ்ச்சியடைந்தார். பெற்றோருடன் சொந்த ஊருக்கு வருகிறார். "கயிலைக் கலம்பகம்" எனும் நூலை இயற்றினார்.

பின்பு மதுரை நோக்கித் திருப்பரங் குன்றம் வந்தார். ஒருநாள் இரவு மதுரையை ஆண்ட திருமலைநாயக்க மன்னரின் கனவில் மீனாட்சியம்மை வந்து, "எனது இளையமகன் அருட்கடாட்சம் பெற்ற ஸ்ரீகுமரகுருபரர் திருப் பரங்குன்றத்தில் தங்கியிருக்கிறார். அந்தப் புலவர் பெருமானை உரிய மரியாதை களுடன் அழைத்துவந்து என் சந்நிதியில் அமர்த்தி பிள்ளைத் தமிழ்ப் பாமாலையை அரங்கேற்றம் செய்யச்சொல்" எனக்கூறி மறைந்தார். அதன்படி மன்னர் தன் பரிவாரங் களை அனுப்பி அவரை அழைத்துவரச் செய்து மதுரையம்பதியே அவரை வரவேற் றது போன்று மகர தோரணங்கள் அசைந் தாடின. உயர்ந்தோங்கிய கோபுர வாசலில் ஊர்கூடிநின்று வரவேற்றது. குருபரர் சிரம்மீது கரம் குவித்து அங்கயற்கண்ணியின் அணி மாடக் கோபுரத்தைத் தரிசித்து பரவச மடைந்தார். மன்னர் "வருக, வருக" என வர வேற்று, "தங்கள் திருப்பாதங்கள் இம்மண் ணில் பதிய நாங்கள் புண்ணியம் செய்தவர் களானோம். தங்களுடைய மீனாட்சி பிள்ளைத்தமிழை கோவிலில் அரங்கேற்றம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என விநயமுடன் மன்னர் தெரிவித்தார்.

அரங்கேற்றம் நிகழும்போது மின்னல் கொடிபோல் ஒரு பெண் குழந்தையாக மீனாட் சியே எழுந்தருளி மொத்தப் பாடல்களையும்

கேட்டு ரசித்து, தன் கழுத்தில் இருந்த முத்தாரத்தைக் கழற்றி குமரகுருபரருக்கு வழங்கி அருள்பாலித்து மறைந்து விட்டார். மன்னரும், மற்றையோரும் "வந்தது மீனாட்சி அம்மையே" என்று குமரகுருபரரின் தெய்வத் தீந்தமிழ்ப் பாடலுக்கு தாமே வந்து முன் நின்று கேட்ட தேவியின் தகைமையை வியந் தார்கள். தெய்வ அருள் பெற்ற குமரகுரு பரருக்கு தலயாத்திரை செல்ல பொற் சிவிகையும், பல ஏவலாளர்களையும், நிறைந்த பொன்னும் மன்னர் அளித்தார்.

அசரீரி சொன்ன ஞானாசாரியாரை அடையவேண்டுமென்பதற்காக தருமபுரம் வந்து, தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த ஞானக்கடலாக விளங்கிய ஸ்ரீமாசிலாமணி தேசிகஸ்வாமிகளைச் சந்தித்தார். அவர் கேட்ட வினாக்களுக்கு தங்குதடையின்றி விடையளித்து, பெரியபுராணத்தில் வரும் "ஐந்து பேரறிவும்" என்ற பாடலுக்கு விளக்கம் சொல்ல முற்பட்டபோது வாக்குத் தடைப் பட்டது. செந்தில் வேலவன் மொழிந்த சொல் சிந்தையில் நிறைய தேசிகரின் கால்களில் வீழ்ந்து, "என்னை நீங்கள்தான் ஆட்கொள்ள வேண்டும்" என்று தனது உடல், பொருள், ஆவி மூன்றையும் ஞானாசாரியாரிடம் ஒப் படைத்து உபதேசம் பெற்றார். தேசிகரின் கூற்றின்படி காடுமலைகளைக் கடந்து காசி யாத்திரை புறப்பட்டார். காசி செல்லும் வழி யில் திருவேங்கட மலையருகில் உள்ள மக்கள் குமரகுருபரரின் மகிமைபற்றி கேள் விப்பட்டு அவரைச் சந்தித்து தங்களுக்குத் துன்பந்தரும் காட்டுச் சிங்கத்தை அடக்கும் படி கேட்டனர். அவரும் தவவலிமையால் சிங்கத்தை அடக்கி, அதன் மீதமர்ந்து காசி நகரத்தை அடைந்தார். "காசிக்கலம்பகம்" பாடியவரின் கனவில் கந்தவேள் தோன்றி "எமது கோயிலைச் சீர்செய்க" என ஆணை யிட்டார். விழித்தெழுந்த அடிகள் பன்னிருகை வேலன் எங்குள்ளான் என்று தேடி அலைந் தார். அப்போது "இங்குள்ளோம்" என்ற குரல்கேட்டு அத்திசை நோக்கி ஓடினார். அங்கே காடு மண்டிக் கிடக்க, மண்ணில் புதையுண்டு கிடந்த முருகப்பெருமானைக் கண்டார். புதரை நீக்கி, மண்ணைக் கொத்தி, கையிலெடுத்து களிகொண்டு, கசிந்து கண் ணீர் மல்கி, கங்கையில் நீராட்டி, மலர்களால் அர்ச்சித்தார். பெருமானுக்கு கோயில் எடுக்க காசி மன்னனைக் காணச் சென்றார்.

அப்போது டெல்லியை பாதுஷா ஆண்டுகொண்டிருந்தார். குமரகுருபரருக்குத் தமிழ் மட்டும்தான் தெரியும். மன்னர் மொழியோ இந்தி. தனக்கு இந்துஸ்தானி மொழி பேசும் திறன் வேண்டிக் கலை மகளைத் துதித்து "சகலகலா வல்லி மாலை" என்ற பத்து தோத்திரங்களைப் பாடி அந்தச் சக்தியைப் பெற்று மன்னரோடு இந்தி மொழியில் சம்பாஷித்தார். அவரின் அருளாற்றலை உலகமே உணர்ந்திருந்தது. பாதுஷாவும் பெருமதிப்புக் கொண்டிருந்தார். காசியில் கருடன் வட்டமிடும் இடங்களைக் குமரகுருபரரின் சமயப்பணிக்கு தருவதாக ஒப்புக்கொண்டார். காசியில் எப்போதுமே கருடன் பறப்பதில்லை. குமரகுருபரரின் தவ வலிமையால் கருடன் ஒரு குறிப்பிட்ட பகுதியை வட்டமிட்டது. தான் சொன்னபடியே பாதுஷா நிலமும், பொருளும் தந்தார். முரு கன் கோயிலைக் குமரகுருபரர் புதுப்பித்தார். குமாரஸ்வாமி மடமும் கட்டி அங்கேயே தங்கி கம்பராமாயணம் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வந்தார். சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ துளசிதாசர் வருவதுண்டு. "நீதி நெறி விளக்கம்" போன்ற பல நூல்களை எழுதினார். காசி செல்லுமுன் சிதம்பரம் சென்றார். வழியில் அர்ச்சகர் போல் வந்த

முருகன் "என்னைப் பாட மாட்டாயா?" என்று கேட்க, "இப்பிறவி எடுத்ததே உன்னைப் பாடுவதற்காகத்தானே" என மகிழ்ந்தார். "பொன்பூத்த" என்று அடியெடுத்துக் கொடுத்தவன் உடனே மறைந்து போனான். அருகில் இருந்த வைத்தீஸ்வரன் கோயில் முத்துக் குமரனைப் பாடிப் பரவசமடைந்தார். சிதம்பரம் சென்று "சிதம்பரம் மும்மணிக்கோவை, இரட்டை மணிமாலை" பாடியருளினார்.

காசியில் பலகாலம் வாழ்ந்து சமயப் பணிகள் செய்து வடநாட்டில் முருகன் பெருமை பரவக் காரணமானார். இறைவனோடு தான் கலப்பதற்குரிய காலம் நெருங்கியதை உணர்ந்து, தன் மாணாக்கரில் சொக்கநாதர் என்பவரை தன் வாரிசாகத் தேர்ந்தெடுத்துவிட்டு, செந்தூர் முருகன் திருவடிகளில் பரிபூரணமானார். ஸ்ரீ குமர குருபரர் ஆரம்பித்து வைத்த அத்தனை பணிகளும் இன்றைக்கும் குறைவின்றித் தொடர்ந்துகொண்டுதானிருக்கிறது. தமிழையும், சைவத்தையும் வளர்க்கும் பணியில் திருப்பனந்தாள் காசித்திருமடம் பெரும் சேவை செய்கிறது. மதுரை மீனாட்சியம்மை பாலகன், மால்மருகன், வேல் முருகன் ஊமைப்பிள்ளையாம் குமரகுருபரர் நாவினில் உயர்ந்தவேல் கொண்டெழுதி ஆடல் புரிந்து தமிழ்க்கடவுளாகிய தனது பரிபூரண அருள் பெற்ற அடியவராக்கினார்.

ஆறு திருப்பதிகண்டு
ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி
கொண்டோனே சரணமையா

(தொடரும்...

## வீரமா காளியை!



பூரணயருளாட்சி ஒருங்கினையப் பெற்று
முருகன் அருள் செய்யும் செல்வச்சந்நிதியில்
வீரவாளேந்தி வினைகளறுக்கும் – மகா காளியை
வேண்ட வல்ல வினைகள் எல்லாமோடும்
சீரான வாழ்வும், சிறப்பான மக்கட்பேறும்
செல்வச் செளிப்பெல்லாம் கிட்டும்– கூடவே
ஓங்கார உண்மையை உணர்த்தும் முருகன்
நற்பேறும் பெருவாழ்வும் கிட்டிடுமே!

-இராம ஜெயபாலன்-

# சந்தோஷத்தை பணயம் வைக்கலாமா!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்** அவர்கள்

உங்களைச் சுற்றி நடப்பவற்றைக் கவனியுங்கள். உங்கள்மீது இருக்கும் ஆசையால்தான் பூமி தன் புவியீர்ப்பு விசையைச் செலுத்தி, உங்களைத் தன்னோடு வைத்துக் கொண்டிருக்கிறது.

சூரியனில் இருந்து குறிப்பிட்ட தூரத்தில் தனக்கான பாதையை அமைத்துக்கொண்டு இந்தப்பூமி வலம் வருகிறது. அந்தப் பாதையிலிருந்து இது விலகிப்போய்விடாமல், மையத்தில் இருக்கும் சூரியன் ஆசையோடு இழுத்துப் பிடித்திருக்கிறது.



புரிகிறதா... ஆம்..... ஆசை இல்லையென்றால் இந்தப் பிரபஞ்சமே இல்லை! கவனியுங்கள்.... பேராசைப்படுங்கள் என்று நான் சொல்லவில்லை. உங்கள் ஆசை பெரிதாக இருக்கட்டும் என்றுதான் சொல்கிறேன்.

இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ளுங்கள். ஒருமுறை சங்கரன்பிள்ளை ரயிலில் பயணம் செய்துகொண்டிருந்தார். ரயில் எந்த ஸ்ரேசனில் நின்றாலும் சங்கரன்பிள்ளை இறங்கி விடுவார். இறங்கிய இடத்திலேயே நின்றிருப்பார். வண்டி புறப்படும்போது ஏறிக்கொள்வார்.

சின்ன ஸ்ரேசன், பெரிய ஸ்ரேசன் என்று இல்லை. இரண்டு நிமிடம் நிற்கும் ஸ்ரேசனிலும் இறங்கி ஏறுவார். எதிரிலிருந்த பயணிக்கு சஸ்பென்ஸ் தாங்கவில்லை.

"உங்களைப் பார்த்தால் மிகக் களைப்பாகத் தெரிகிறீர்கள். உங்களோடு வந்தவர்கள் யாராவது காணமற்று போய்விட்டார்களா? புத்தகம், தண்ணீர் ஏதாவது வாங்க வேண்டுமா? எதற்காக இப்படி இறங்கி இறங்கி ஏறிக்கொண்டிருக்கிறீர்கள்?"


சங்கரன் பிள்ளை தலையைப் பலமாக ஆட்டினார். "அப்படியெல்லாம் இல்லை சமீபத்தில் எனக்கு பைபாஸ் சர்ஜரி நடந்தது. 'நீண்ட தூரப் பயணங்கள் கூடாது' என்று என் டாக்டர் சொல்லியிருக்கிறார். அதனால், இந்தப் பயணத்தைக் குட்டிக் குட்டிப் பயணங்களாக மாற்றிக்கொண்டிருக்கிறேன்".

'எல்லாவற்றுக்கும் ஆசைப்படு' என்று சத்குருவே சொல்லிவிட்டார் என்று அந்த வார்த்தைகளை மட்டுமே எடுத்துக்கொண்டு நீங்கள் ஆசைப்பட ஆரம்பித்தால்.... சங்கரன் பிள்ளை டாக்டரைப் புரிந்துகொண்டதுபோல் ஆகிவிடும். அப்படியானால் எது ஆசை, எது பேராசை?

ஒருவருக்கு ஆசை என்று தோன்றுவது, இன்னொருவருக்குப் பேராசையாகத் தோன்றும். பைக் வைத்திருப்பவர் கார் வாங்க நினைத்தால் அதை ஆசை என்பீர்கள். அதையே பிளாட்பாரத்தில் படுத்திருப்பவர் சொன்னால், அது பேராசை என்பீர்கள்

ஒப்பிட்டுப் பார்த்துப் பெருமூச்சு விடும் குணம் உங்களிடம் இருக்கும்வரை, இந்தக் குழப்பம் தீராது. உண்மையில் உங்களாசை எங்கே தன் வேர்களை ஊன்றியிருக்கின்றது என்று கவனியுங்கள்.

பாட்டிகள் கதைசொல்லும் போதெல்லாம் கவனித்திருப்பீர்கள்.... ஒரு ராஜகுமாரன் தன்னை எதிர்ப்பவர்களுடன் கடுமையாகப் போராடி ஜெயித்து, ஏழுகடல் தாண்டி, ஏழுமலைதாண்டி, இன்னும் என்னென்னவோ சாகசங்கள் எல்லாம் செய்து அழகான ராஜகுமாரியைச் சிறைமீட்டு வருவான். அப்புறம் அவர்கள் சந்தோசமாக வாழ்ந்தார்கள் என்று பாட்டி கதை சொல்லி முடிப்பாள். சந்தோசமாக வாழ ஆரம்பித்துவிட்டால், காரியம் முடிந்து விட்டது. அப்புறம் போராட்டம். ஆனால் எது சந்தோசம்?



கல்யாணமானால் சந்தோசம் என்று நினைத்தீர்கள். பிறகு, குழந்தைகள் பிறந்தால் வாழ்க்கை முழுமைபெறும் அதுதான் சந்தோசம் என்று நினைத்தீர்கள். குழந்தைகளும் பிறந்தன. ஆனால், "இன்றைக்கு என் நிம்மதி போனதற்கே அவர்கள்தான் காரணம்" என்று மனமுடைந்து அழுகிறீர்கள்.

கோடி ரூபாய் கிடைத்தால் சந்தோசம் என்கிறீர்கள். கிடைத்துவிட்டது. ஆனால், அதை அனுபவிக்க நேரமில்லாமல், பாண் துண்டுகளைக் கடித்துக்கொண்டே, அடுத்த பிஸ்னஸ் வெற்றிக்காக காரில் ரென்சனுடன் கொம்பியூட்டரைத் தட்டிக்கொண்டே பயணம் செய்கிறீர்கள்.

அமைச்சர் பதவி கிடைத்தால் சந்தோசம் என்கிறீர்கள். கிடைத்த பின்போ, எப்போது நாற்காலி பறிபோகும்.... எப்போது வரான்டுடன் பொலிஸ்வந்து கதவைத் தட்டும்.... எப்போது எதிரி கையால் அரிவாள் வீசப்படும் என்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அலைகிறீர்கள்.

இப்படித்தான் சங்கரன் பிள்ளையும் ஒருமுறை மாட்டிக்கொண்டார்.

நிறைய சலுகைகள் கிடைக்கும் என்று சொன்னார்களே! என்று சங்கரன் பிள்ளை இராணுவத்தில் சேர்ந்தார். தவறுதலாக இரண்டு நம்பர் சிறிய பூட்ஸ்கள் அவருக்குக்

கொடுக்கப்பட்டுவிட்டன. தினமும் அவற்றுக்குள் கால்களை நுழைக்கும்போது, விரல்கள் எல்லாம் ஒன்றன்மீது ஒன்று ஏறிக்கொள்ளும். நாள் பூராவும் அந்தச் சிறிய பூட்ஸ்களைக் கழற்றாமல், அவர் பாதங்கள் வலியில் தவிக்கும். வேதனை தாங்காமல் சங்கரன் பிள்ளை ஊருக்கெல்லாம் சாபம் கொடுத்துக் கொண்டிருப்பார்.

“அதிகாரிகளிடம் விஷயத்தைச் சொன்னால், உடனே சரியான அளவு பூட்ஸ்களைக் கொடுப்பார்களே நண்பா... ஏன் இப்படி அவஸ்தைப் படுகிறாய்?” என்று சக சிப்பாய் கேட்டார்.

சங்கரன் பிள்ளையிடம் இருந்து கடுப்பாகப் பதில் வந்தது. “நீதான் பார்க்கிறாயே, தினந்தோறும் எவ்வளவு கடுமையான பயிற்சிகள்.... எலும்பெல்லாம் இற்றுப்போகும் அளவுக்கு அடுத்தடுத்து வேலைகள். எதிலாவது சந்தோசம் கிடைக்கிறதா? ராத்திரி இந்த பூட்ஸ்களைக் கழற்றிப்போட்டதும் ‘அப்பாடா’ என்று எப்பேர்ப்பட்ட சந்தோசம் கிடைக்கிறது தெரியுமா? இராணுவத்தில் சேர்ந்ததில் எனக்குக் கிடைக்கும் ஒரே ஒரு சந்தோசத்தையும் இழக்கச் சொல்கிறாயா?”

நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள்... சங்கரன் பிள்ளை போல் சந்தோசத்தையே பணயம் வைத்துவிட்டு, ‘எப்போதடா பூட்ஸை கழற்றுவோம்’ என்று உங்களுக்கும் தவிப்பு வந்திருக்கிறதா, இல்லையா?

‘சந்தோசமாக வாழவேண்டும்’ என்பதுதானே உங்களுடைய அத்தனை ஆசைகளுக்கும் அடியில் புதைந்திருக்கும் உண்மை.

நீங்கள் கேட்பது கிடைத்துவிடுகிறது. ஆனால் எதற்காகக் கேட்டீர்களோ.... அது- அந்தச் சந்தோசம் மட்டும் கிடைப்பதில்லை!

ஏன் இப்படி? எங்கே தவறு நிகழ்ந்தது?

(தொடரும்...

## சந்நிதிக் கந்தன் கற்றோர் கவிமாலை- 19

இராசையா-குகதாசன்-

**பல்லவி**

**சரணடைந்தார்க் கருளும் சந்நிதிக் கந்தா!**
**அரவணை அம்பிகையால் அறுமுகத்தோ டெழுந்து**

**அநுபல்லவி**

**பரவடியார் வாழ்வு பாருயர உகந்தே**
**விரவருள் தருகந்தா வேண்டுதல் அறியாயோ?**

**சரணம்**

**பிரணவப் பொருள்கேட்கப் பெருங்குரு வாயமர்ந்து**
**அரனவன் செவிமீது அதற்குரை செய்தவனே!**
**சுரர்வீர வாகுக்கருள் சுந்தரக் கதிர்வேலா!**
**வரமது வாரிநல்ல வாழ்வினைத் தாராயோ?**

**மரமெலாம் முறித்தழித்து மாமதம் சிகண்டி முன்னே**
**வரஅதை வெற்றிலையால் வதைத்திட வெளிப்பட்டே**
**நரவடி வாகவரு கந்தருவன் பூவரசு**
**மரநிழல் தவம் புரிய மாமுத்தி தந்தவனே! (சரணை)**

**பசியால் வாடும் வயிறுகளுக்கு காதுகள் கிடையாது.**

# சைவ சித்தாந்தம் கூறும் ஆணவம்

**எஸ்.ரி. குமரன்** அவர்கள்

சித்தாந்தம் என்பதன் பொருள் முடிந்த முடிவு என்பதாகும். வேத உபநிடதங்களிலே ஆராயப்பட்ட பிரமம், ஆன்மா, பிரபஞ்சம் ஆகியவற்றை சைவ சித்தாந்தமானது பதி, பசு, பாசம் எனும் முப்பொருளின் ஊடாக தெளிவாகவும் முடிவாகவும் கூறுவதே சைவ சித்தாந்தம் ஆகும்.

சைவசித்தாந்தம் குறிப்பிடும் முப்பொருட்களில் மூன்றாவதாக வைத்து உணர்த்தப்படுவது பாசமாகும். ஆன்மாக்களை பந்தப்படுத்துவதனால் பாசம் எனும் பெயரினைப் பெறுகின்றது. இது கட்டு, விலங்கு, தளை, பந்தம் போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. சித்தாந்திகள் பாசத்தினை ஆணவம், கன்மம், மாயை என மூன்று வகையாக வகைப்படுத்துவர்.

சைவசித்தாந்தம் கூறும் மும்மலங்களில் முதலாவதாக வைத்துக் கூறப்படுவது ஆணவம் ஆகும். ஆணவம் எனும் பெயர் வரக் காரணம்; இது ஆன்மாக்களின் தனித்துவத்தை சிதைப்பதனால் ஆணவம் எனும் பெயரினைப் பெறுகின்றது. ஆணவமானது பசுத்துவம், களங்கம், ஜடம், தமசு, அவித்தை, அசுத்தி போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றது. அதேவேளை சகச மலம், மூலமலம், இருள்மலம் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது.

ஆணவமானது ஆன்மாக்களைப் பற்றி நிற்பதனால் சகசமலம் எனவும் ஏனைய மலங்களாகிய கன்மம், மாயை ஆகியவற்றின் தோற்றத்திற்கு மூலகாரணமாக அமைவதனால் மூலமலம் எனவும் ஆன்மாக்களை கேவலப்படுத்துவதனால் கேவலமலம் எனவும் இருள்போன்று அனைத்தையும் மறைப்பதனால் இருள்மலம் எனவும் அழைக்கப்படுகின்றது.

ஆணவ மலமானது அநாதியானது. இதன் இயல்புகள் பற்றியும் ஆன்மாவைப் பற்றி இருப்பதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் சித்தாந்த சாஸ்திரங்கள் தெளிவுபடுத்துகின்றன. நெல்லிடத்து உமியும் செம்பினிடத்து களிம்பும் என்றும் உள்ளனவோ அவ்வாறே அவையுமுள்ளன. இடையில் அவை போய் சேர்ந்தன அல்ல. அவ்வாறே மும்மலங்களும் ஆன்மா உள்ள அன்றே உள்ளன. இதனை பின்வரும் பாடல் கூறுகின்றது.

"நெல்லுக்கு உமியும் நிகழ் செம்பிற் களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே"

ஆணவத்தின் சொருபம் இருண்ட பேரிருள் வடிவமாகும். அது ஆன்மாவோடு அநாதியே சகஜமாய் உள்ளது. மாயாமலம் தனு கரண புவன போகங்களையும் கன்மமலம்

எந்தக் காரியமும் அதற்குரிய காலத்திலேயே செய்யப்பட வேண்டும்.

சுக துக்கங்களையும் கொடுப்பதற்கு ஆணவமலமே காரணமாக இருப்பதனால் அதனை மூலமலம் என்பர்.

சித்தாந்திகள் ஆணவத்திற்கு எட்டு வகையான குணங்களை வகுத்துக்காட்டுவர் இதனை இருபாவிருவ.்.து என்னும் நூல் தெளிவாக குறிப்பிடுகின்றது.

"கூறியமூன்று மலத்தின் குணங்குறி
வேறு கிளங்கின் விகற்பங் கற்பங்
குரோதம் மோகங் கொலையஞர் மதநகை
விராயென் குணனுமா ணவமென விளம்பினை" எனக் குறிப்பிடுகின்றது.

1. விகற்பம் - தன்னைவிட பிறர் ஒருவர் இல்லை எனல்.
2. கற்பம் - பிடித்ததை பிடித்திருத்தல்.
3. குரோதம் - கோபம் கொண்டு நினைத்தல்.
4. மோகம் - ஒன்றிற்கு ஆசைப்படுதல்.
5. கொலை - உயிரினங்களைக் கொல்லுதல்.
6. அஞர் - சந்தமும் துக்கப்படலும்.
7. மதம் - அகங்காரம் நேரிடுதல்.
8. நகை - சிரிப்பு.

இவ் எண் குணங்கள் ஆன்மாக்களில் பல இச்சைகளை உண்டாக்குவதால் வினைகள் விளையும். இதனால் ஆணவம் கன்மத்திற்கு வித்தாக அமைகின்றது.

சித்தாந்திகள் ஆணவத்தினை இருளிலும் கொடியது என்பார். இருளானது தன்னைக் காட்டும் பிற பொருட்களைக் காட்டாது. ஆனால் ஆணவமோ தன்னையும் காட்டாது பிற பொருளையும் காட்டாது. இதனைத் திருவருட்பயன்

"ஒரு பொருளுங் காட்டாதிருள் உருவங்காட்டும்
இரு பொருளும் காட்டாதிது" என்று சுட்டுகின்றது.

ஆணவமானது அனைத்து ஆன்மாக்களையும் பீடித்துள்ளது. மலப்பீடிப்பின் அடிப்படையில் ஆன்மாக்களை மூன்று வகையாகத் திருவருட்பயன் கூறுகின்றது.

"திரிமலத்தார் ஒன்றதனிற் சென்றார்கள் அன்றி
ஒருமலத்தார் ஆயும் உள்" என்பதாகும்.

இதனடிப்படையில் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானாகலர் என மூன்று வகைப்படுத்தப்படுகின்றது. சகலரில் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் பிரளயாகலரில் ஆணவம், கன்மம் என்னும் இரு மலங்களும் விஞ்ஞானாகலரில் ஆணவம் என்னும் ஒரு மலமும் பீடிக்கப்பட்ட தன்மையினைக் காணமுடிகின்றது.

ஆணவம் பற்றி திருவருட்பயனானது குறிப்பிடும்போது

"பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக்குண் டென்றும்
கணவற்கும் தோன்றாத கற்பு" என்கிறது.

இதன் அர்தப்பாடானது எண்ணுக்கணக்கற்ற ஆன்மாக்களைக் கொண்டு நிற்கும் ஆணவம் எனும் பாவைக்கு தன் நாயகர் ஆகிய ஆன்மாவிற்கும் புலப்படாத கற்புநெறி உண்டு என்பதாகும்.

ஆணவமானது ஆன்மாவின் குணமன்று. அதன் குற்றமேயாகும் என்பதனை திருவருட்பயன் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

"இருள் இன்றேல் துன்பென் உயிரியல்பேல் போக்கும்
பொருள் உண்டேல் ஒன்றாகப் போம்"

இதனடியாக நோக்கும்போது "இருளின்றேல் துன்பென்" என்று துன்பத்துக்குக் காரணம் ஆணவம் என்றதினாலே துன்பத்துக்கு நேரே காரணமாகிய கர்மம் ஆணவத்தாலுண்டாவதென்பது பெறப்படும். குணம் அழியும்போது குணத்தையுடைய பொருளும் அழியவேண்டும். நெருப்பின் குணமாகிய சூடு இல்லாமற் போகும்போது நெருப்பும் இல்லாமற்போம். நான்கு பக்கமும் சமனாயிருத்தல் சதுரத்தின் குணம். சமமாயிருக்குங் குணங்கெடச் சதுரமும் கெடும். அதுபோல ஆணவம் ஆன்மாவின் குணமாயின் அது திருவருளாற் கெடும்போது ஆன்மாவுங் கெடவேண்டும். முத்தி நிலையில் ஆன்மா கெடாதிருத்தலால் ஆணவம் அதன் குணமன்று என்பது அநுமானம்.

ஆணவத்தை ஆன்மாவானது என்றும் இழந்துவிட முடியாது. மாயையின் காரணத்தினால் உடம்பு முதலியவைகள் கிடைத்த காலத்திலும் அதன் காரணமாக அறிவுபெறப்பட்ட போதிலும் ஆணவ மயக்கம் ஒரு காலமும் அதனை விட்டு நீங்காது என்பதை திருவருட்பயன் பின்வருமாறு கூறுகின்றது.

"ஒன்று மிகினும் ஒளிகவரா தேல் உள்ளம்
என்றும் அகலா திருள்" எனக் குறிப்பிடுகின்றது.

ஆன்மா தனது இலட்சியமாகிய ஈடேற்றத்தினைப் பெறுவதற்கு ஆணவத்தில் இருந்து விடுபடுதல் வேண்டும். அதாவது ஆணவம் வலிமை குன்றவேண்டும். இதற்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு நிலைகளும் ஆன்ம விடுதலைக்கான பாதையாக குறிப்பிடப்படுகின்றது.

"சரியையில் ஆணவம் கால் சரிந்திடும்
கிரியையில் ஆணவமலம் கெடுதியும்
மருவு யோகத்தில் முக்கால் சரிந்திடும்
விரிசிவ ஞானத்தில் முற்றும் விரியுமே"

ஆன்மாவானது ஈடேற்றம் பெறுவதற்கு இருவினை ஒப்பு ஏற்படுதல் வேண்டும். இருவினை ஒப்பு என்பது நல்வினை தீவினை இரண்டையும் சரிசமமாக கருதும் நிலையாகும். இருநிலை ஒப்பு ஏற்பட ஆன்மாவில் இருந்து ஆணவமலம் நீக்கம் பெறுகின்றது. (ஆணவத்தின் வலி குறைகின்றது) இது மலபரிபாகம் எனப்படும். மலபரிபாகம் ஏற்பட இறைவனது திருவருட்பயன் ஆன்மாமீது பதிகின்றது. இது சத்தினிபாதம் எனப்படும்.

சத்தினி பாதம் ஏற்பட தாழ்+ தலை என்னும் சொற்றொடர் புணர்ந்து தாடலை தோன்றுவதுபோல ஆன்மா பதியுடன் இரண்டறக் கலந்து பிறவியற்ற பேரானந்த நிலையாகிய முத்தி அடைகின்றது. இங்கு ஆன்மா பதியுடன் இரண்டறக் கலந்தாலும் பதியாகுவதில்லை. இம்முத்திநிலை சுத்தாத்வைதம் எனப்படுகின்றது.

**அலுப்பை அடையாமல் இன்பத்தைத்தேடி அலைபவன்தான் மனிதன்.**

# துன்பம் விளைவிப்பதை முடைக்கும் வழி

செ. ஜடா அவர்கள்

நாம் ஒவ்வொருவரும் நமக்கு ஏற்ற வாறு கருத்துக்களை உருவாக்குகின்றோம். ஒருவருடைய கருத்து மற்றவருக்கு முரண் பாடாகத் தோன்றும். ஆனால் ஒன்றில் மட்டும் யாருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. 'துன்பமின்றி இன்பத்துடன் வாழவேண்டும்' எனும் கருத்தைத் தான் வேற்றுமையின்றி நாம் எல்லோரும் எண்ணுகின்றோம்.

நாம் முற்பிறவியில் செய்த நல் வினை தீவினைகளுக்கேற்ப இப்பிறப்பில் சுக துக்கங்களை அனுபவிக்கின்றோம். இறைவன் நடுநிலை வழுவாதவன். உலக மெங்கும் சைவநீதி விளங்கும்படி மேன்மை கொள்பவன். "நீதிதான் கடவுளின் வடிவம்" அதற்குச் சிவம் என்ற பெயருண்டு. சிவம் என்ற பெயர் நன்மை, மங்களம், நீதி எனப் பொருள்படும். எவன் நீதியோடு சம்மந்தப்படு கிறானோ அவன் சிவத்தோடு சம்மந்தப்பட் டவன். சிவத்தோடு சம்பந்தப்பட்டவன் சைவன். எவ்வுயிரும் தன்னுயிர்போற் பேணிச் செந்தண்மை பூண்டு ஒழுகுபவன் சைவன்.

நாம் நுகர்கின்ற இன்ப துன்பங் களுக்கு இறைவன் காரணம் அல்லன். நாம் இயற்றிய காரியங்கள் இங்கு காரணம் தரு கின்றன. இது கர்மவிதி. இக்கருத்தை பிரம தேவர் ஏனைய தேவர்களுக்கு அறிவிக்கின்ற தாக கச்சியப்பச் சிவாச்சாரியார் கந்தபுராணத் தில் அருளியுள்ளார்.

"இவறலும் இகலும் இன்றி யார்க்குமோர் பெற்றித்தாகி
அவரவர் வினைகள் நாடி அதற்படு பொருளை நல்கும்
சிவனையாம் வெறுத்தல் குற்றம், சிறந்த நோன்பியற்றிடாதே
தவறுசெய் தனம் என் றெம்மை நோவதே தக்கதென்றார்"

ஆதலால், நாம் முற்பிறப்பில் செய்த பாவபுண்ணியங்களின் பயனை இங்கு நுகர்கின்றோம் என்று கருதி, நின்மதியாக வினைப்பயன்களை அனுபவிக்கவேண்டும்.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

என்பது திருவள்ளுவர் வாக்கு.

ஒருவர் நமக்குத் துன்பம் செய் வாராயின் அவர் மீது கோபம் கொள்ள லாகாது. நாம் செய்தவினை இவர்மூலம் துன்பமாக வருகின்றது என எண்ணி சாந்தி அடையவேண்டும். இப்பிறப்பில் செய்யும் வினையை இவ்வுலகிலே அனுபவிக்க நேரிடும். சீதாதேவியை அசோக வனத்தில் கொடிய அரக்கியர்கள் துன்பப்படுத்தினார்கள்.

"பத்து மாதங்களாக வாட்டிய கொடிய அரக்கர்களை தீயிட்டுக் கொளுத்த வேண்டும்" என்று அநுமார் வரம் கேட்கிறார். அதற்கு சீதாதேவி "மகனே, நான் துன்பம் துய்ப்பதற்குக் காரணம் இவர்கள் அல்ல. என் வினைதான் காரணம். தவநெறியில் வழுவாத என் கணவனை மானைப் பிடித்துக் கொடுங்கள் என்று, மானின் பின் அனுப்பினேன். என் அருகில் காவலாக நின்ற இலக்குவனை நிந்தனை செய்து நோகச் செய்தேன். உணவு, உறக்கமுமின்றி, சுகத்தை மறந்து, என்னைக் காத்து நின்ற பரம பக்தனாகிய இலக்குவனை, நான் கொடுஞ் சொற்களால் மனம் நோக வைத்து அனுப்பினேன். இந்த வினைகளின் பயனாக இடர் வந்தது. என்னுடைய இல்லத்திலிருந்து என்னுடைய உணவை உண்ட கூனி எனக்குப் பெருந் துயர் விளைவித்தாள். அதனையே பொறுத்து வந்தேன். இக்கூனியைவிட இவர்கள் கொடியவர்களா?" என்று அன்பு ததும்பும் குரலில் அருள் ஒழுக அறிவுரை பகர்ந்தார்.

ஆகவே, துன்பத்தை நுகர்கின்றவர்கள் மற்றவர்களையோ, கடவுளையோ நோவக்கூடாது. தாம் செய்த வினையை அனுபவிக்கின்றோமென எண்ணித் தாங்கிக் கொள்ள வேண்டும். வினை- சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என மூவகைப்படும். முற்பிறவியில் செய்த வினை சஞ்சிதமெனப்படும். சென்ற பிறப்பில் செய்த வினையை இங்கு நுகருவது பிராரப்தம். இப்பிறப்பில் ஆற்றும் வினையை அடுத்த பிறவிகளில் அநுபவிக்க வேண்டும். இது ஆகாமியம் எனப்படும்.

நாம் துன்பமின்றி இன்பமாக வாழ வேண்டுமென்றால் மனம், வாக்கு, காயங்களால் யாவர்க்கும் துன்பம் செய்யலாகாது. இதுவே பண்பாடு. "மனிதன் விடயங்களைக் கருதும்போதெல்லாம் பற்றுண்டாகிறது. பற்றுதலால் விருப்பம் உண்டாகிறது. விருப்பத்தாற் சினம் பிறக்கிறது. சினத்தால் மயக்கம். அம்மயக்கத்தால் தவறுதல் உண்டாகிறது. ஆதலால் ஒருவன் சிவத்தியானத்தால் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும்"

இறவாமல் இருக்கவேண்டுமென்றால், பிறவாமல் இருக்கவேண்டும். நாம் எங்கு சென்றாலும் நம் நிழல் நம்மைத் தொடர்ந்து வருகின்றது. இன்னொரு நிழலுக்குச் சென்றால், நம் நிழல் நின்று விடும். இறைவனிடம் சரணுபுகுந்தால் நம் வினைகள் எல்லாம் அகலும்.

"யான், எனது அற்ற இடமே திருவடி" என்பது குமரகுருபர சுவாமிகளின் அருள் வாக்கு. அகங்கார, மமகாரங்கள் அற்று, என்றும் இறைவனைத் தியானித்து அன்புநெறி வழுவாது நின்று, அருள் மயமாகிய சிவநெறியிற் சென்று உய்யும் வழியிற் செல்வோமாக.

"ஆறும் பிறையுஞ் சூடிய ஐயன்
நீறு பூசிய மேனியன் நின்மலன்
கூறு மடியார் கொடிய வினையைப்
பாறும் வண்ணம் பரிந்தருள் புரியுமே
ஓதுக வது நாம் ஓம் தத் சத் ஓம்"

-நற்சிந்தனை-

எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம் தடுமாறாதே.

# பாம்பன் சுவாமிகளும் ஆறுமுக கவசமும்

**T. நாகராசா அவர்கள்**

ஆத்மீகத்தை சிறப்புற அமைக்கப் பல்வேறு கவசங்கள் எமது இந்துமதத்தில் செவ்வனே அமைக்கப்பட்டுள்ளது. சிறப்பாக சக்திகவசம், சிவகவசம், துர்க்காதேவி கவசம், கந்தர்சஷ்டி கவசம், ஆறுமுககவசம், ஸ்ரீகிருஸ்ண கவசம் போன்ற கவ்சங்களாகும். குறிப்பாக அடியார்களைப் பாதுகாக்க இக் கவசங்களை இந்துமதத்தவர்கள் ஓதி வரு கின்றனர். பாம்பன் சுவாமிகளால் பாடப்பட்ட ஆறுமுக கவசத்தில் அல்லது ஷண்முக கவசத்தில் முப்பது பாடல்கள் உள்ளன.

தமிழகத்தில் இராமேஸ்வரத்தை அடுத்துள்ள பாம்பன் பகுதியில் சைவ வேளாளர் குலத்தில் செங்கமல அம்மையார் செய்த அருந்தவத்தால் தோன்றியவரே பாம் பன் சுவாமிகளாகும். இவரிடம் காணப்பட்ட இறைபக்தி, மற்றவர்களிடம் அன்பு செலுத் துதல் போன்ற அரும்பெரும் குணங்கள் ஒருங்கே அமையப்பெற்றிருந்தார். பாடசாலை யில் சிலகாலம் பயின்று பாராட்டுப் பெற்றிருந் தார். ஷண்முகனது அருட்கடாட்சத்தால் செவ்வேளையும் அருணகிரிநாதரையும் இணைத்து பாடல்களைப் பாடியுள்ளார். “கங்கையைச் சடையில் தரித்து” என்று தொடங்கும் பாடல்களைப் பாடியும், அத னைத் தொடர்ந்து நூறு பாடல்களைப் பாடி னார். ஆண்டவன் கிருபையால் சடோட் சரோபதவம் பெற்றார். ஷண்முகனின் திருக்கடாட்சத்தால் முப்பத்தைந்து நாட்கள் நிஷ்டையில் அமர்ந்து தீட்சை பெற்றார். சுவாமிகள் கார்த்திகைத் திங்கள் எட்டாம்நாள் ஞாயிறன்று சண்முக கவசம் பாடினார். இவர் பாடிய பாடல்கள் அனைத்தும் உணர்வுபூர்வ மாக பெரும் சக்தியொன்றை ஏற்படுத்தக் கூடியதாகும். இவர் தான் வாழ்ந்த காலத்தில் திருவான்மியூரில் இருந்து ஷண்முகனுக் காகப் பல்வேறு விழாக்கள் எடுத்தார். குறிப்பாக முருகனுக்கு ஷட்டிவிழா மயூர வாகன சேவை விழா அருணகிரியார் விழா போன்ற விழாக்களையெடுத்து முருகனது விழாக்களைச் சிறப்பித்தார். இவர் 30.06. 1929இல் மயூரபுரத்தின்கண் சமாதி எய்தினார். இவர் நடாத்திய மயூரவாகன சேவை விழா இன்றும் நடந்துவருகின்றது. அத்துடன் சுவாமிகளின் குருபூசையும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றார்கள். கலியுகவரத னாம் கந்தப்பெருமான் எங்களது சொந்தப் பெருமான் என்று சொல்வதற்கமைவாக இவர் பாடிய ஆறுமுககவசம் திகழ்கின்றது. வளு வூர் தேவராஜபிள்ளையவர்களால் எவ்வாறு கந்தஷெஷ்டி கவசம் பாடப்பெறுகிறதோ அதற் கமைவாக ஷண்முககவசமும் பாடப்பெற்று வருகின்றது. இவர் பாடிய ஷண்முககவசத் தில் 24 பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலும் கருத்துச் செறிவாக அமைந்து காணப்படுகின்றது. முதற்பாடலில் திண்திறல்

சரவணத்தான் தினமும் என் சிரசைக் காக்க என்று பாடி முடிக்கின்றார். மனிதர்களுக்கு சிரசு எவ்வளவு முக்கியம் என்பதை தனது பாடலில் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டு கின்றார். விண்ணாகியும் நிலவுலகமாகியும், அறியொணாப் பொருளது ஆகியும் குருவாகி யும், குற்றமற்ற இறைவன் ஆகியும் எட்டுத் திக்கிலும் அமைந்த யாவராலும் வழிபடக் கூடிய சரவணத்தானென சிறப்பிக்கின்றார். எனவே இப்பாடலில் சரவணப்பொய்கையில் முதற்காட்சிதந்த முதல்வோன் என முரு கனது புகழை எடுத்தியம்பத் தவறவில்லை, நாதனாம் கார்த்திகேயன் நாசியை நயந்து காக்கவென்றும்கூறி இரு செவிகள், வாய், நாப்பல், பிடரி, நெற்றி, விழி, நாசி என்ப வற்றை சேவற்கொடியோனைக் காக்குமாறு வேண்டுகின்றார். எனவே இவரது பாடல்களில் மனிதர்களின் உறுப்புக்களை முருகனைக் காக்குமாறு வேண்டுவதுடன் உறுப்புக்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என் பதையும், இவ்வுறுப்புக்களால் முருகன் புகழ் பாடி அருள் பெறலாம் என்பதையும் சுவாமி கள் கூறத் தவறவில்லை.

இப்பாடல்களில் முருகனின் சிறப் புக்களை அறிவதற்கு சுவாமிகள் வாய்ப் பேற்படுத்தித் தந்துள்ளார். என்பதை மறக்க முடியாது. தாயுமான அடிகள்கூட முருகனது சிறப்பைக் கூறுகின்றபொழுது தேவராலும் மூவராலும் அறியமுடியாதவன் இறைவன் என்கின்றார். அதற்கமைவாக பாம்பன் சுவாமிகள் அண்டமாய் அவனியாகி அறியனாப் பொருள் என்கிறார். மேலும் எனது சுந்தரத்தைக் காக்கவென்றும், தோள், விலா என்பவற்றை திருமகள் மருமகன் காக்கவென்று கூறுகின்றார். அத்துடன் குற்ற மில்லாத மார்பும் ஆறுமுகனால் காக்கப்பட வேண்டியவையாகும் என்பதுடன் குற்றமில் லாத முழங்கையைக்கூட அழகுமிகுந்த முருகன் காக்கவேண்டுமென்று வேண்டு கின்றார். இவர் பாடிய பாடல்களில் அடியார் களின் ஒவ்வொரு அவயவங்களும் கட்டாய மாக முருகனால் காக்கப்பட வேண்டியவை யாகும் என்று அறிகின்றோம். மனிதர்களின் அவயவங்கள் மட்டும் இங்கு எடுத்துக்கூறப் படவில்லை. காக்கவேண்டுதல் செய்யும் செவ்வேட்பெருமானின் சிறப்புகளும் ஆங் காங்கே பறைசாற்றப்படுகின்றது. கலியுக வரதனாம் கந்தப்பெருமானின் புகழைப் பாடவும் இக்கவசத்தினைப் பயன்படுத்து கின்றார். முருகன் உமையின் மதலை என் றும், அயிலோன் என்றும் மால் மருகன் என்றும் கூறி முருகனுக்கு புகழாரம் சூட்டு கின்றார் பாம்பன் சுவாமிகள். குறிப்பாகக் "கண்களைக் காக்க" என வேண்டிய சுவாமி கள், "சோதியாம் தணிகை ஈசன் துரிசிலா விழியைக் காக்க" என்கிறார். திருவரங்கல் திரட்டில் கண்களின் முக்கியத்துவம் கூறப் பட்டிருப்பதுடன் அவ்வாறு கூறும்பொழுது

கண்கள் மங்கிக் காதடங்கிக் கருத்து மயங்குமுனே
தண் கொள் பங்கயங்கள் விள்ளும் தணிகை நெடுங்கிரி வாழ்
பண்கள் பாடுவாயான் சேயன் பனிமலர் பணிகோ
கண்களீரா நெந்தை பாதமலம் வணங்குதுமே

எனவே இவற்றின்மூலம் கண்களின் முக்கியத்துவம் எப்படிப்பட்டதென்பதை பாம் பன் சுவாமிகள் கூறுவதுடன் பிறபாடல்களில் முன்னோடியாகவும் திகழ்கின்றார். இவர் பாடல்களில் பற்களும் நாக்கும் உணவு களை மென்று பதம்பார்ப்பது ஆனால் நாக்குத் தேவையில்லாதவற்றையும் உளறித் தள்ளுகின்றது. எனவே இவற்றிலிருந்து

தவிர்த்து முதிர்ந்த தவம்மிக்க முன்னோர் போல குமரனது நாமத்தை கூறுவதற்கு பயன்படுத்தும்படி எடுத்தியம்புகின்றார். திருகோணமலைப் பதிகத்தில்கூட "மின்னுவான வர்மன் மயிலென வர அதன்மேலே" என்று தொடங்கி "என்ன மாதவம் செய்துள்ளதோ என நல் நாவே" என்று நாவின் சிறப்பைக் கூறுவதைக் கண்டுகொள்ளலாம். எனவே பாம்பன் சுவாமிகள் இப்பதிகத்தைப் பின்பற்றி நாவின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றார். எனவே பொதுப்படையாகப் பார்க்கும்பொழுது பாம்பன் சுவாமிகள் மனிதனது உறுப்புக்கள் எல்லாம் கவனமாகப் பாதுகாக்கப்படவேண்டுமென்பதுடன், முருகனின் புகழையும், சிறப்புக்களையும் இப்பாடலில் ஆங்காங்கே காட்டியுள்ளார். அத்துடன் பகைவரது ஆயுதங்களால் மனிதன் படும் துன்பத்தை பாதுகாக்க முருகனது அருள் வேண்டுவதுடன் மிருகங்களால் ஏற்படும் துன்பங்கள், ஜந்துக்களால் ஏற்படும் துன்பங்கள், சூலைநோய், வாதம், சோகை, தலையிடி, கண்டமாலை, குன்மம், கசம் போன்றவற்றை வேற்பெருமான் காக்கவேண்டுவதுடன் குஷ்டம், சன்னி போன்ற வருத்தங்கள் வராமல் முருகனது வேல் காக்கவேண்டுமென்கின்றார். எனவே மனிதனுக்கு இயற்கையாக வரக்கூடிய நோய்கள்கூட முருகனது கடாட்சத்தால் காக்கப்படுமென்பதை ஷண்முக கவசத்தில் சிறப்பித்துக்காட்டி, இக்கவசத்தை நாங்கள் படிப்பதன்மூலம் ஆறுமுகனின் அருட்கடாட்சத்தை பெறலாமென்றும் கூறிச் செல்கின்றார். இவரது பாடலில் தமிழ்நாட்டு தலங்களில் உள்ள முருகன் பெருமை மட்டுமன்றி ஈழத்திலுள்ள கதிர்காமக் கந்தனின் சிறப்பும் எடுத்தியம்புவது சிறப்பம்சமாகும். எனவே தமிழ்நாட்டில் வாழ்ந்த சுவாமிகள் கதிர்காமக்கந்தனால் எங்களது துன்பம் காக்கப்படுகின்றது என்பதையும் காட்டிச் செல்கின்றார். முருகனுடைய பெயர்களும் குறிப்பிட்டுக் காட்டப்படுவது சிறப்பாக நோக்கற்பாலது. குகன், வேதபோதகன், முத்தையன், திண்திறல் சரவணத்தான், தணிகை ஈசன், முருகவேள், மால்மருகன், ஏரகத்தேவன், சூரசண்டன் போன்றவை இப்பெயர்களாகும். முருகனது வேலை, திண்வேல், கூர்வேல், ஐவேல், முனைவேல், கைவேல், அருள்வேல், ஓம்ரீம் வேல், கரவேல் போன்ற பெயர்களைக் குறிப்பிட்டு வேலைச் சிறப்பித்துக்காட்டுவதன்மூலம் பாம்பன் சுவாமிகள் ஷண்முகப்பெருமானிற்கு கொடுக்கும் வேல் முக்கியத்துவம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

எனவே பாம்பன் சுவாமிகள் பாடிய ஷண்முககவசம் பல்வேறு வகைகளில் ஆத்மீகத்தின் சிறப்பை எடுத்துக்காட்டும் அதே வேளை ஆத்மீகத்தின் பயனையும் குறிப்பிட்டு இப்பயனிற்கெல்லாம் முதல்வராகிய சுப்ரமண்யப்பெருமான் மக்களுக்கு பல்வேறு வகைகளில் நின்று காக்கின்றார். எனவே இக்கவசத்தைப் படிப்பதன்மூலம் எங்களுக்குப் பல்வேறு சிறப்புக்கள் கிட்டுவது நிச்சயமென்றும் அறிவித்துச் செல்கின்றார். கந்த ஷஷ்டி கவசத்தால், நாராயண கவசத்தால், சக்தி கவசத்தால் எவ்வளவு பயனை நாம் அடையலாமோ அவ்வகைப் பயன்களை இக்கவசத்தை படிப்பதன் மூலமாயும் அடையலாம் என்பதையும் அறிய வைக்கிறது. எனவே விளக்கேற்றி வழிபடுங்கள் விடிவு வரும். வேதனைவினை நீங்கும் என்பதையும் இக்கவசத்தின்மூலமாய் அறிந்துகொள்ளலாம்.

**போட்டி மனப்பான்மை இல்லாமல் பணியாற்று.**

உ

# புதுமைக்கும் வழிகாட்டியாக நின்றொளிரும் பண்பாட்டுச் சுடர்கள்

இரா. சாந்தன் அவர்கள்

இந்நிலவுலகில் பல சமயங்கள் நிலவுகின்றன. இவற்றுள் பெரும்பாலானவற்றிற்கு, ஒவ்வொன்றிற்கும் ஒரு தலைமைப்பீடம் உண்டு. இப்பீடத்தின் ஆதிக்கத்தின்கீழ், சமயத்தொண்டு புரிதற்காகத் தகுதிவாய்ந்த சேவை அதிகாரிகள் ஆங்காங்கு நியமிக்கப் பெறுகின்றனர். அதனால் குறித்த சமயங்களின் சமயத்தொண்டு ஒரு சுமூகமான சீரிய முறையில் நடைபெறுகின்றன.

எமது சைவ சமயத்தைப் பொறுத்த வரையில் இத்தகையதோர் ஒழுங்குமுறை இல்லையென்றே கூறலாம். இச்சமயத்தைச் சேர்ந்தவர்கள் தத்தம் சிந்தனைக்கு எட்டியவாறு சமய முறைகளை அனுசரித்து வருகின்றனர். இத்தகையதோர் நிலை "குறைபாடு உடையது" என்று சிலர் கூறும் அதேவேளை, அது "சைவ சமயத்தின் சிறந்த அம்சம்" எனவும் வேறு சிலர் கூறுகின்றனர். அதாவது கட்டுப்பாடு எதுவும் இன்றி மக்கள் சமய சுதந்திரம் உடையவராய், தமது இயல்புக்கும் போக்கிற்கும் உவந்த வழிபாட்டு முறை எதுவோ அதனைக் கடைப்பிடிக்கக் கூடியதாக உள்ளது என்று மெச்சுகின்றனர்.

இந்த விடயம் எவ்வாறு இருப்பினும், வேறொரு துறையில் சைவசமயத்தின் கண்ணே, ஒரு சீரிய முறை பண்டுதொட்டு வழங்கிவருகின்றது. அதுதான் திருக்கோயில் இருப்பதுவும், அங்கு திருவிழாக்கள் நடைபெறுவதும் ஆகும். இவையாவும் ஆகமங்களில் வகுக்கப்பெற்றுள்ளவாறே நிகழ்தல் வேண்டும் என்பது நியதி. இங்கு நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஆன்மீகத் தொடர்புடைய சீரிய அர்த்தமுடையதாகவே இருக்கின்றது. திருக்கோயில் அமைப்புந் தானும், மக்கள் தாம் நினைத்தவாறு அமைத்துக் கொள்ளுதல் விலக்கப்பெற்றுள்ளது. கட்டிடக்கலை தெரியாத காரணத்தால் போலும் சைவசமயத்தவர் தமது கோயில்களை இருட்டறைபோல அமைத்துள்ளனர் எனச் சிலர் ஏளனம் செய்வதுமுண்டு. ஒரு மனிதன் நிலத்தில் மல்லாந்து படுத்திருப்பின், அவனது உடல் உறுப்புக்கள் எந்தெந்த நிலையில் இருப்பனவோ, அவற்றிற்கு ஈடாகவே திருக்கோயிலினது வெவ்வேறு பகுதிகளும் அமைகின்றன.

சைவசமயத்தின் வேறு எது இல்லாது இருப்பினும், ஆங்காங்கே திருக்கோயில்கள் இருப்பதன் காரணமாகவே இச்சமயம் அழியாது பாதுகாக்கப்பெற்று வந்தமையும், நாம் வரலாற்று வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது.

ஆறாம் நூற்றாண்டினரான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தமது "திருமயிலாப்பூர்" (பூம்பாவை) திருப்பதிகத்தில், அக்காலத்தில் நடைபெற்று வந்த பத்துத் திருவிழாக்களைக் குறிப்பிடுகின்றார்கள். தாம் ஓதிய

மௌனமாக இருக்கத் தெரியாதவனுக்கு நன்றாகப் பேசவும் தெரியாது.

பதிகத்திற்கு தக்கவாறு பத்துத் திருவிழாக் களைக் குறிப்பிட்டார்கள். இவற்றிற்கு மேலதிகமாக வேறு எத்தனை, எத்தனை திருவிழாக்கள் இருந்தனவோ தெரியவில்லை.

புரட்டாதி மாதத்தில் நடைபெறுவ தாகிய உருத்திரப் பல்கணத்தார்க்கு அட்டிட் டல் விழாவையே பெருமான் கூறுகின்றார்கள். அதாவது திருவமுது ஆக்கி, அடியார்க்கு இடுதல் இவ்வைபவத்தின் சிறப்பைச் சம்பந்த மூர்த்தி நாயனாரின் திருவாய் மொழியாகவே உயிரைப் பறிகொடுத்த பூம்பாவைப் பெண் மணியை விளித்துக் கூறியதாகச் சேக்கிழார் சுவாமிகள் தமது பெரியபுராணத்தில் ஒரு பாசுரத்தில் இயம்பியுள்ளார்.

"மண்ணினிற் பிறந்தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ணலார் அடியார்தம்மை அமுதுசெய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண்டார்தல்
உண்மையாமெனில், உலகர்முன்வருக" என உரைப்பார்.

இரண்டாவது ஐப்பசி மாதத்து ஓண விழா. இது திருமாலுக்குரிய விழாக்காலம் தொட்டே மிக விமரிசையாகக் கொண்டாடப் பட்டு வந்தது என்பதற்குப் பண்டைய இலக்கியங்களிலே சான்று இருக்கின்றது. இவற்றின் விபரம் இக்கட்டுரையின் இறுதிப் பகுதியில் தரப்படுவதைக் காணலாம். நான்காவது மார்கழி மாதத்துத் திருவாதிரைத் திருநாள், ஐந்தாவது தைமாதத்து தைப்பூசம், சம்பந்தப் பெருமான், நெய்யால் மறைக் கப்படும் தெள்ளிய சோறு இவ்விழாவின் போது அடியார்க்கும் வறியவர்க்கும் அளிக் கப்படும் எனப் பாடியுள்ளார்கள். ஆறாவது மாசிமாதத்தில் நிகழும் கடலாட்டுவிழா ஏழாவது பங்குனி மாதத்து உத்திரத்திருநாள், எட்டாவது அட்டமி நாள். இக்காலத்தில் இது சித்திரைப் பௌர்ணமியாகக் கொண் டாடப்படுகின்றது. ஒன்பதாவது, பொற்றாம்பு விழா இது பொன் + தாம்பு என விரியும். இது வைகாசியில் நிகழும் ஊஞ்சலாடும் விழா. பத்தாவது பத்திரோற்சவம், கும்பாபி சேகத்திற்குப் பதிலாக இவ்விழா ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி மாதங்களில் சில தினங் களில் நடைபெறும். ஆண்டு முழுவதும் இக் கோயில் திருவிழாக்கள் நடைபெறும் என் பதற்கோர் சான்றாக இவ்விழாக்கள் அமை கின்றன. பவித்திரம் என்பது தருப்பை மோதிரம்.

சிறப்பான இவ்விழாக்களைக் கண் ணுற்றுப் பார்த்து, உள்ளத்தால் அனுபவிக் காது, இவ்வுலகைவிட்டுப்போதல் தக்கதோர் செயலாகுமோ என்று கேட்பது போலச் சம் பந்தப் பெருமானுடைய விண்ணப்பப் பதிகம் பூம்பாவையை நோக்கி அமைந்திருக்கின்றது.

திருக்கோயில்களில் நிகழும் திரு விழாக்கள் மிக அர்த்தமுடையன என்று கொள்ளப்படுகின்றது. இவற்றின் தாற்பரியங் களை எடுத்து மக்களுக்கு விளக்குவார் இல்லாதது பெரும் குறை. இவற்றை நடாத் துகின்ற அந்தணர்கள், உரிய வடமொழி மந்திரங்களை ஓதிக்கிரியைகளை நிறைவு செய்கின்றார்கள். ஆனால் இவற்றின் கருத் துக்களை விளங்கவைப்பது கிடையாது.

திருக்கோயில்களில் நடைபெறு கின்ற கொடியேற்றம் என்னும் நிகழ்ச்சியைப் பார்ப்போம். இங்கு கொடிமரம் சிவபெரு மானைக் குறிக்கும். கொடிச்சீலை ஆன்மா வாக அமைகிறது. கயிறு ஆன்மாவைப்

பந்திக்கும் பாசத்தைக் குறிக்கும். ஆன்மாவும், பாசமும் வெளிப்படைத்தோற்றம் பெற்ற பின்னர், சிவத்தை ஆதாரமாகக் கொள்ளும் இது. கொடிச்சீலையும் கயிறும் கொடி மரத்திலே தங்கி இருப்பதனால் குறிக்கப்படும் கொடிச்சீலையில், ஆன்மாவை குறிப்பதாகிய இடபமும், ஆன்மாவை இரட்சிப்பதாகிய அஸ்திரதேவரும், கும்பம் முதலிய பொருள்களும் எழுதப்படும்.

விழாக்கள் பற்றிய முன்னுரையை இத்துடன் நிறுத்திக்கொண்டு, விளக்கீடு சம்பந்தமான கருத்தினை அடுத்த சுடரினிற் பார்ப்போம்.

(தொடரும்...



# பெரிய புராணம்

தமிழில் எழுந்த புராணங்களில் தனித்துவம் பெற்றது பெரியபுராணம். இது 11ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் சேக்கிழாரால் அருளப்பட்டது. இது அடியவரின் வரலாற்றை எடுத்தியம்பி சுந்தரனைக் கதாநாயகனாகக் கொண்டு அரும் பெரும் காப்பியமாக கொள்ளப்படுகின்றது. இந்நூலை உருவாக்குவதற்கு சுந்தரரின் திருத்தொண்டர் தொகையும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும் அமைகிறது. இது சிவனடியாரின் பக்தி சிறப்பினை எடுத்துக்காட்டிய நிலையில் சிந்தை சிவனடியில் வைத்தனரே சிவனடியார் என்பதை எடுத்துக்காட்டிய நிலையில் 13 சதுக்கத்தில் 4350 பாடல்களையும் கொண்டு 63 வகையடியார் 9 தொகையடியார் வரலாற்றைக் கூறும் 12ஆம் திருமுறையாக அமைவது பெரியபுராணம் ஆகும். "சிவனடியே சிந்திக்கும்" எனத் தொடங்கி சிவனடியார் பெருமைகளையும் அவர்களின் பக்திச் சிறப்பினையும் எடுத்துக்காட்டி அவர்கள் இறைவனுடன் கொண்ட அநுபவங்கள், சிவசின்னங்களின் சிறப்புக்கள் ஆகியவற்றின் பெருமைகளையும் பக்தியையும் சமய நம்பிக்கையையும் வளர்க்கும் நூலாக இது காணப்படுகிறது.

இது சோழர் ஆட்சிக்கால பக்தி இயக்க வளர்ச்சி பற்றி எடுத்துக்காட்டுகிறது. இது தமியுக வரலாற்றுக் காவிய நூல் எனவும் அழைக்கப்படுகிறது. இப்பெரிய புராணத்தை பக்திச்சுவை சொட்டச் சொட்டப் பாடியமையினால் "பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடிய சேக்கிழார்" எனச் சிறப்பிக்கப்படுகின்றார். இப்புராணம் சைவ மரபினையும், தலயாத்திரை, இறைவன் பெருமை, கோயில் தொன்மை என்பன எடுத்துக்காட்டிய நிலையில் சிவாகமங்களில் உணர்த்தப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் பாவங்களை அனுட்டித்து முத்தி பெற்ற மெய்யடியார்களின் சிறப்பை விளக்குகிறது. இதனால் சைவத்திற்கும் சிவாலய நித்திய நைமித்தியத்திற்கும், சிவ பூஜைகளுக்கும், சிவ தரிசனத்திற்கும், மகேஸ்வர பூசைக்கும் நியம மந்திரங்களாக அமைந்து சைவத்தின் சிறப்பை உலகத்திற்கு எடுத்துக்காட்டுவதோடு ஆலயத்தின் அருளையும் பக்தியினையும் எடுத்துக்காட்டி இன்னும் சிறப்பான நூலாக விளங்குவது எனலாம்.

-யோ.சிவஉமாகரன்-

பொறாமை கொண்டாரே அல்லல் கொண்டோர்.

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி



-வாரியார் சுவாமிகள் உரையுடன்-

3. வானோ புனல் பார்கனல் மாருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண்டவிடம்
தானோபொரு ளாவது சண்முகனே.

## பதவுரை

சண்முகனே- ஆறுமுகக் கடவுளே!, பொருள் ஆவது- உண்மைப்பொருள் (நித்தியப் பொருள்) என்பது, வானோ- ஆகாயமோ?, புனலோ- தண்ணீரோ?, பாரோ- நிலமோ?, கனலோ- நெருப்போ?, மாருதமோ- காற்றோ?, ஞான உதயமோ- அறிவு தோன்றும் நிலைதானோ?, நவில் நான் மறையோ- ஓதப்படுகின்ற நான்கு வேதங்களோ?, யானோ- யான் என்கிற புருட தத்துவமோ?, மனமோ- மனமோ?, எனை ஆண்ட இடம்தானோ- அடியேனை ஆட்கொண்ட இடமோ? (அறியுமாறு அருள் செய்வீராக)

## பொழிப்புரை

ஆறுமுகக் கடவுளே! உண்மைப் பொருள் நிலமோ? நீரோ? நெருப்போ? காற்றோ? விண்ணோ? மனமோ? அறிவு தோன்றிய நிலையோ? ஓதுகின்ற நான்கு வேதங்களோ? யான் என்கின்ற புருட தத்துவமோ? அடியேனை ஆட்கொண்ட இடமோ? அடியேனுக்கு அருள் செய்வீர்!

## விரிவுரை

### *வானோ புனல்பார் கனல் மாருதமோ:-*

மண், நீர், நெருப்பு, வளி, வெளி என்ற ஐம்பூதங்கள் செய்யுளாதலின் முன் பின்னாக வரிசை மாறி நிற்கின்றன.

ஓ- எதிர்மறை. ஐய வினா என்பாரும் உளர். எதிர் மறைதான் அடிகளார் கருத்து என்பதைப் பின்வரும் கந்தரலங்காரப் பாடலால் தெளிக.

"வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன்று அசரீரியன்று சரியன்றே"

(9ஆவது பாடல்)

ஐம்பூதங்களும், ஐம்பொறிகளும், ஐம்புலன்களும் ஏனைய கருவிகரணங்களும் கடந்த இடத்தில் விளங்குவது உண்மைப் பொருள்.

பூதமும் கரணமும் பொறிகளைம் புலனும்
பொருந்திய குணங்களோர் மூன்றும்
நாதமும் கடந்த வெளியிலே நீயும்
நானுமாய் நிற்குநாள் உளதோ? -பட்டினத்தார்

**ஞானோதயமோ:-**

இங்கு கூறப்பட்ட ஞானம் புறப்பொருளை யறிகின்ற உலக அறிவைக் குறிக்கும். பிரகிருதி தத்துவத்திலுள்ள புத்தி தத்துவமாகும்.

உலக அறிவு பிறக்குமிடம் பிரகிருதி தத்துவத்திலுள்ள புத்தி தத்துவமாகும்.

**நவில் நான்மறையோ:-**

மறை- இரகசியங்களைத் தன்னிடத்தே கொண்டது. ஆதலால் மறையெனப்பட்டது. இது பரம்பரையாக ஆசிரியர் கூறக்கேட்டு ஓதுவது. எழுதாக் கிளவி ஆதலால் நவில் நான் மறையென்றார்.

அன்றியும்; அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களை நவில்வது என்றும் பொருள்படும்.

இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்பவை நான்கு வேதங்கள்.

நான்மறைகளும் அபரஞானமாகிய கருவி அறிவைத் தருவன. ஆதலால் இவைகள் பொருள் அன்று.

**யானோ:-**

யான் என்பது- உயிரானது, காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் தத்துவங்களோடு கூடி அவற்றாலே உலக இன்பத்தை நுகர்வதற்குத் தகுதி பெற்ற புருடன் என்ற பெயரால் வழங்கப்படுகின்ற புருட தத்துவமாகும்.

**மனமோ:-**

மனம் அந்தக் கரணங்களுள் ஒன்று. ஆதலால் மனம் பொருளன்று.

**எனை ஆண்ட இடம்தானோ:-**

நான் எனது என்ற இரு பற்றுக்களும், காண்பான், காட்சி, காட்சிப் பொருள் என்ற திரிபுகளும் அற்ற மோனநிலை இது. தான் என்பது ஆசை.


முன் பாடலில் கூறிய, "எல்லாமற என்னை இழந்த நலம்" என்றதை இங்கே அடிகளார் "எனை ஆண்ட இடம்" என்று குறிப்பிடுகின்றார்.

எனையாண்ட இடம் என்பதற்கு, அடிகளாரை ஆட்கொண்ட இடம், திருவண்ணாமலை என்றும் பொருள்படும். திருமாலும், பிரமனும் "நான் பரம்" என்று அடிமுடி தேடி அயர்ந்து செருக்கு அற்ற இடம் அருணை.

**கருத்துரை**

ஆறுமுகப்பெருமானே! மெய்ப்பொருள் எது? (தொடரும்...

உ




# நரியின் அறிவுரை

காட்டில் இரு மான்கள் புல்மேய்ந்து கொண்டிருந்தன. அந்த இடத்திற்கு அருகில் ஓர் அழகிய நீர்வீழ்ச்சி நீரைக் காற்றில் வாரி இறைத்துக் கொண்டிருந்தது. விலங்குகளுக்கு அந்த நீர்வீழ்ச்சிதான் குளிக்கும் இடம். நீர்வீழ்ச்சிக்கு அருகில் ஓடும் தண்ணீரை விலங்குகள் பறவைகள் போன்றவை குளிக்கவும் குடிக்கவும் பயன்படுத்திக் கொள்ளும்.

யானைகள் அந்த நீர்வீழ்ச்சிக்கு தினமும் கூட்டமாய் வந்து குளிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தன. துதிக்கையில் தண்ணீரை உறிஞ்சி தன்மீதும் உடன் இருக்கும் யானைகள் மீதும் வாரி இறைத்து விளையாடுவது பார்க்கச் சந்தோஷமாய் இருக்கும்.

மான்கள் புல்மேய்ந்து கொண்டிருக்கையில் ஒரு நரி அங்கே வந்தது. வந்த நரி சும்மா இருக்காமல் மான்களை வம்புக்கு இழுத்தது.

"உங்களைப் பார்த்தா ரொம்ப பாவமா இருக்கு" "எதுக்கு?" "எப்ப பார்த்தாலும் இந்தப் புல்லையே தின்னுக்கிட்டிருக்கீங்களே. அதான்."



"இதுதான் நாங்க விரும்பி சாப்பிடற உணவு. இது எங்களுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. நீ எங்களைப் பார்த்து பரிதாபப்பட வேணாம்'' "எங்களைப் பாரு. தினமும் ஒவ்வொரு வகையான மாமிசத்தைச் சாப்பிடறோம். நீங்களும் எங்களை மாதிரி மாமிசம் சாப்பிட கத்துக்கிட்டா என்ன?" மான்கள் இரண்டும் முகத்தைச் சுளித்தன. ''மாமிசம் சாப்பிடறது ரொம்ப பாவம். நீ முதல்ல இந்த இடத்திலே இருந்து போயிடு." இதைக் கேட்ட நரி சிரித்தது. "இதில என்ன பாவம் இருக்குன்னு எனக்குத் தெரியலே." "ஒரு உயிரைக் கொன்னு அதை நாம சாப்பிடறது

எவ்வளவு பாவம் தெரியுமா? அதைக் கொல்லும்போது அதோட மனசும் அதோட அம்மா மனசும் எவ்வளவு கஷ்டப்படும்னு கொஞ்சம் யோசிச்சுப்பாரு. அப்ப உனக்குப் புரியும்."

"சரி, சரி.... உங்ககிட்டே பேசறதுலே ஒரு உபயோகமும் இல்லே. நான் புறப்படறேன்." அங்கிருந்து புறப்பட்ட நரி வழியில் கன்றுக்குட்டிகளைச் சந்தித்தது. மான்களிடம் சொன்னதுபோலவே கன்றுக்குட்டிகளிடமும் மாமிசத்தைச் சாப்பிடச்சொல்லி வற்புறுத்தியது நரி. கன்றுக்குட்டிகளும் மான்கள் சொன்னதுபோலவே "மாமிசம் சாப்பிடுவது தவறு" என்று சொல்லிற்று. நரி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது.

அடுத்தநாள் மான்களும் கன்றுக்குட்டிகளும் சந்தித்துக்கொண்டன. "நேற்று நரியைப் பார்த்தோம். அது எங்களை மாமிசத்தை சாப்பிடச் சொல்லி சொல்லிச்சு." இதைச் சொன்ன கன்றுக்குட்டிகளிடம் மான்கள் கேட்டன. "அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?" "முடியாதுன்னு சொல்லிட்டோம். ஆனா அது சொல்றதும் சரின்னுதான் தோணுது. நாமும் மாமிசத்தை சாப்பிட்டுப் பார்த்தா என்ன?"

"நீங்க சொல்றது ரொம்ப தப்பு. நாம் ஒரு நாளும் அதுமாதிரி நினைக்கக்கூடாது. யானையும் நம்மளை மாதிரி ஒரு விலங்குதான். அது மாமிசம் சாப்பிட ஆரம்பிச்சா என்னாகும்னு யோசிச்சுப்பாரு. இந்தக் கானகமே காலியாகிவிடும். ஒரு உயிரும் மிஞ்சாது. கடவுள் எல்லாத்தையும் சரியாத்தான் படைச்சிருக்காரு." மான்களின் பேச்சு கன்றுக்குட்டிகளின் மனசை தெளிவடைய வைத்தது. அவை மான்களிடம் வருத்தம் தெரிவித்தன.

சில நாட்கள் சென்றன. நரி வேகமாய் ஓடிவந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்த மான் அதை நிறுத்தி விசாரித்தது. "என்னோட குட்டியைக் காணோம். எங்கே தேடியும் கிடைக்கலை. அதான் தேடிப் போய்க்கிட்டிருக்கேன். "சரி, வா நானும் உன்கூட வர்றேன். நாம ரெண்டு பேரும் சேர்ந்து தேடலாம்." நரியும் மானும் சேர்ந்து நரிக்குட்டியைத் தேடின. நீண்ட நேரத் தேடுதலுக்குப் பிறகு ஓர் இடத்தில் நரிக்குட்டி இறந்து கிடந்ததைப் பார்த்தன. அதை ஒரு காட்டுப்பன்றி தின்று கொண்டிருந்தது. நரியும் மானும் வருவதைப் பார்த்த காட்டுப்பன்றி ஓடிப்போனது.

தன் குட்டி இறந்துபோய்க் கிடப்பதைப் பார்த்த நரி அழ ஆரம்பித்தது. மான் அதற்கு ஆறுதல் சொல்லி நரியைத் தன்னுடன் அழைத்துச் சென்றது.

இனி நரி யாரையும் மாமிசம் சாப்பிடச் சொல்லி வற்புறுத்தாது.

| ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விசேட தினங்கள் | ஆனி மற்றும் ஆடிமாத குருபூசை தினங்கள் |
|---|---|
| **ஆனி**<br><br>**28.06.2011 ஆனி 13 செவ்வாய்**<br>**கார்த்திகை உற்சவம்**<br>**பகல் விசேட உற்சவம்** | **05.07. 2011 ஆனி 20**<br>**செவ்வாய்**<br>**மாணிக்கவாசகர் குருபூசை** |

**மற்றவர்களின் வடுக்கள் நமக்குப் பாடமாக அமையவேண்டும்.**

உ

(தொடர்ச்சி...



# கீர்த்தித் திருவகவல்

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
யாழ்ப்பாணம் - காரைநகர்

அந்தண னாகி யாண்டுகொண் டருளி
இந்திர ஞாலங் காட்டிய வியல்பு
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்
ஆங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்
உத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய வியல்பும்
பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்

## பதவுரை:-

அந்தணன் ஆகி ஆண்டு கொண்டு அருளி- அழகிய தண்ணளியையுடைய பார்ப்பன வடிவினனாகி எழுந்தருளி வந்து என்னை அடிமைகொண்டு அருள்செய்து, இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்- மாயவித்தை போன்ற திருவிளையாடல்களைக் காட்டிய தன்மையும்

அந்தணன் என்பது அழகிய தட்பத்தினையுடையான் என ஏதுப்பெயர். இறைவன் அந்தணனாகி ஆண்டுகொண்டருளியமை, "அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட, திருவான தேவற்கே" (கோத்தும்பீ 14) என்பதனாலுமறிக. இந்திரஜாலம் என்பது இந்திரசாலம் என மருவிற்று. இந்திரசாலம் என்பது இந்திரன் தனக்குப் பகைவரான அசுரரை அழிக்கும் பொருட்டுச் செய்த தந்திரங்கள். அவை சிறந்தனவாதல் பற்றி அவை போன்ற மாய வித்தைகளும் இந்திரசாலம் எனப்பட்டன. இறைவன் குருந்தமர நீழலில் அடியார்கள் சூழ மக்கள் வடிவிற் தோன்றி தம்மை ஆட்கொண்டு மறைந்தருளிய தன்மை அடிகட்குப் பெரியதொரு மாயமாய்த் தோன்றியமையின் அதனை 'இந்திரசாலம்' என்றுரைத்தார்.

மதுரை பெரு நல் மா நகர் இருந்து- மதுரையாகிய பெரிய சிறந்த நகரத்தில் எழுந்தருளியிருந்து, குதிரை சேவகன் ஆகிய கொள்கையும்- குதிரை வீரனாய் வந்த கோட்பாடும், ஆங்கது தன்னில் அடியவட்கு ஆக- அம்மதுரைமா நகரத்தில் அடியவளான செம்மனச் செல்வியென்னும் பிட்டு வாணிச்சியின் பொருட்டு, பாங்காய் மண் சுமந்து

அருளிய பரிசும்- முன்னர் கூலி பெற்ற உரிமையோடு மண் சுமந்து அருளிய பண்பும்.

மதுரை மாநகர், பெருமாநகர், நல்மாநகர் எனத் தனித்தனி இயையும். சேவகன்- வீரன். ஆங்கது என்பது அது என்னும் பொருளில் வந்தது. இனி ஆங்கு அது எனப் பிரித்துக் குதிரைச் சேவகனாகியது போல அம்மதுரை மாநகரில் என்றுரைப்பினுமமையும். அடியவள் என்றது செம்மனச் செல்வியை. பாங்கு- உரிமை. இப்பொருட்டாதல் "பாங்கு பால் கிழமை தாய மாட்சி, ஈங்கிவை யைந்து முரிமையாகும்'' என்னுங் திவாகரத்தானுமறிக. முன்னர்ப் பிட்டினைக் கூலியாகப் பெற்றமையின் கூலியாகும் உரிமைபெற்றமையால் 'பாங்காய்' என்றார்.

"கூற்றடுங் கமல பாதர் குறுந்துணிக் கரிய சீரை
யேற்றிடும் பிட்டு வாங்கி யின்புற வமுது செய்து
மாற்றரும் பசியை யன்னே மாற்றினை யினிப்போய் வைகை
யாற்றினின் கூற்றி லுண்டா மருங்கரை யடைப்ப னென்றான்"

(மண்சுமந் 34)

எனத் திருவாதவூரடிகள் புராணத்து வருதல் காண்க.

உத்தரகோச மங்கையுள் இருந்து- உத்தரகோச மங்கை என்னும் ஊரில் இருந்து, வித்தக வேடம் காட்டிய இயல்பும்- ஞானாசாரிய வடிவைக் காட்டிய தன்மையும்.

உத்தரகோசமங்கைக்கண் அடிகள் சென்றபோது குருவடிவினைத் தரிசிக்கப் பெறாமையின் **நீத்தல் விண்ணப்பம்** என்னும் திருப்பதிகத்தினைப் பாடியருள இறைவன் ஞானாசாரிய வடிவத்தினைக் காட்டியமை பற்றி "உத்தரகோச மங்கையுளிருந்து வித்தக வேடம் காட்டியவியல்பும்'' என்றார்.

பூவணம் அதனில் பொலிந்திருந்து அருளி- திருப்பூவணம் என்னும் நகரில் தனக்கு அடியவளாகிய பொன்னனையாள் மனையில் சித்தர் வடிவத்தோடு விளங்கியிருந்து அருள்செய்து, தூ வண மேனி காட்டிய தொன்மையும்- தூய அழகினையுடைய மேனியைக் காட்டிய பழமையும்.

முன்னொரு காலத்திலே திருப்பூவணம் என்னும் நகரில் வசித்துவந்த பொன்னனையாள் என்னும் தாசி தன் குலத்தொழிலால் வரும் வருவாயைச் சிவனடியார்களுக்கு அமுதூட்டச் செலவு செய்து வந்தனள். அங்ஙனம் செய்து வருநாளில் சிவபெருமானுக்கு அழகிய திருவுருவம் அமைத்து வழிபட எண்ணினள். தன் வருவாய் அடியார் பூசனையிற் செலவாகின்றமையின் திருவுருவமைக்கும் எண்ணத்தினை நிறைவேற்ற முடியாது வருந்தி இருக்கையில் அவளது வருத்தத்தினை அறிந்த இறைவன் சித்தர் வேடத்தோடு அவள் இல்லத்திற் புகுந்து உனது மனக்கவலையை அறிந்து யாம் இங்கு வந்தோம்; உன்னிடத்துள்ள இரும்புப் பாண்டங்களை இங்கு கொணர்தியெனப்பணிக்க, அவளும் தன்னிடத்திலுள்ள இரும்புப் பாண்டங்களைக் கொணர்ந்து வைத்தனள். சித்தர் அவற்றில் மருந்தினைப் பூசிப் பரிசித்து இவற்றை அழலிலிட்டு வைக்குதி; நாளை இவைகள் மாற்றுயர்ந்த பொன்னாகும். அதனைக் கொண்டு நீ விரும்பிய திருவுருவத்தை அமைப்பித்து வழிபாடாற்றுதியென அருளிச்செய்து மறைந்தனர். பொன்னனையாள் அவ்வாறே திருவுருவமைத்து வழிபட்டுச் சிவலோகத்தை

அடைந்தனள். இவ்வரலாற்றினை நம்பி திருவிளையாடற்புராணத்துப் பொன்னனையாளுக்கு அருள்புரிந்த திருவிளையாடலிற் காண்க.

பூவணம்- திருப்பூவணம் இது இறைவன் பதியாதல் "பொற்பந்தியன்ன சடையவன் பூவணம்" "எரியொடு மிறை திகழும் பொன்மாப்புரிசைப் பொழிற்றிருப்பூவணம்" எனத் திருக்கோவையாரினும் (305:398) "நான்மறையோன் கழலே சென்று பேணி யேத்த நின்ற தேவர் பிரானிடமாம்.... திருப்பூவணமே" (திருஞான 64.6) "பண்ணிசையார் மொழியார் பலர் பாடப் புண்ணியனா ருறை பூவணம்" (சுந் 11.2) எனத் தேவாரத்தும் வருவனவற்றாலுமறிக.

பொலிதல்- விளங்குதல். "சேணிற்பொலி செம்பொன் மாளிகைத் தில்லைச் சிற்றம்பலத்து" (திருக்கோவை: 23) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. வண்ணம் என்பது வணம் என நின்றது. வண்ணம்- அழகு. "வனப்புஞ் சாந்தமும் குணமும் வண்ணம்" எனப் பிங்கலந்தையில் (10:993) வருதல் காண்க.

(தொடரும்...

## "செந்தமிழ்க் கலைஞானியும், இசைஞானியும்"

அயராத ஆர்வத்துடன் ஆன்மீக விரிவுரைகள் நிகழ்த்தி பேராவலுடன் சமயப்பணி புரிபவர். அறிஞர்கள் சிந்தனையாளர்களோடு நல்லிணக்கமும்- நேசமும்- வாஞ்சையும்- பக்தியும் அடக்கமும் கொண்டு உறவாடி மகிழும் தன்மை கொண்டவர் 'மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள்.

ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் அருளாலே இயற்கையாகவே பக்திநலம் அருளப்பெற்றவர். தமிழிசைபாடும் பேராற்றலோடு இவர் பக்திப் பாடல்களையும் திருமுறைகளையும் உருகிப்பாடும் ஆற்றல் பெற்றவர். தமிழிசை வல்லாளரான குணரத்தினம் சிவானந்தராசா அவர்கள்.

கோப்பாய் ஸ்ரீ காளி அம்மன் தேவஸ்தான மண்டபத்தில் தொடர்ந்து பதினைந்து தினங்கள் சொற்பொழிவாளரும் கவிஞரும்- கல்விமானுமாகிய "மதுரகவி" காரை எம்.பி. அருளானந்தன் அவர்களின் சிறப்புப் பேருரையும், தூய தமிழிசை வல்லாளரான குணரெத்தினம் சிவானந்தராசா அவர்களின் இன்னிசையும் தொடர்ச்சியாக இடம்பெற்றன.

இறுதிநாள் நிகழ்வு 03.05.2011 முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி சண்முகலிங்கன் தம்பதியரின் தலைமையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் மதுரகவி அவர்களுக்கு ***"செந்தமிழ்க் கலைஞானி"*** எனும் சிறப்புப் பட்டமும், இன்னிசை வேந்தருக்கு ***"இசைஞானி"*** எனும் சிறப்புப் பட்டமும் பேராசிரியர் கலாநிதி சண்முகலிங்கன் தம்பதியரால் வழங்கி கௌரவிக்கப்பட்டது எனும் மகிழ்வான செய்தியினை சைவத் தமிழுலகிற்கு அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியும் மனநிறைவும் அடைகிறோம்.

மனநிறைவோடு வாழ்த்தி மகிழ்பவர்,

***கலாநிதி க. நாகேஸ்வரன்*** M.A; P.h.D


அவர்களுடன்

***சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்.***

**முட்டாள்களின் முடிவே அவநம்பிக்கை.**

# வருடாந்த வைகாசிப் பெருவிழா -2011

ஒவ்வொரு வருடமும் வைகாசி விசாகத்தன்று அல்லது அத்தினத்தை நெருங்கி வருகின்ற ஒரு சுப தினத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்து சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் ஆச்சிரம வளாகத்தில் வைகாசிப்பெருவிழா நடைபெற்று வருகிறது.



"அரசம்மா மடத்தில்" ஆச்சிரமம் இயங்கிக்கொண்டிருந்த காலகட்டத்தில் 16.05.1993இல் சந்நிதி ஆலய வீதியில் வைகாசிப் பெருவிழா முதன்முதலாக மங்கள இசை- வாழ்த்துரை- வரவேற்புரை- ஆசியுரை- பண்ணிசை- உரை அரங்கம்- இன்னிசைக் கச்சேரி என நிறைவான நிகழ்வுகளுடன் காலை 8மணி முதல் மாலை 5மணி வரையிலான ஒரு முழுப்பகல் நேர நிகழ்வாக இவ்விழாவின் ஆரம்பகாலம் அமைந்திருந்தது.

சந்நிதியானின் வீதியினில் சிலகாலம் நடைபெற்று வந்த இந்நிகழ்வு, பின்னர் (அரசம்மா மடத்திலுள்ள) ஆச்சிரமத்துக்கு மாறிப் பின்னர் தற்போதைய சந்நிதியான் ஆச்சிரம வளாகத்தில் பிரதி வருடமும் இவ்விழா நடந்தேறி வருகிறது. இவ் விழாக் காலங்களில் அறிஞர் பெருமக்களின் சொற்பொழிவுகளும், கல்லூரி மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும், பண்ணிசைகள்- வில்லுப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெறுவது வழமை. அத்துடன் சமுதாய உதவிப் பணிகளும் இப்பெருவிழா வேளையில் இடம்பெறுகின்றது.

முழுநாள் நிகழ்வாக நடைபெறுவதில் காணப்பட்ட சில அசௌகரியங்களை மனதிற்கொண்டு பின்நாளில் இந்நிகழ்வின் நேர அட்டவணை சில மணித்தியாலமாகக் குறைக்கப்பட்டது. இத்தகைய வைகாசிப் பெருவிழா நிகழ்ச்சிகளுக்கு முத்தாய்ப்பாக வழமையான நிகழ்வுகளுடன் சமயம்- சமூகம்- கல்வி எனப் பல்துறை சார்ந்த சமூகப் பிரமுகர்களும், கற்றறிந்த பெரியோரும்- பெருமக்களும் கௌரவிக்கப்பட்டு வருகின்றனர். கௌரவிக்கப்படும் பிரமுகர்களுக்கு பொன்னாடை போர்த்தப்பட்டு, அவரவர் பட்டம் பொறிக்கப்பட்ட விருதுகளும் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டு வருகின்றனர். இந்த வரிசையில் இதுவரை பத்துப்பேர் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டுக்கான வைகாசிப் பெருவிழா நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம வளாகத்தின் கேட்போர் கூடத்தில் 20.05.2011 வெள்ளியன்று காலையில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வயலின் வித்துவான் திரு அ. ஜெயராமன் அவர்களின் வயலின் வாத்திய இசைக்கச்சேரி விஷேட நிகழ்ச்சியாக இடம்பெற்றது. மிருதங்க வித்துவான் சதா. வேல்மாறன் அவர்களின் மிருதங்கமும், வித்துவான் ஜோன் கவாஸ் அவர்களின் ஆர்மோனியமும் இணைந்து சுருதி கூட்ட தனது வயலின் இசையால் மண்டபம் நிரம்பிய கூட்டத்தினரைக் கட்டிப் போட்டார் திரு ஜெயராமன் அவர்கள்.




"சமுதாயப் பணி" வரிசையில் புத்தூர் யா/ சோமாஸ்கந்தா கல்லூரி மாணவி செல்வி நிரோசா நல்லதம்பிக்கு பெண்களுக்கான புத்தம்புதிய துவிச்சக்கர வண்டியினை வயலின் வித்துவான் அ. ஜெயராமன் அவர்கள் வழங்கிக் கையளிக்கும் நிகழ்வுடன், இளைப்பாறிய ஆசிரியர் திரு ஐ. சண்முகலிங்கம் (குப்பிளான் சண்முகம்) அவர்களின் நன்றியுரையுடன் இவ்வாண்டுக்கான வைகாசிப் பெருவிழா இனிதே நிறைவு பெற்றது.



உ

# சிலப்பதிகாரமும் சிவன் வழிபாடும்

**நா. நல்லதம்பி** அவர்கள்

மிகவும் தொன்மை வாய்ந்த வழிபாடுகளில் சிவன் வழிபாடும் ஒன்றாக விளங்குகின்றமை ஆராய்ச்சியாளரின் முடிபு ஆகும். சங்ககால இலக்கியங்களிலும், ஏனைய இலக்கியங்களிலும் சிவ வணக்கம் கூறப்பெற்றிருப்பது நமது சைவநெறியின் சிறப்பாகும்.

இந்த வகையில், இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தில் சிவன் வழிபாட்டினைப்பற்றிப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளமை காணக்கிடக்கின்றது.

சோழவள நாட்டின் தலைப்பட்டினமாக விளங்கிய காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிழா கொண்டாடப்பெற்ற நாட்களில், அங்குள்ள வேறு பல கோயில்கள் பற்றியும் குறிப்பிடுகின்றார். அப்பொழுது சிவன்கோயிலை முதலில் குறிப்பிட்டுச் சொல்லுவதனால், சிவன் கோயில்களின் பெருமை விளங்குகின்றது.

இந்திரவிழா ஊரெடுத்த காதையில்;

| | |
|---|---|
| "பிறவா யாக்கைப் பெரியோன்' கோயிலும் | (சிவன்) |
| 'அறுமுகச் செவ்வேள்' அணிதிகழ் கோயிலும் | (முருகன்) |
| 'வால்வளைமேனி வாலியோன்' கோயிலும் | (இந்திரன்) |
| 'நீலமேனி நெடியோன்' கோயிலும் | (திருமால்) |
| மாலை வெண்குடை மன்னவன் கோயிலும் | |
| 'மாமுது முதல்வன்' (கோயிலும்)... | (பிரமன்) |

இருந்ததாக இளங்கோவடிகள் காட்டுகின்றார்.

அதேபோல, ஊர்காண் காதையில், 'நுதல்விழி நாட்டத்து இறையோன்' ஆன சிவபெருமான் கோயிலையும், திருமால், பலராமன், முருகன் கோயில்களையும் குறிப்பிட்டுக் கூறியிருக்கின்றார்.

| | |
|---|---|
| 'நுதல்விழி நாட்டத்து இறையோன்' கோயிலும் | (சிவபெருமான்) |
| 'உவணச்சேவல் உயர்த்தோன்' நியமமும் | (கருடக்கொடி- திருமால்) |
| 'மேழிவலன் உயர்த்த' வெள்ளை நகரமும் | (கலப்பை- பலராமன்) |
| 'கோழிச்சேவல் கொடியோன்' கோயிலும் | (முருகன்) |

என்னும் வரிகளில் இளங்கோவடிகள் காட்டுகின்றார்.

வேட்டுவ வரி (மதுரைக் காண்டம்)யில் சிவசக்தியாக விளங்கும் கொற்றவையின் அருளிச் செய்தல் பற்றிக் கூறப்பெற்றிருக்கின்றது. இங்கே, கொற்றவையின் அங்கங்களுக்கு

தொடர்ந்து செய்யப்படாத முயற்சி தோல்வியைத் தரும்.

சிவபெருமானது தோற்றத்தினை உவமித்துக் கூறப்பெற்றிருப்பதைப் பார்க்கலாம். கொற்றவையின் நெற்றி சிவனது சென்னியில் சூடப்பெற்றிருக்கும் பிறைபோன்றது; கண்கள் இமைத்தல் இல்லாதன; பவளவாய்; முத்துப்பல்; (நஞ்சுண்டு) கறுத்த கண்டம்; வளைந்த வில் போன்ற புருவம்; அரவக்கச்சணிந்த மார்பு; சூலம் ஏந்திய கை; சிலம்பும் வீரக் கழலும் அணிந்த பாதங்கள் யாவும் உடையவளான கொற்றவை, எருமைத் தலையும் மனித உடலும் திரண்ட தோளும் கொண்ட மகிடாசுரனை மாய்த்தவள் என்று வர்ணித்திருப்பது காணலாம். பாடல் வரிகள் இதோ.

மதியின் வெண்தோடு சூடும் சென்னி
நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
பவளவாய்ச்சி; தவள வாள் நகைச்சி;
நஞ்சுண்டு கறுத்த கண்டி; வெஞ்சினத்து
அரவு நாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்
துளை எயிற்று உரகக் கச்சுடை முலைச்சி;
வளை யுடைக் கையில் சூலமேந்தி
கரியின் உரிவை போர்த்து அணங்காகிய
அரியின் உரிவை மேகலை யாட்டி
சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாள் கொற்றவை
இரண்டு வேறு உருவில் திரண்ட தோள் அவுணன்
தலைமிசை நின்ற தையல்... (சிலப்பதிகாரம்)

மேலும், செஞ்சடை வானவனான சிவபெருமான் அருளினால் வஞ்சிமாநகரில், இளங்கோவடிகளாரின் தமையனான வஞ்சித் தோன்றிய வானவன்- சேரன் செங்குட்டுவன் தோன்றினான் எனக் கூறப்பெற்றிருப்பதும் காணலாம்.

"செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ" என செங்குட்டுவன் குறிப்பிடப்பெறுகின்றான்.

மதுரைக் காண்டத்தில், மறையோன் ஒருவனிடம் கோவலன், மதுரைக்குச் செல்லும் வழி யாது? எனக் கேட்டபோது, அந்த மாங்காட்டு மறையோன், "சிவபெருமானது திரிசூலத்தைப்போன்று மூன்று வழிகள் பிரியும். அதில் நடுவழியாகச் சென்றால் மதுரை மா நகரை அடையலாம் எனக் கூறுகின்றான்.

"பிறை முடிக் கண்ணிப் பெரியோன் ஏந்திய
அறைவாய்ச் சூலத்து அருநெறி கவர்க்கும்
வலம்படக் கிடந்த வழிநீர் துணியின்
..................................................
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்
அம்மலை வலங்கொண்டு அகன்பதிச் செல்லுமின்"

எனச் சந்தி பிரிந்து போவதை விளக்கத் திரிசூலத்தை உதாரணங் காட்டியவாறு காணலாம்.

எதிலும் நம்பிக்கை இல்லாத மக்களை ஆள முடியாது.

கல்லால மரத்தின் அடியில், சின்முத்திரை காட்டி வீற்றிருக்கும் தென்திசைக் கடவுளான தட்சணாமூர்த்தியை,

"ஆலமர் செல்வன்" என்று குறிப்பிடுவதும், மாதொரு பாகனான சிவபெருமானை வணங்கிச் செல்லுமாறு கோவலனுக்குக் கூறுமுகத்தால் இமைய மலையில் குயிலாலுவம் என்னும் இடத்தில் எழுந்தருளியுள்ள உமையை ஒரு பாகத்தேயுடைய ஒருவனை வணங்கிச் செல்லுமாறு சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பாடியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

இன்னும், சேரன் செங்குட்டுவன், பத்தினித் தெய்வமான கண்ணகிக்குக் கோயில் எழுப்பிப் பிரதிட்டை செய்யத் தொடங்கும்போது, முதலில் சிவபெருமானை வழிபட்டான் என்பதனை இளங்கோவடிகள்,

"இமையவர் உறையும் இமையச் செல்வரைச்
சிமையச் சென்னித் தெய்வம் பரசி.."

என்ற வரிகளால் அறியத்தருதல் காண்போமாக.

இவ்வாறு, சிவன் வழிபாடு மக்களிடையே நிலவியிருந்ததென்பதை இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தின் பல காண்டங்களிலும் குறிப்பிட்டுள்ள பாடல் வரிகளில் சிலவற்றை இங்கு எடுத்துக்காட்டியுள்ளோம். வாசகர்கள் மேலும் முயன்று காப்பியம் முழுவதையும் படித்து அறிவார்களாக. மிகவும் தொன்மை வாய்ந்த ஜனாதன தர்மம் எனப் போற்றப்பெறும் நமது சைவநெறியின்பால் சிலப்பதிகார காலத்திலும் அதற்கு முன்னரும் மக்கள் கொண்டுள்ள பக்தி நிலையையும் நாம் உணர்வோமாக.

## கட்டுரையாளர் கவனத்திற்கு.....



தயவு செய்து,

1. தங்களது ஆக்கங்களை தெளிவான கையெழுத்திலோ அல்லது கணனியிற் தட்டச்சு செய்தோ அனுப்பவும்.
2. தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதவும் / தட்டச்சு செய்யவும்.
3. தங்களின் ஆக்கங்களுடன் தொலைபேசி இலக்கம், விலாசம் ஆகியவற்றைத் தவறாது குறிப்பிடவும்.

—பேரவையினர்—

பெரியதோர் எண்ணத்தைச் சிறிய சொற்கள் ஊறு செய்வதில்லை.


# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| Dr. T. ஸ்ரீஸ்கந்தராசா | | லண்டன் | 10000. 00 |
| வா. மனோகரன் | | தொல்புரம் | 1000. 00 |
| க. சிவலிங்கம் | பத்மாலயம் | உரும்பராய் | 1500. 00 |
| திரு கார்த்திகேசு ஆசிரியர் நினைவு | | முறிகண்டி | 10000. 00 |
| ரேகா ஜெகதீஸ்வரன் | | கரவெட்டி | 2000. 00 |
| செல்வி அம்பிகாவதி கந்தையா | பொற்பதிவீதி | கொக்குவில் | 10000. 00 |
| திரு அப்புத்துரை | | வசாவிளான் | 1000. 00 |
| சி. சிறிஸ்கந்தராசா | | நவிண்டில் | 4500. 00 |
| மகேஸ்வரன் கவிதா | | புத்தூர் (கனடா) | 10000. 00 |
| சுமதி குடும்பம் | | கனடா | 14625. 00 |
| நாகமுத்து ராஜேஸ்வரி | ஓட்டுமடம் | யாழ்ப்பாணம் | 10010. 00 |
| நளினி இராசேந்திரம் | தேவிவாசகம் | கொக்குவில் | 10000. 00 |
| பா. சத்தியதீபா | | கொக்குவில் (கனடா) | 10000. 00 |
| S. மணிவாசகன் | | கொழும்பு | 8000. 00 |
| S. சிவஞானராஜா | k.k.s வீதி | மல்லாகம் | 10000. 00 |
| சிவசண்முகநாதன் லிங்கேஸ்வரி | சுதுமலை வடக்கு | மானிப்பாய் | 4மூடை அரிசி |
| V. முருகவேள் | நெடியகாடு | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| திருமதி திரவியநாதன் | | சுழிபுரம் | 1000. 00 |
| ச. தம்பாப்பிள்ளை | கல்வளை | சண்டிலிப்பாய் | 3000. 00 |
| பா. அன்னஞானம் | | சுழிபுரம் | 1000. 00 |
| திரு மகாலிங்கம் | ஜானகிலேன் | கொழும்பு | 1000. 00 |
| ம.க. ஸ்ரீதரன் | | மானிப்பாய் | 1000. 00 |
| கந்தையா அன்னம்மா | | மட்டுவில் வடக்கு | 2000. 00 |
| நா. நல்லதம்பி | | மட்டுவில் கிழக்கு | 2000. 00 |
| வ.க. சாம்பசிவம் குடும்பம் | | | 2000. 00 |
| க.இ. பாலசுந்தரம் கார்த்திகேசன் | | ஆனைக்கோட்டை (கந்தஷஷ்டிகாலம்) | 35000. 00 |
| பஞ்சலிங்கம் ரகுபரன் | சோமசுந்தரம் வீதி | ஆனைக்கோட்டை | 10000. 00 |
| பொ. பாலசுப்பிரமணியம் | கமலாம்பிகை பவனம் | இணுவில் | 10000. 00 |
| P. சதானந்தன் | | வவுனியா | 500. 00 |

| | | | |
|---|---|---|---|
| இ. சந்திரசேகரன் | | ஏழாலை | 1000. 00 |
| K.V. துரைசாமி | | மயிலிட்டி | 3000. 00 |
| திருமதி நளினி ரத்னசிங்கம் | | கொழும்பு | 1000. 00 |
| தங்கராசா சட்டத்தரணி | புலோலி | பருத்தித்துறை | 1000. 00 |
| மோ. நிருஜா | | கனடா | 100டொலர் |
| பாலா செல்வம் (கடை) | | கனடா | 1100. 00 |
| தேவகி சந்திரப்பிரகாசம் | கல்லூரி வீதி | ஆத்தியடி | 5000. 00 |
| க. சிவப்பிரியா | எழிலகம் | ஏழாலை | 2000. 00 |
| பூ. அகமணிதேவர் | | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| நேசமலர் வேலுப்பிள்ளை | | உடுப்பிட்டி | 20000. 00 |
| சி. மோகன் (மகேஸ் நினைவாக) | | லண்டன் | 10000. 00 |
| சோதீஸ்வரன் பாலநந்தினி | | வல்வெட்டி | 5000. 00 |
| திரு சிவனேசன் | | பருத்தித்துறை | 10000. 00 |
| ச. ரவீந்திரன் | ஐயனார் வீதி | சுண்ணாகம் | 1மூடை அரிசி |
| செ. சோமஸ்கந்தர் | | நல்லூர் | 1மூடை அரிசி |
| திரு செந்தில்ராஜக்குருக்கள் | | துன்னாலை தெற்கு | 15000. 00 |
| S. முரளிதரன் | கொக்குவில் மேற்கு | கேணியடி | 1000. 00 |
| திரு தேவகாந்தன் குடும்பம் | | அமெரிக்கா | 4000. 00 |
| ந. அம்மாப்பிள்ளை | | சிறுப்பிட்டி தெற்கு | 1000. 00 |
| சு. செல்வராஜா | | சுண்ணாகம் வடக்கு | 500. 00 |
| M. சதாசிவமூர்த்தி | | கனடா | 100 டொலர் |
| அ. தம்பிஐயா | | கொக்குவில் மேற்கு | 2000. 00 |
| நா. கண்ணம்மா | | மானிப்பாய் | 1000. 00 |
| K. புவனேந்திரன் | | அல்வாய் | 4000. 00 |
| அ. குலேந்திரன் | | கனடா (11 மாதம்) | 22000. 00 |
| சு. ஆனந்தகிருஸ்ணன் | | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| செல்வி க. சிந்துளா (மக்கள் வங்கி) கன்னாதிட்டி | | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| செல்வி த. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சி. புவனகுமார் | | உடுப்பிட்டி | 15000. 00 |
| சி. சிவச்செல்வம் | | ஏழாலை | 500. 00 |
| ஹரிஸ் ராஜேஸ்வரன் | | அவுஸ்திரேலியா | 2500. 00 |
| திருமதி இரத்தினசபாபதி | புலவனார் வீதி | கல்வியங்கடு | 1000. 00 |
| செ. சூரியகுமார் | | இன்பர்சிட்டி | 3000. 00 |
| அமலநாதன் கந்தையா குடும்பம் | | கனடா | 100 டொலர் |
| சபாநாயகம் சிவகுமார் | சுழிபுரம் மேற்கு | சுழிபுரம் | 10000. 00 |
| இ. துரைசிங்கம் இளை. G.S | | ஆவரங்கால் | 1000. 00 |
| பத்மினி பாலசுந்தரம் | | லண்டன் | 5000. 00 |

(தொடரும்...

உ



## பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் வியத்தகு பன்முகப் பணிகள். ஆங்கிலேயர்களும் வியந்து போற்றுமளவிற்கு முன்னெடுக்கப்படும் அதன் தமிழ், சமய, சமூகச் செயற்பாடுகள்

முு.க.மாசிலாமணி அவர்கள்

### "சைவ சமயக் கருத்துணர்வினூடாகச் சமூகசேவை".

### "Community Service Through Hindu Concern"

என்ற தாரக மந்திரத்தை அடிநாதமாகக் கொண்டு மேலைத்தேயப் பண்பாட்டின் இருப்பிடமான பெரிய பிரித்தானிய மண்ணில் 1977 ஆவணியில் ஆரம்பிக்கப்பட்டதே "பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம்." அறுபது எழுபதுகளில் உயர்கல்வி, உயர்தொழில் வாய்ப்புகளுக்காகத் தாய்நாட்டிலிருந்து புலம் பெயர்ந்து பிரித்தானியாவில் குடியேறியவர்களில் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தில் சேர்ந்து செயற்பட்ட ஆற்றலும் நல்லனுபவமும் பெற்ற நல்லுள்ளங்கொண்ட சில அன்பர்களின் அயராமுயற்சியினால் கொழும்புச் சங்கத்தின் கிளைச் சங்கமாக உருவானதே பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம். பெரிய பிரித்தானியாவில் பெருமெண்ணிக்கையில் ஈழத் தமிழரோ அல்லது சைவக்கோயில் போன்ற நிறுவனங்களோ குறிப்பிடும்படியாக இல்லாதவொரு கால கட்டத்தில் இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்ட இச்சங்கம் ஆரம்பத்தில் பஜனை, பிரார்த்தனைக் கூட்டங்கள், தைப்பொங்கல், வருடப்பிறப்பு, நவராத்திரி போன்ற பூசை வழிபாடுகளைச் சிறு அளவில் அங்கத்தவர்களின் இல்லங்களில் நடாத்தி வந்தது.

சங்கம் ஆரம்பிக்கப்பட்டபோது நல்லநாள், சுபமுகூர்த்தம் என்பன பார்த்து அத்தகைய சிறந்தநாளில் ஆரம்பித்தார்களோ என்று கூறுமளவிற்கு இச்சங்கத்தின் அமைப்பாளரும் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் முக்கிய உறுப்பினருமாகவிருந்து நற்பணி புரிந்தவருமான அன்பர் வ.இ. இராமநாதன் அவர்களால் திருவிளக்கேற்றி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம் தனது சேவைகளைப் படிப்படியாக விஸ்தரித்துச் சிறப்பாகச் செயற்பட்டது. எண்பதுகளில் குறிப்பாகத் தொண்ணூறுகளில் தாய்நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் குடியேறிய

இலங்கைத் தமிழர் கணிசமாக அதிகரித்துச் செல்லச்செல்லப் பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம் ஏற்படுத்திய விழிப்புணர்வும்- அதன் செயற்பாடுகளும்- முன்னோடியாக அமைய பிரித்தானிய மண்ணில் பல சைவக் கோயில்கள் தோற்றம் பெற்றன. இன்று இங்கிலாந்தில் குறிப்பாக இலண்டன் மாநகரில் பல சைவக் கோயில்கள் நிர்மாணிக் கப்பட்டுப் பூசை, வழிபாடுகள் நியமந்தவறாது கிரமமாக நடைபெற்று வருகின்றன. பிரித் தானியாவில் சைவக் கோயில்களும் நிறு வனங்களும் தோன்றி சைவமுந் தமிழும் சைவப் பண்பாடும் வளர "பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கமே" உந்து சக்தியாக அமைந்தது எனப் பெருமையுடன் கூறலாம்.

மேலைநாட்டு நாகரீக மோகத்திற்கு அடிமையாகித் தமது மொழி, சமயம்,

முன்னேற்றச் சங்கம் தனது திட்டமிட்ட பல செயற்பாடுகளினால் ஓரளவுக்காயினும் கட்டுப்படுத்திச் சைவத் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களைக் கைக்கொள்ள வழிகாட்டு கின்றது. சைவ சமயக் குரவர்களான "நால் வர் நெறியே நமக்குகந்த நெறி" எனக் கொண்டு 1. நால்வர் தமிழ்ப் பாடசாலை, 2. நால்வர் கலை நிலையம், 3. நால்வர் முதியோர் நிலையம் எனப் பல அமைப்புக் களை நிறுவிப் பெரும் பணியாற்றுகின்றது. நால்வர் தமிழ்ப் பாடசாலையில் ஆரம்பப் பிரிவு, கீழ்ப் பிரிவு, மத்தியபிரிவு என மூன்று தரங்களில் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட தமிழ்ப்பாட நூல்கள், செயல்நூல்கள் ஆகி யன மூலமாகச் சிறந்த முறையில் தமிழ் மொழியும் சைவமும் கற்பிக்கப்படுகின்றது. இப்பாட நூல்களின் தரச்சிறப்புக் காரணமாக



பண்பாடு, வாழ்வியல் விழுமியங்கள் அனைத் தையும் அறவே புறந்தள்ளி வாழ்ந்து கொண்டிருக்குந் தமிழ் இளைஞர்களின் வாழ்க்கைப் போக்கினைப் பிரித்தானிய சைவ

இப்பாடசாலை தவிர்ந்த பிரித்தானியாவில் வாழும் ஏனைய தமிழ் மாணவர்களுக்கும் தமிழ், சைவம் கற்பிக்கப் பிரித்தானிய சைவமுன்னேற்றச் சங்கத்தினரால்

தயாரிக்கப்பட்ட இத்தமிழ் நூல்களே பயன்படுத்தப்படுகின்றன.

நால்வர் கலைநிலையத்தில் பண்ணிசை, கர்நாடகம், இசை, வாத்தியக் கருவிகளை இயக்குதல் ஆகியன கற்பிக்கப் படுவதுடன் கலைவிழாக்களை நடாத்தி மாணவர்கள் தங்கள் கலைத்திறனை வெளிப் படுத்தவும் திறன்மிக்க கலைஞர்களின் நிகழ்வுகளை ஏற்பாடு செய்து மாணவர்கள் அவற்றினைப் பார்த்தும் கேட்டும் தமது திறனை வளர்த்துக் கொள்ளவும் மாதாந்த கூட்டு வழிபாடு, சமய குரவர் குருபூசைகள், அறிஞரின் சொற்பொழிவுகள் ஆகியவற்றினை இடம்பெறச் செய்வதன்மூலம் மாணவர்கள் தமது தமிழ் அறிவையும் கலைத்திறனையும் பெருக்கிக் கொள்ளவும் அரிய வாய்ப்புக் களை ஏற்படுத்திக்கொடுக்கின்றனர். தரையில் அமர்ந்தபடி சொற்பொழிவினைக் கேட்கும் "யாழ்ப்பாணக் கலாச்சாரம்" இங்கு மிகச் சிறப்பாகப் பின்பற்றப்படுகிறது. மேலைநாட்டில் வாழ்ந்தாலும் தங்களுடைய சொந்த வாழ்வியல் விழுமியங்களைக் கைவிடாமல் கைக்கொள்வதில் எவ்வளவிற்கு அதீத பற்றும் அக்கறையும் கொண்டிருக்கிறார்கள் என்பதனை இது உணர்த்துகிறது.

உடல், உள ரீதியாகப் பாதிக்கப் படக்கூடிய வெளிநாட்டுச் சூழலில் வாழும் முதியவர்களுக்கு மகிழ்வான மனநிறை வையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத் தையும் ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் 1994இல் சைவ முன்னேற்றச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட "நால்வர் முதியோர் நிலை யம்" சமய, இலக்கிய, மருத்துவக் கருத் தரங்குகள், ஒன்றுகூடல் நிகழ்வுகள், முதி யோருக்கான சுற்றுலாக்கள் என நல்ல பல திட்டங்களைச் செயற்படுத்தி முதியோர்கள் மகிழ்ச்சியாக வாழ வழிகாட்டுகின்றது.

இனியதமிழ் வளர்த்த நால்வர் வழியில் ஈசன்நெறி பரப்பவும் நற்றமிழ் வளர்க்கவும் வழி தவறிச் செல்லும் இளஞ் சிறார்களை நல்வழிப்படுத்தவும் என "கலசம்" என்னும் காலாண்டிதழ் 1993 தையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு இலவசமாக வழங்கும் சைவமுன்னேற்றச் சங்கத்தின் பணி போற்றுதற்குரியது. இளைஞர்களை ஈர்க்கும் வகையில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் கட்டுரைகள், சமய உண்மைகளை வெளிக்கொணரும் சித்திரக் கதைகள், சிறுவர் பகுதி, பரிசுப் போட்டிகள் எனப் பலவற்றை உள்ளடக்கிய இக் "கலசம்" பிரித்தானியாவிலிருந்து வெளி வரும் தரமானதொரு தமிழ்ச் சஞ்சிகை யாகும்.

தியான வசதிகளுடனான யோகா நிலையம் அமைக்கப்பட்டு யோகாசன வகுப் புக்கள், தியானப் பயிற்சி ஆகியவையும் அவை தொடர்பான விளக்கங்கள், செய் முறைப் பயிற்சிகள் என்பனவும் கிரமமாக இடம்பெற்று வருகின்றன. அந்த நிலை யத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலுமான ஆயிரத்திற்கு மேற்பட்ட நூல்களைக் கொண்ட நூல் நிலையமும் அமைக்கப் பட்டுள்ளது.

இவ்வுலகில் ஒரு உயிரின் பிறப்பு நிகழ்வுபோலவே அவ்வுயிர் உடலிலிருந்து நீங்குவதனையும் மிக முக்கியமாகக் கரு தும் தமிழ் மக்களுக்குப் புலம்பெயர்ந்த நாடுகளில் அவை சார்ந்த சடங்குகள் சம்பிர தாயங்களுக்கமைவாக அக்கருமங்களைச் செவ்வனே நிறைவேற்றப் பொருத்தமான ஆளணி வசதிகளின்றி அல்லற்படும் பிரித் தானிய வாழ் தமிழ் மக்களுக்குப் பிரித் தானிய சைவ முன்னேற்றச் சங்கம் கை கொடுத்துதவுகின்றது. இறப்பு

எய்தியவர்களுக்குச் சைவ ஆசார நடை முறைப்படி சமயகுரு ஒருவர் மூலம் ஈமச் சடங்கு, அஞ்சலி, இறுதியாத்திரை, அந்தி யேட்டி, வருடாந்த சிரார்த்தம் போன்ற கிரியை களைச் செய்யக்கூடிய வசதியினை ஏற்படுத் திக் கொடுத்துள்ளதுடன் இறப்பு நிகழ்ந்த துக்க வீட்டுக்கு சங்கத்தினர் தாமே நேரிற் சமூகமளித்து இறுதிக்கிரியைகளை ஒழுங்கு முறைப்படி நடாத்துவதற்கான வழிகாட்டல் களை வழங்கியும் ஆத்மா ஒன்றின் இறுதி யாத்திரை வரை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுதாபம் காட்டி ஆறுதல் கூறித் துய ரினைப் பகிர்ந்துகொள்ளும் சைவ முன்னேற் றச் சங்கத்தின் இப்பணியினைத் தமிழ் மக்கள் மட்டுமன்றிப் பிரித்தானியரும் வியந்து பாராட்டு கின்றனர்.

பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம் தனது தாய்நாட்டுச் சகோதரங் களுக்கும் குறிப்பிடத்தக்க சேவைகளைச் செய்துவருகின்றது. கல்முனையில் சுனாமி யால் பாதிக்கப்பட்ட பெற்றோரை இழந்த குழந்தைகளைச் சைவ முறைப்படி பரா மரிக்கவென "நால்வர் கோட்டம்" என ஒரு அமைப்பை உருவாக்கிச் செயற்படுத்து கின்றது.

சங்கத்தின் 2002 வெள்ளிவிழாப் பரிசாக நிதி திரட்டித் தாய்நாட்டில் பெரும் பாதிப்புக்குள்ளான பெண்களுக்குதவும் "தங்கத்திட்டம்" என்ற பெயரில் ஆரம்பிக் கப்பட்ட திட்டத்தின்கீழ் (1). தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் (2). மட்டக் களப்பு மங்கையர்க்கரசி மகளிர் இல்லம் (3). திருகோணமலை அன்பு இல்லம் ஆகிய நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப் பட்டுள்ளன.

இவ்வாறு கடந்த 32 ஆண்டு களுக்கு மேலாகச் சிறுவர் முதல் பெரியோர் வரை பிரித்தானியாவில் வாழும் தமிழர் முதல் தாய்நாட்டுத் தமிழர்வரை பயன் பெறும் வகையில

1. இளைஞர்களுக்குத் தமிழ், சமயம், கலைகள் கற்பித்து,
2. முதியோருக்குப் பரிவுடனான பணி செய்து,
3. தமிழர் கலைகள், பண்பாடு, சமயம் பேணி வளர்த்து,
4. "கலசம்" மூலம் சைவசமய உண்மைகளை வெளிக்கொணர்ந்து மேலை நாட்டினரும் விளங்கிக்கொள்ள வழிகாட்டி,
5. இறைபதம் அடைந்தவர்க்குச் சைவமரபுப்படி அஞ்சலி செய்து
6. சைவமும் தமிழும் நிலைபெறச் செய்த நாயன்மாரை நினைவு கூர்ந்து,
7. தாய்நாட்டுச் சகோதரர்களையும் அரவணைத்து

ஆங்கில நாட்டில் சைவமும் தமிழும் தமிழர் பண்பாடும் சிறந்து வளரப் பிரமிக்கத்தகு பணியாற்றும் பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் தன்னலங்கருதாப் பெருஞ் சேவைகளைப் பிரித்தானியாவாழ் தமிழர்கள், பிரித்தானிய இந்துக்கோயில்களின் அறங்காவலர்கள், பிரித்தானிய அரசின் முக்கிய பிரமுகர்கள் எனப் பலரும் சங்கம் பற்றிய தமது உள்ளத்துணர்வுகளை ஏகோபித்த குரலில் பாராட்டுக்களாகவும், வாழ்த்துக்களாகவும் சங்கத்தின் வெள்ளிவிழா, முப்பதாண்டு விழா ஆகிய நிகழ்வுகளின்போது தெரிவித்துள்ளனர்.




மூ. சிவலிங்கம் அவர்கள்

## இணுவில் கந்தசுவாமி கோயில்

இணுவில் கிராமத்தில் செந்தமிழும், சிவநெறியும், பல்கலையும் இயற்கையாலும் சான்றோர்களின் நெறிப்படுத்தலினாலும், கலைஞர்களின் ஆர்வத்தினாலும், மக்களின் அயராத ஆழ்ந்த பக்தியினாலும் சிறப்புற்று விளங்குகிறது. இக் கோயில் இக்கிராமத் துக்கு வேறு இணையில்லாத காரணமாக அன்று "இணையிலி" என்று பெயர் பெற்றது. இப்பெயர் காலப்போக்கில் மருவி "இணுவில்" என அழைக்கப்படுகிறது.

இங்கு இயற்கையாகவே பல வளங் களும் மிகுந்து காணப்படுகின்றன. இக் கிராமம் முழுவதும் எங்கு பார்த்தாலும் பெரு விழாக்கள், அலங்கார உற்சவங்கள் நடை பெறும். இருபத்தொரு ஆலயங்களும் எண் ணற்ற சிறு வணக்கத்தலங்களும் வியாபித் துள்ளன. இக்கிராம மத்தியில் அருகருகே அருளாட்சி புரியும் அண்ணன் கணேசனும் தம்பி கந்தனும் குடிகொண்டுள்ளனர். இச் சூழல் மிகப்புனிதமான புண்ணிய பூமியாகும். இங்கு தெய்வீக அலை வீசிக் கொண்டிருக் கும்.

இணுவில் கந்தசுவாமி கோயில் காலத்தால் முற்பட்ட சரித்திரப்புகழ் பெற்றது. இணுவிலை ஆட்சிசெய்த செகராசசேகர மன்னனின் மைத்துனர் அரசகேசரி அன்று தமிழ்ச்சங்கம் அமைத்துப் பல அபிவிருத் திகளை மேற்கொண்டார். இத்தமிழ்ச் சங்கத் துக்கு இணுவில் கந்தசுவாமி கோயிலின் பேரில் சங்குவேலியில் தருமசாதனம் செய் யப்பட்ட வயற்காணி இருந்தது. இன்றும் வருடா வருடம் வயலின் குத்தகை நெல்லை இக் கோயிலுக்குக் கொண்டுவந்து தருகின்றனர். இவ்வாறு யாழ்ப்பாண வைபவமாலையிலும் பதிவாகியுள்ளது. பின்னர் வந்த பேராயிர முடையோன் முதலி என்பவர் இம்மண்ணை அறநெறி பிசகாது நிர்வகித்து வந்தார். இவரது பரம்பரை சார்ந்த கனகராசா முதலி என்பவரின் நிர்வாக காலத்திலும் அறநெறி யும் நற்பணியும் சிறப்படைந்தது. மக்களும் இன்புற்று வாழ்ந்தனர்.

ஒரு இரவு இவ்வாலயம் அமைந் துள்ள சூழலில் (கனகராசமுதலியின் இல்லிடம்) தீப்பிளம்பொன்று தோன்றியது. இதுகண்ட மக்கள் கனகராச முதலியின் நெற்போர் தீப்பற்றியதாக எண்ணி நாற்றிசை யிலிருந்தும் அங்கு சூழ்ந்தனர். அங்கு எது வித அசம்பாவிதங்களையும் காணாது கனக ராசா முதலியாரிடம் தமது நிலையைத் தெரிவித்தனர். அவர் தான் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சமயம் இரு அந்தணச் சிறுவர் கள் தாம் காஞ்சியிலிருந்து வந்ததாகவும்,

தம்மை ஆதரிக்குமாறு கேட்டதும் மறைந்து விட்டனர் எனவும் தமது குலதெய்வமான காஞ்சிப்பதி குமரகோட்டத்துக் கந்தப் பெருமானே தமக்கும், தம் மக்களுக்கும் நல்லருள் புரியும்பொருட்டு நேரில் வந்து காட்சி தந்ததாகவும் மனம் நெகிழ உரைத்தார்.

கனகராச முதலியின் இன்னுரை கேட்ட மக்கள் அவ்விடத்தில் முருகப்பெருமானுக்கும், வைரவப் பெருமானுக்கும் குடிசைகள் அமைத்து வழிபட்டனர். அந்நிய நாட்டவரின் வருகையால் இவையாவும் தகர்ந்தன. 1661ஆம் ஆண்டில் இணுவிலில் வாழ்ந்த பெருங்குடிமகனான குழந்தையர் வேலாயுதரின் கனவில் தோன்றிய முருகப் பெருமான் தான் காஞ்சியிலிருந்து வந்ததாகவும், தம்மை ஆதரிக்குமாறும் கேட்டுக்கொண்டார். அத்துடன் அச்சூழலிலுள்ள வெற்றிலைத் தோட்டத்தின் நடுவே காணப்படும் நொச்சி மரத்தின் அருகே தமது அமைவிடத்தில் ஒரு காலடி பதிந்துள்ளதாகவும் தெரிவித்து மறைந்துள்ளார். அதிகாலை துயிலெழுந்த வேலாயுதர் முருகப்பெருமான் குறிப்பிட்ட இடத்தை நோக்கினார். அவ்விடத்தில் வெற்றிலைத் தோட்டத்தின் நடுவே தோன்றிய புதியதொரு நொச்சி மரத்தருகே காலடையாளம் கண்டு முருகன் புகழை எண்ணி வியந்தார்.

இவ்வற்புதத்தை உணர்ந்த குழந்தையர் வேலாயுதர் ஓர் சுபவேளையில் அவ்விடத்தில் புனிதமான குடிலமைத்து முருகப் பெருமானை வழிபட்டு வந்தார். இவ்வாறு வழிபட்டு வந்த இடம் "நொச்சியொல்லை மிதியன்" என்னும் காணிப்பெயராக அமைந்தது. இதனையறிந்த பொதுமக்களும் வியந்து உள்ளன்போடு அலையலையாக வந்து முருகனை வழிபட்டனர். பூசை வழிபாடு வேலாயுதராலும் தொடர்ந்து மகன் அருணாசலம் என்பவராலும் நெறிப்படுத்தப்பட்டது.

பக்தி மேலீட்டினால் சிறுகோயில் செங்கட்டியாலான கோயிலாக மாறியது. இவர்களது சந்ததியினரே அறங்காவலராக இருந்து பரிபாலித்தனர். முருகப்பெருமான் தமது திருக்கோயில் சிறப்புறும் வண்ணம் பல அடியார்களின் கனவில் தோன்றித் தமது திருப்பணிகளைச் செய்வித்தார். செங்கற்கோயில் வைரமான வெள்ளைக் கற்களால் சிறப்புற அமையப்பெற்ற மூன்று தள வாசற்கோபுரமும் பூர்த்தியாகி 1840ஆம் ஆண்டு கோயில் குடமுழுக்காட்டப்பட்டு நித்திய பூசைகள் ஆரம்பமானது.

பூசைக் கிரமங்களைக் காஞ்சியிலிருந்து வரவழைக்கப்பட்ட திம்மசேனர் என்னும் சிவாச்சாரியார் பொறுப்பேற்றார். தொடர்ந்து புங்குடுதீவைச் சேர்ந்த சரவணை ஐயர் பூசைப்பணியை ஏற்றார். தமது கடமையைப் பக்திபூர்வமாகச் செய்துவரும் குருக்கள் தமக்கென ஒரு சற்புத்திரனைத் தருமாறு முருகனை வேண்டினார். தமது கோரிக்கைக்கமைவாக இத்திருத்தலத்திற்கென ஆறுமுகப்பெருமானின் திருவுருவச் சிலை செய்து தரவும் முற்பட்டார். இவரது பணி நிறைவேறவில்லை. முருகப்பெருமான் குருக்களின் கனவில் தோன்றித் திருச்செந்தூர் முருகனின் சாயலில் யாழ் நகரில் வதியும் சிற்பாசாரியாரின் விபரத்தைக்கூறி அவர் மூலம் செய்விக்குமாறு அருளினார். முருகப்பெருமானின் ஆலோசனைப்படி ஆறுமுகப்பெருமானின் அற்புதமான திருவுருவச் சிலை அமைந்தது. ஆறுமுகப்பெருமான் தமது சிறப்பு விழாக் காலங்களில் வீதியுலா வந்த மக்களுக்கு காட்சி தருகிறார்.

இணுவிலைச் சேர்ந்த விவசாய வாலிபன் சுப்பிரமணியம் தமது குடும்ப

ஆநிரைகளைக் காரைக்கால் பகுதியில் மேய்த்து மாலையில் வீடுபோய்ச் சேர்வார். மதிய உணவைத் தாயார் கொண்டு சென்று வழங்குவார். ஒருநாள் தெய்வ சித்தமாக மதிய உணவை எதிர்பார்த்த சுப்பிரமணியம் பசியுடன் உறங்கி விட்டார். பூர்வீகத் தொடர்பில் அவரைப் பிரகாசிக்க வைப்பதன் பேரில் காரைக்கால் பதியில் உறைந்த மாரியம்மன் தன் பிள்ளை பசியாற வேண்டியதால் தாமே அவரின் தாயின் உருவில் வந்து திருவமுது அளித்தார். அவ்வமுதினை உண்டவர் பெருஞ்சித்தரானார். துறவறம் மேற்கொண்டு சிவப்பணி, சமய சமூகப்பணியில் ஆர்வமுடன் தம்மை அர்ப்பணித்தார்.

இச்சந்நியாசியாரின் பணியின் தூய்மையைக் கண்ட இணுவில் கந்தப்பெருமான் அவரின் கனவில் தோன்றித் தமது வீதியுலாவின் அலங்காரப் பவனிக்காக ஓர் சிறந்த மஞ்சம் அமைக்குமாறு கூறினார். மேலும் தமக்கு அமைய வேண்டிய மஞ்சத்தின் வடிவமைப்பையும் அழகிய சித்திரருபத்திற் காட்டி மறைந்தருளினார். முருகனின் அன்புக் கட்டளையையும், மஞ்சத்தின் வடிவமைப்பும் அவரின் நெஞ்சத்தில் ஆழப்பதிந்தது. இச் செய்தியைத் தமது அடியார்களுடன் பகிர்ந்து பணியாற்ற முற்பட்டார். வேண்டிய தரமான மரங்கள் குவிந்தன. தமிழகத்திலுள்ள சிற்பாசாரியாரிடம் சந்நியாசியாரின் கோலத்தில் சென்ற முருகப்பெருமான் இணுவிலில் மஞ்சம் செய்ய வருமாறு அழைத்து வந்துசேரும் மார்க்கத்தையும் கூறி மறைந்தார். சிற்பியும் இவ்விடம் வந்தபோது முருகப்பெருமான் வரவழைத்த பெருமையை எண்ணி யாவரும் வியந்தனர்.

உலகிலேயே மிகப் பிரமாண்டமானதும், பல்வேறு காட்சிகளையும் சிலை வடிவில் அமைத்து சித்திரகூடமாக வெள்ளோட்டத்துக்கு வர நான்கு வருடங்கள் நீடித்தது. அற்புதமான தோற்றமும், அழகும், கலையம்சமும் கொண்ட இவ்வரிய மஞ்சம் இணுவில் கந்தசுவாமி கோயிலின் வருடாந்தப் பெருவிழாவின் பன்னிரண்டாம் திருவிழாவிலும் தைப்பூசத்தினத்திலும் பவனி வருகிறது. இக்கண்கொள்ளாக் காட்சியை நாட்டின் நாற்றிசையிலுமுள்ள பல்லாயிரக் கணக்கானோர் தரிசித்து முருகனருளை வியக்கின்றனர்.

இத் திருக்கோயில் காணியின் பெரு நிலப்பரப்பால் - கட்டட விசாலத்தால் ஏனைய கோயில்களிலும் பெரியதாகவே அமைந்துள்ளதால் யாவரும் இதனைப் "பெருங்கோயில்" என்றே அழைப்பர். இக் கோயிலோ மிகப்பெரியது. அமைந்த மஞ்சமோ உலகப்பிரசித்திபெற்ற பிரம்மாண்டமானது. கந்தஷஷ்டி காலத்தில் போருக்கு வரும் சூரனோ மிகப் பெரியது. அன்று முருகன் போருக்காகப் பவனி வரும் சிவந்த நிறமும் அற்புதமான கொம்புகளுடன் காணப்படும் கடாவாகனமும் கவர்ச்சியுமான பெருந்தோற்றமுடையது.

இத்திருக்கோயிலின் சூழலில் உருத்திராக்கமரம், சாம்பிராணிமரம், சந்தன மரம், கடம்பமரம் மற்றும் இதர பூமரச் சோலைகளும் எழிலுடன் காட்சி தருகின்றன. இங்கு புராணபடனம் கிரமமாக நடைபெறுகிறது. பாலகர் முதல் பாட்டன், பாட்டி வரை முருகனை உள்ளன்போடு ஏற்றியும் போற்றியும் திருமுறைகள் ஓதியும் சிவப்பணிகள் செய்தும் இன்புறுகின்றனர். இப்பதியில் நடைபெறும் அடிமட்டமான சகல பணிகளையும் தாமே தூய்மையுடன் நிறைவேற்றும் இளந்தொண்டர் சபையினர் தம்மையே முருகனிடம் அர்ப்பணித்துள்ளனர். இதன் வடபால் அமைந்த இளந்

தொண்டர் சபையால் நடாத்தப்படும் பணிகளை இங்குள்ள அறநெறிப்பாடசாலை சமய வகுப்புக்கள், பண்ணிசை, சங்கீதம், மிருதங்கம் போன்ற கலைகள் பயிலும் மாணவர்களும், சபை உறுப்பினர்களும் உள்ளன் போடு பூர்த்திசெய்து வருகின்றனர்.

இச்சூழலில் இணுவைக் கந்தனின் பேரருளால் இணுவை மக்களின் அயராத அர்ப்பணிப்பால் உருவாக்கப்பட்ட "அறிவாலயம்" என்னும் நிறுவனம் நூலக, சமய, பாரம்பரிய கலைகள் வளரவும் செந்தமிழும் சிவநெறியும் நற்பண்பும் தொடர்ந்து இவ்வூருக்கு அணிசெய்யும் பாலமாகவும் இருக்கிறது.

இங்கு; ஆறுமுகநாவலர் பெருமான் விதைத்த சமய, தமிழ்ப்பணி விதை பயிராகி ஓங்கி உயர்ந்து வளர்ந்துள்ளது. அவர்தம் பெருமுயற்சி இணுவில் கந்தன் கருணையால் இச்சூழலையே மையமாக வைத்து எல்லாப் பணிகளும் மேலோங்குகிறது. மக்கள் நன்கு கற்று, கற்றாங்கொழுகி, சிவநெறி பேணி, அறநெறி தப்பாது வாழ்வாங்கு வளர்ந்து, செயற்கைச் சூழலால் மதமாற்றம் நோக்காது "இப்படித்தான் வாழவேண்டுமென" வாழும் நல்லுணர்வை இணுவைக் கந்தன் நெறிப்படுத்துகிறார்.

முருகனின் பக்தி வழிகாட்டலில் மக்கள் தூய சிந்தனையுடன் இறைபக்தியும், இசைஞானமும், தூய நற்கல்வியறிவும், அறச்சிந்தனையும், வந்தோரை வாழ வைக்கும் நற்பண்பும், எவரையும் இன்முகம் நோக்கி அன்புடன் அரவணைத்து விருந்தோம்பி இன்புறும் மனிதநேயத்தை பிரகாசிக்கச் செய்கின்றனர்.

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற வாக்கு இங்கு புலனாகிறது. இணுவில் முருகன் தனது சூழலை (முழுக்கிராமத்தையும்) புனிதப்படுத்தி மேன்மையுடன் முன்னுதாரணமாகத் திகழ்வதற்காக மக்களை நன்மக்களாக நெறிப்படுத்தி அறவாழ்வு வாழவும், எமது இணுவில் மண்ணின் பெருமையை உலகறியச் செய்து சமயநெறி துலங்க வைத்தமை எமது பெரும்பேறாகவே அமைந்துள்ளது.

"முருக பக்தியும் தூய மனிதநேயமும் நிலைக்கட்டும்"
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

(முற்றும்)

## சந்நிதியில் வீற்றிருக்கும் சண்முகனே வருக

சந்நிதியில் வீற்றிருக்கும் சண்முகனே வருக
சஞ்சலங்கள் தீர்த்துவைக்கும் கதிர்வேலா வருக
தந்தைக்கு உபதேசித் தசற்குருவே வருக
தரணியெங்கும் சுற்றிவந்த பழநியாண்டி வருக
வந்ததேவர் தனைக்காத்து வாழ்வளித்தாய் வருக
வள்ளிதெய்வ யானையரின் மணவாளா வருக
சிந்தையிலே வீற்றிருக்கும் சிவமைந்தா வருக
தேடியுன்னைத் தொழுகின்றோம் சிறப்பெல்லாம் தருக

-கவிஞர் வ. யோகானந்தசிவம்-

மரணத்திற்கு அஞ்சாதவனே வாழத் தகுதி பெற்றவன்.

நாவலர் பக்கம்: உ

# திருவிளையாடல்

-ஆறுமுகநாவலர்-

படலம்: 50

## சுந்தரப் பேரம்பெய்த படலம்

வம்மிச சேகர பாண்டியன் செங்கோல் நடாத்தி அரசியற்று நாளிலே, விக்கிரம சோழன் பாண்டியனோடு யுத்தம் செய்யக் கருதி, கயபதி- நரபதி- துரகபதி முதலிய வட தேசத்து அரசர்களின் துணையுடன் எண்ணில்லாத சேனைகள் சூழ்ந்துவரப் புறப்பட்டு பாண்டிநாட்டையடைந்தான். பாண்டியன் அதனையறிந்து திருக்கோயிலை அடைந்து, சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "பரம கருணாநிதியே! விக்கிரமசோழன் அடியேனோடு யுத்தம் செய்யும் பொருட்டு வடதேசத்து அரசர்களோடும், எண்ணில்லாத சேனைகளோடும் வந்து பாசறையில் இருக்கிறான். அடியேனிடத்து அத்துணை சேனையில்லையே! யான் என் செய்வேன்" என்று விண்ணப்பஞ் செய்தான். அப்பொழுது சிவபெருமான் ஆகாயத்திலே அசரீரியாய் நின்று, "பாண்டியனே! அஞ்சாதே நீ முன்னே போய் அவனோடு போர் செய். பின் நாமும் உமக்குத் துணையாக வந்து உனக்கு வெற்றி கிடைக்கும்படி பொருதுவோம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். பாண்டியன் அது கேட்டு மனமகிழ்ந்து, கண்ணீர் பொழிய வணங்கிக்கொண்டு புறப்பட்டான். அப்பொழுது ஓரொற்றன் வந்து, "விக்கிரம சோழனுடைய சேனைகள் இடப மலைக்குச் சமீபித்து விட்டது" என்ற தகவலைச் சொன்னான்.

பாண்டியன் தேர்மேற்கொண்டு, பல வாத்தியங்கள் ஒலிப்ப, நால்வகைச் சேனைகளுஞ் சூழ யுத்தத்திற்குச் சென்றான். பாண்டியனுடைய சேனைக்கும், திருவாலவாய் மதிலை வளைத்துநின்ற சோழனுடைய சேனைக்கும் யுத்தம் மூண்டது. இரு தேசத்துப் படைகளும் பின்னிடாது போர் செய்த போது, சோழனுடைய போர்த் துணைவர்களாகிய வடதேசத்தரசர்கள் உதவிக்கு வர பாண்டியன் சேனை உடைந்து சிதறியது. அது கண்ட சோழன், செருக்கடைந்து வெற்றிச் சங்கெடுத்து ஊதினான்.

அப்பொழுது, சோமசுந்தரக் கடவுள், ஒரு வேட வடிவந்தாங்கி, பாண்டியனுக்குச் சேனாதிபதியாய் வில்லை வளைத்துச் "சுந்தரேசர்" என்னும் திருநாமம் எழுதப்பெற்ற பாணங்களைச் சோழனுடைய படைகள் மீது விடுத்தார். அப்பாணம் ஒவ்வொன்றும் நூறு வீரர்களைக் கொன்றது. சோழன் இதுகண்டு வியந்து, அப்பாணம் ஒன்றினை எடுப்பித்து வாசித்து, "இது 'சுந்தரேசர்' என எழுதப்பட்டு உள்ளது. சோமசுந்தரக் கடவுளே பாண்டியனுக்குத் துணை செய்கிறார்" என்று பயந்து போர்க்களத்திலிருந்து திரும்பிப்

போவானாயினான். அப்பொழுது, அவனுக்குத் துணைவந்த வடதேசத்து அரசர்கள் அவனைச் சூழ்ந்து, "நீ போருக்குத் தோற்றோடுகிறாயே! உனது ஆண்மை என்னாவது? வீரம் என்னாவது? போகாதே. வா" எனக்கூறி, அவனைத் திருப்பி அழைத்து வந்து மீண்டும் பாண்டியன் சேனைமீது பாணங்களைத் தொடுத்தார்கள். வேடுவ வடிவத்துடன் பாண்டியன் சேனாதிபதியாக வந்த சோமசுந்தரக் கடவுள், ஒரு பாணத்தைச் செலுத்தி, அவர்கள் செலுத்திய பாணங்களைத் துணித்து விட்டுப் பின்னும் பல பாணங்களைச் செலுத்திச் சோழனுடைய சேனைகளை அழித்தார். சோழன், தன் சேனை முழுவதும் மடிந்தது கண்டு பயந்து, எஞ்சிய சிலரோடு தோற்று ஓடிவிட்டான். வேட வடிவங்கொண்ட சிவபெருமான், பாண்டியனின் மலர்ந்த முகத்தைப் பார்த்துப் புன்முறுவல் செய்து மறைந்தருளினார்.

பாண்டியன் வெற்றிச் சங்கூதி, யானை மேலேறி, பெண்கள் மங்கல விளக்கேற்றி வரவேற்ப திருநகரிற் புகுந்தான். தனக்கு வெற்றி தேடித்தந்த சோமசுந்தரக் கடவுளுக்கு இரத்தினாபரணங்களும், வில்லும், அவருடைய திருநாமம் தீட்டிய பாணமுஞ் செய்வித்துச் சாத்தி நீதி வழுவாமல் அரசு செய்து கொண்டிருந்தான்.

படலம்: 51

## சங்கப் பலகை தந்த படலம்

வம்மிச சேகர பாண்டியன் அரசியற்று நாளிலே, பிரமதேவர், காசியிலே பத்து அசுவமேத யாகஞ்செய்து முடிந்த தினத்திலே ஸ்நானம் செய்வதற்காக சரசுவதி- சாவித்திரி- காயத்திரி என்னும் மனைவியர் மூவரோடும் கங்கா நதியை நோக்கிப் புறப்பட்டார். செல்லும் வேளையில், சரஸ்வதி, ஒரு விஞ்சைப் பெண்ணுடைய கீதத்தைக் கேட்டுக்கொண்டு நின்றாள். பிரம்மதேவர் கங்கைக் கரையையடைந்து, சாவித்திரி- காயத்திரி ஆகிய இரு மனைவியரோடும் ஸ்நானஞ் செய்து கரையேறினார். தாமதித்து வந்த சரசுவதி, "என்னையன்றி நீர் ஸ்நானஞ் செய்தமை என்ன" என்று கோபித்தாள். "குற்றம் உன்மேலதாக இருப்ப, நீ நம்மைக் கோபித்தாய். இந்தத் தீங்கை நீ எண்ணில்லாத மனிதப் பிறவியெடுத்து நீக்கக் கடவாய்" என்று பிரம்மதேவர் சாபமிட்டார். சரசுவதி பயந்து நடுங்கி, "உமக்கு உயிர்த் துணையாயுள்ள யான் மனிதப்பிறவி எடுத்து மயங்குவேனோ?" என்று கேட்டாள். "உன் சரீரம் நாற்பத்தெட்டுப் புலவர்களாக பூமியில் அவதரித்து பிணக்குறும்போது, சோமசுந்தரக் கடவுளே ஒரு புலவராய்த் திருவுரு தரித்து, சங்கப்பலகை மீதேறியிருந்து, நாற்பத்தொன்பதாம் புலவராகி அப் புலவர்களுடைய பிணக்கைத் தீர்த்தருளி அவர்களுக்கு நல் அறிவைத் தோற்றுவித்தருளுவார்" என்றுங் கூறினார்.

அப்படியே நாற்பத்தெட்டுப் புலவர்களாகப் பிறந்து தமிழை ஆய்ந்தறிந்து பெரும் புலமையடைந்தார்கள். அவர்கள் பாடல்கள் இயற்றுவதில் வல்லவர்களாகி, தேசம் முழுவதும் சென்று தம் புலமையால் வெற்றிமேல் வெற்றி பெற்றார்கள். அவர்கள் தாமரபரணி தீரத்தைக் கடந்து மதுரையை நோக்கிச் செல்லும்போது, சோமசுந்தரக் கடவுள், ஒரு புலவராய் அவர்களெதிரே தோன்றி, "நீங்கள் யாவர்? எங்கிருந்து வருகிறீர்கள்? என்று வினாவினார். "நாங்கள் புலவர்கள். தாமரபரணி தீரத்தினின் றும் வருகிறோம்'' என்று அவர்கள் பதில்

கூறினார்கள். புலவராக வந்த சோமசுந்தரக் கடவுள், "நீங்கள் மதுரைக்கு வந்து நமது சோமசுந்தரக் கடவுளை வணங்குதல் வேண்டும்" என்று சொல்லி, அவர்களை அழைத்துச் சென்று சோமசுந்தரரை வணங்குவித்து மறைந்தருளினார்.

புலவர்கள் ஆச்சரியமடைந்து சோமசுந்தரக் கடவுளை வெவ்வேறு செய்யுள்களினாலே துதித்து வணங்கி, வம்மிசசேகர பாண்டியனைச் சென்று சந்தித்தார்கள். அவர்களது கல்வியறிவு ஒழுக்கங்களைக் கண்ட பாண்டியன், அவர்களுக்கு வரிசைகள் பலவும் கொடுத்து, சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலின் வடமேற் திசையிலே இரு சங்க மண்டபம் அமைத்து அதில் இருத்தினான். இது கண்ட முன்னைப் புலவர்கள் மனம் புழுங்கி, அச்சங்கப் புலவர்களோடு வாது செய்து தோற்றார்கள். மற்றைய தேசத்துப் புலவர்களும் அப்படியே வந்து தோற்றுப் போயினர்.

சங்கப்புலவர்கள், ஒருநாள், சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "எம்பெருமானே! புலவர்கள் யாவரும் வந்து வாதஞ் செய்கின்றார்கள். புலமையை உள்ளபடி தூக்கி அளக்கவல்ல ஒரு சங்கப்பலகை அடியேங்களுக்குத் தந்தருளும்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அப்பொழுது சிவபெருமான் ஒரு புலவர் வடிவங்கொண்டு ஒரு பலகையுடன் எழுந்தருளிவந்து, "புலவீர்காள்! இப் பலகை ஒரு முழச் சதுரமுடையது; சந்திரனிலும் வெண்மையானது; மந்திர வலிமையுடையது; உம்போல்வோருக்கெல்லாம் ஒவ்வொரு முழம் வளர்ந்து இருக்கை தரும். இது உங்களுக்கு அளவு கோலாய் இருக்கும்" என்று சொல்லிக் கொடுத்தருளினார். சங்கப் புலவர்கள் அப்பலகையை வாங்கிக்கொண்டு திருக்கோயிலை வலம் வந்து, தங்கள் சங்க மண்டபத்தினுள் புகுந்து, சந்தனம்- புட்பம்- தூபதீபம் முதலியவற்றினால் பலகையைப் பூசை செய்து வணங்கினார்கள். வணங்கிய பின், முதலில் நக்கீரரும், அதன்பின் கபிலரும், அதன்பின், பரணரும் பலகையில் ஏறினார்கள். அதேபோல ஏனைய புலவர்களும் ஏறி ஒருங்கிருந்தார்கள். அவர்கள் எல்லோருக்கும், அச் சங்கப் பலகை, ஒவ்வொரு முழம் வளர்ந்து இடங்கொடுத்தது.

அச் சங்கப் புலவர்கள் எண்ணில்லாத செய்யுள்களைச் செய்துகொண்டிருக்கும்போது, அவர்கள் செய்த பாடல்களெல்லாம் சொல்வளம்- பொருள்வளம்- செய்யுட் குறிப்பு ஆகியவற்றால் ஒற்றுமையுடையனவாய் இருந்தன. அதனால், அவர்கள் அதனை வேறுபடுத்தி அறியமுடியாமல் "இது என்னுடைய பாடல், இது உம்முடைய பாடல்" என்று வேறுபாடு கொண்டார்கள். அப்பொழுது, சோமசுந்தரக்கடவுள் ஒரு புலவர் வடிவினராய் வந்து "புலவிர்காள்! உங்கள் செய்யுள்களைக் கொண்டு வாருங்கள்" எனக் கேட்டு வாங்கி, ஆராய்ந்து, அவரவர் செய்யுள்களை அவரவர் கையில் கொடுத்தருளினார். வாங்கிய சங்கப் புலவர்கள் மனம் மிக மகிழ்ந்து, "நீரும் எங்களோடு ஒரு புலவராய் எழுந்தருளியிரும்" என்று பிரார்த்தித்து, அவரைத் தங்களோடு சங்கப் பலகையில் இருத்தினார்கள். அவர் அவர்களுக்கு நடுநாயகமாய் எழுந்தருளியிருந்தார்.

இந் நாற்பத்தொன்பது புலவர்களும் மேலும் பற்பல தமிழ் நூல்களைச் செய்துகொண்டு இருக்கும் நாளிலே வம்மிச சேகர பாண்டியன் வம்மிச சூடாமணிக்கு முடிசூட்டி விட்டுத், தான் சிவபெருமானது திருவடியை அடைந்தான்.

உ

# சைவத்தினாலும் முடியும் என்று சாதித்துக் காட்டுபவர்

ச. லலீசன் அவர்கள்

ஆறு.திருமுருகன் - ஈழத்தில் சைவமும் தமிழும் உய்வடைய உதித்த பெருமகன். அரச பணியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபராகச் சேவையாற்றினாலும் அதற்கும் மேலாகச் சிவபூமி முதியோர் இல்லம், சிவபூமி மனவிருத்திப் பாடசாலை, துர்க்கை அம்மன் கோவிற் பரிபாலனம், அதனோடிணைந்த மகளிர், முதியோர் இல்லங்களின் பரிபாலனம் முதலான பொறுப்புக்களைச் சுமந்து ஈழத்துச் சைவ உலகின் காவலனாக விளங்குகின்றார்.

அகவை ஐம்பதை நிறைவு செய்யும் இச் சாதனை மனிதருக்கு ஞானச்சுடர் சார்பில் நல்வாழ்த்துக்களை நவில்வதில் மகிழ்வடைகின்றோம்.

## ஆளுமை உருவாக்கம்

யாழ்ப்பாணம் கோப்பாய் (அமரர்) ஆறுமுகம் ஆசிரியர், சரஸ்வதி (ஆசிரியர்) அம்மையார் செய்த தவப்பயனாய் 28.05.1961 இல் தரணியில் வந்துதித்த செல்வம்தான் ஆறு.திருமுருகன். ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, குகமூர்த்தி, குககுமாரி விஜயரகுநாதன், கோணேஸ்வரி இராமச்சந்திரன், விக்னேஸ்வரி நரேந்திரா, கேதீஸ்வரி ஆனந்தரட்ணம் இவர் உடன்பிறந்த பெருமைக்குரியவர்கள்.



சிறிய வயது முதலே தமிழ் மீதும் சைவத்தின் மீதும் கொண்டிருந்த ஆர்வம் இவரை சைவத்தின் ஊடாகச் சமூகப் பணியாற்ற ஊக்குவித்தது. தாயார் சரஸ்வதி அம்மையார் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆசிரியத்துறை சார்ந்த நண்பர். இந்த நட்பிறுக்கம் காரணமாக இவர்களது குடும்பம் சார்ந்த கோப்பாய் இலுப்பையடிப் பிள்ளையார் கோவில், இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில், நீர்வேலி கந்தசுவாமி கோவில் என்பவற்றில் சிவத்தமிழ்ச் செல்வியின் பிரசங்கங்களில் பங்கேற்கும் பாக்கியம் ஆறு.திருமுருகனுக்குக் கைகூடிற்று. இதனால் சொற்பொழிவுத் துறையை நேசித்த இவர் 1990களில் எழுச்சியடைந்த கம்பவாரிதி இ.ஜெயராஜ்ஜின் கம்பன் கழகப் பட்டிமண்டபங்களிலும் தனிச் சொற்பொழிவுகளிலும் பங்கெடுத்து ஈழத்துப் பிரசங்க

ஆளுமைகளுள் ஒருவராகத் தன்னை அடையாளப்படுத்தினார். சிறப்பாக விநாயக புராணம், பெரிய புராணம் பற்றிய சொற்பொழிவுகளை ஆற்றுவதில் தனித்துவத்தைப் பேணினார்.

## சமூகப் பணிகளில் வேட்கை

யாழ். மண்ணில் சமயச் சொற்பொழிவுகளின் மூலம் சமூகப் பணியாற்ற முடியும் என்பதை நிரூபித்த முதன்மைச் சொற்பொழிவாளர் ஆறு. திருமுருகனே ஆவார். இவரது சொற்பொழிவுகளுக்காக வழங்கப்படும் பணம் சிறுவர் இல்லங்கள், வைத்திய மனைகள் முதலியவற்றின் பணிகளுக்காக உவந்தளிக்கப்பட்டது. சிவத்தமிழ்ச் செல்வியின் வழியில் அறப்பணிகளையும் ஆன்மீகப் பணிகளையும் முன்னெடுக்கத் தலைப்பட்டார். 15.06.2008 இல் சிவத்தமிழ்ச் செல்வி சிவப்பேறெய்தத் தெல்லியூர்த் துர்க்கா தேவஸ்தானத் தலைமைப் பணிகளை ஏற்றுச் செயற்படத் தொடங்கினார். கேட்டார் பிணிக்கும் சொல் வளத்தால் நம்மவர் வாழும் நாடுகள் பலவற்றிற்கும் சென்று இந்து சமயக் கருத்துக்களை முன்வைத்தோடு நம்தேசத்தின் சமூகப் பணிக்கான ஆதரவையும் பெற்றுக் கொண்டார். அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, சிங்கப்பூர், மலேசியா, இந்தியா, தாய்லாந்து முதலிய நாடுகளில் இவரது சிவத்தமிழ் மணம் கமழ்ந்தது. சொற்பொழிவுகளைக் கேட்ட பல்வேறு அன்பர்கள் கௌரவப்பட்டங்களை வழங்கிக் கௌரவித்தனர். இவரது உரைகள் இறுவட்டுக்களாக வெளிவந்தன.

ஆங்கில மொழி மூலமாக எமது உறவுகள் சமய உண்மைகளை அறிய வேண்டும் என்ற ஆவலில் சிவபூமி வெளியீடாக ஓர் ஆங்கில நூலும் வெளிவந்தது. Aaru. Thirumurugan's Spiritual Lecturers in Australia – Life and Philosophy என்பதே அந்நூலாகும். நடைமுறை வாழ்வியலுடன் சமயத்தை இணைத்து அரியபல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சமூகப் பணிகளின் சிறப்பால் சமூக அமைப்புக்கள் பல இவரைத் தமது கௌரவ உறுப்பினராக இணைத்துக் கொண்டன. அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூதவை உறுப்பினர் எனப் பல தளங்களில் பணியாற்றத் தொடங்கினார். சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணிகள் முதன்மையடையவும் இவராற்றிய அரும்பணிகள் சிறப்பானவை.

## பிறர்க்கென வாழும் பெருமையர்

சமயத் தளத்தில் நின்று காலத்திற்கேற்ற சமூகப் பணிகளை முன்னெடுப்பதே சமயப் பெரியார்களின் தலையாய பணியாக இருக்க வேண்டும் என்பதற்குச் செஞ்சொற்செல்வரின் செயற்பாடுகள் முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்கன. சைவ உலகிடமும் வலுவான சமூக அமைப்புக்கள் இருக்கின்றன எனத் திருப்தியடைவதற்கு இந்நிறுவனங்களே காரணமாகின்றன. தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லம் கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை, தெல்லியூர்த் துர்க்கை அம்மன் தேவஸ்தானமும் அதைச் சார்ந்த அமைப்புக்களும் என எமது சமயம் சார்ந்த பல நூற்றுக்கணக்கானோர் இவரது சைவசமூகப் பணிகளில் தங்கியுள்ளனர்.

இவ்வுலகம் ஏன் நிலைபெற்றிருக்கின்றது எனச் சங்கப் புலவன் ஒருவன் ஆராய்ந்தான். பிறர்க்கென உழைக்கும் உண்மையான இயல்பு உள்ளவர்களாலேயே இவ்வுலகம் வாழ்கிறது எனத்துணிந்தான்.

"தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே"

எனத் தன் கருத்தைப் பதிவு செய்தான். இச்சிவதொண்டரின் சைவ, சமூகப் பணிகளுடன் மேற்போந்த புறநானூற்றுப் பாடலடிகளைப் பொருத்திப் பார்ப்பது நலமுடையது.

# "பிறகெனப் பிற்போடாதே"

மருந்தாய் இருக்கும் முருகனை நீ
மறந்து வாழாதே - தம்பி
மாடியில் உயர்ந்து வாழ்ந்தாலும் நீ
முருகனை மறக்காதே.
விருந்தாய் உறவுகள் வீடு வந்தாலும்
வேலனை மறக்காதே
வெளிநாடே உன்னை அழைத்தாலும்
வித்தகனை மறக்காதே
பெருந்தாய் மனையிருந்தாலும் அதில்
புண்ணியத்தை மறக்காதே
பெரும் பதவியில் நீ இருந்தாலும் - உன்
பக்குவத்தை மறக்காதே
பிறந்தாய் படித்தாய் வாழ்ந்தாய் நிறைந்தாய்
பகட்டுக்காய் வாழாதே.
பேரருள் சந்நிதி முருகனிடம் சென்றிடப்
பிறகெனப் பிற்போடாதே.

கே. எஸ் சிவஞானராஜா

நல்ல ஆலோசனையைக் கேட்பதும் நம் திறமையை அதிகப்படுத்தும்.

உ

# நலிவுறும் பள்ளிகளுள் பொலிவுறும் பள்ளி
## முழங்காவில் ஸ்ரீ கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை

**நீர்வைக்கிழார்** அவர்கள்

வெப்பம் அதிகமாகும் போது வானத்தில் மேகந்தோன்றி மழை பொழிவது இயல்பு. அதுபோல் அநீதியான வெப்பம் மிகுதியாகும் போது ஞானமாகிய வானத்தில் அருளாகிய மேகம் தோன்றி அறம்சார்ந்த உணர்வுகள் மேற்கிளம்பின.



தமிழிலக்கிய வரலாற்றில் சங்கமருவிய காலத்தில் அறத்தை வலியுறுத்த வேண்டிய தேவை எழுந்தது. சங்ககாலப் போர் சார்ந்த வாழ்வியலின் சிதைவு அறத்தை வலியுறுத்துவதன் அவசியத்தை ஆதரித்தது. இத்தகைய பகைப்புலம் தற்காலத்தில் எம்மண்ணிலும் எதிர்நோக்கப்படுகிறது. இதன் அவசியத்தை உணர்ந்து ஆங்காங்கே ஊர்ப் பெரியவர்களால் அறநெறிப் பாடசாலைகள் அமைக்கப்பட்டு ஆதரிக்கப்படுகின்றன.

பெற்றோர் மற்றும் மாணவரின் ஆர்வமின்மை, ஆசிரியர்களுக்கான வேதனத்தில் உள்ள நலிவு, தனியார் கல்வி நிறுவனங்களின் செல்வாக்கு போன்ற காரணிகளால்

அறநெறிப் பாடசாலைகள் இன்று தோல்வியைத் தழுவும் நிறுவனங்களோ? என எண்ண வைக்கின்றன.

இந்து கலாச்சார அமைச்சர் என அமைச்சர்ப் பதவி இருந்த காலத்தில் அறநெறிப் பாடசாலைகளை நிறுவுவதற்கு அதிகளவு ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன. இலவசச் சீருடைகள், தளபாடங்கள், இசைக் கருவிகள், ஆசிரியர் ஊக்குவிப்புப் படி எனப் பல தளங்களில் இவ் ஊக்குவிப்புக்கள் அமைந்தன. இதனால் தம் சூழலில் உள்ள பிள்ளைகளை வலுக்கட்டாயமாகச் சேர்த்தேனும் அறநெறிப் பாடசாலை ஒன்றை நிறுவிவிட வேண்டுமெனப் பல ஆலயத் தர்மகர்த்தாக்கள் முண்டியடித்தனர்.

தற்போது இந்து விவகாரங்களுக்கெனத் தனியான அமைச்சு இல்லை. சமய விவகார அமைச்சு என்ற பெயரிலான அமைச்சே உள்ளது. அறநெறிப் பாடசாலைகளை இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களமே ஆள்கிறது. முன்னைய ஊக்குவிப்புக்கள் தற்போது நலிவுற்றுள்ளன. ஆசிரியர் ஒருவருக்கு வருடமொன்றிற்கு இரண்டாயிரம் ரூபாவே ஊக்குவிப்புப் படியாக வழங்கப்படுவதால் இத்துறையில் தொடர்ச்சியாகக் கால்பதிக்க எவரும் விரும்புவதில்லை. இதனால் அறநெறிப் பாடசாலைகளை நடத்துவதில் உள்ள ஆர்வமும் நலிவுற்றுச் செல்கின்றது.

அறநெறிப் பாடசாலைக் கற்கை நெறியின் முடிவில் நடத்தப்படுகின்ற இறுதிப் பரீட்சைச் சான்றிதழ் இதுவரை எந்தவொரு நேர்முகத் தேர்வுகளிலும் கணக்கெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பல்கலைக்கழக அனுமதிக்கு பத்துக்கும் உட்பட்ட புள்ளிகள் இச்சான்றிதழுக்கு வழங்கப்படும் என்பது கொள்கை அளவிலேயே உள்ளது.

மறுபுறம் வெள்ளிக்கிழமைகளிலோ அன்றி ஞாயிற்றுக்கிழமைகளிலோ இப்பாடசாலையை நடத்துவதற்கு முக்கிய தடைக் கல்லாகத் தனியார் கல்வி நிறுவனங்கள் விளங்குகின்றன. பாடசாலைகளைவிட மாணவர் வரவு குறித்துத் தனியார் கல்வி நிறுவனங்கள் கூடிய அக்கறை காட்டுவதால் (?) வருகை தராத பிளைகளுக்கு பிரம்படித் தண்டனைகளும் தாராளமாக வழங்கப்படுகின்றன. இதனால் சமய வழிபாடு அறநெறிப் பாடசாலை என நாடும் பிள்ளைகளுடைய எண்ணிக்கையும் குறைந்து விட்டது.

இத்தகைய பகைப்புலத்தில் அறநெறிப் பாடசாலைகளை எவ்வாறு வெற்றிகரமாக இயங்க வைக்கமுடியும்? எனச் சமய ஆர்வலர்கள் பலரும் வேதனைப்படும் சூழலில் பலரையும் வியக்க வைக்கும் வண்ணம் முழங்காவில் பிரதேசத்தில் ஓர் அறநெறிப் பாடசாலை சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

“ஸ்ரீ கோவிந்தநாம சங்கீர்த்தனம் - கோவிந்தா, கோவிந்தா” என வானதிரக் குரல் எழுப்பியபடி கடந்த வாரம் (17.05.2011, 18.05.2011) யாழ் குடாநாடெங்கிலுமுள்ள ஆன்மீகத் தலங்களுக்கு இளையோர் படையணி ஒன்று சுற்றுப் பயணம் செய்தது. 50 ஆண் பிள்ளைகள், 70 பெண் பிள்ளைகள், 5 ஆசிரியர்கள், 5 பெற்றோர்கள் என நூற்று முப்பது பேர். அத்தனை பேரும் எமது காலாச்சாரத்திற்கு ஏற்றவாறு வேட்டி, பாவாடை சட்டை, சேலை என ஆடைகளை அணிந்திருந்தனர். ரவுசர், பஞ்சாபி என எம் பிள்ளைகள் பயன்படுத்தும் ஆடைகளை யாரும் அணிந்திருக்கவில்லை.

நல்லை ஆதீன முதல்வரிடம் கைகட்டி வாய் பொத்தி ஆசீர்வாதம் பெற்ற வண்ணம் நின்ற இவர்கள் யார்? என அறியும் ஆர்வம்

ஆதீனத்தில் நின்றிருந்த பலருக்கும் ஏற் பட்டது.

அறநெறிப் பாடசாலையின் அதிபர் என விளங்குபவர் இலட்சுமணன் குபேந்திரன். அரச பாடசாலை ஒன்றின் ஆசிரியர். துடிப்பு மிக்க இளைஞர். முழங்காவிலில் வெங்க டேசப் பெருமாள் ஆலயத்தை மையப்படுத்தி 2004ஆம் ஆண்டு தொடக்கம் அறநெறிப் பாடசாலையை இயக்குவதாகத் தெரிவித்தார். அரச மானியங்களை எதிர்பார்க்காது தமது சமூக நன்மையை எதிர்பார்த்து இவ் அறநெறிப் பாடசாலையை நடத்துவதாகக் கூறினார்.

“போர் ஓய்ந்த வன்னிப் பிரதேசத்தில் இத்தகைய அறநெறிப் பாடசாலைகள் மிகவும் அவசியமானவை. யாழ் மண்ணில் உள்ள இந்து சமயப் பிரசாரகர்கள் வன்னி மண்ணிற்கும் வருகை தந்து பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டும். சமய நம்பிக்கை, வாழ்க்கை பற்றிய உணர்வு என யாவும் சமயத்தின் ஊடாகக் கட்டி வளர்க்கப்பட வேண்டும்” எனத் தெரிவித்த அவர் “யாழ்ப் பாணத்தின் சமயச் சொற்பொழிவாளர்கள் பலர் எம்பிரதேசங்களை எட்டியும் பார்ப்ப தில்லை” எனக் குறைப்பட்டும் கொண்டார்.

அறநெறிப் பாடசாலைப் பாடத்திட்டத்திற்கு மேலதிகமாக இசைக் கருவிகளை வாசிப் பதற்கும் இங்கு கற்றுக் கொடுக்கிறார்கள். ஆறு மாணவர்கள் தவில் வாசிப்பதில் தகைமை பெற்று விளங்குவதையும் காண முடிந்தது. செல்லுமிடமெங்கணும் இறை நாம பஜனைகளை மேற்கொள்கிறார்கள். இதன் போது இனிய பக்கவாத்தியங்களை இசைக்கிறார்கள். காண்போரையும் கேட் போரையும் மெய்சிலிர்க்க வைக்கிறார்கள். நல்லூர்க் கந்தசுவாமி கோவில், நல்லை ஆதீனம், வண்ணை வெங்கடேசப் பெருமாள் கோவில், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், சீரணி நாகம்மாள், தெல்லியூர்த் துர்க்கை, மாவிட்டபுரம், கீரிமலை, செல்வச்சந்நிதி, சந்நிதியான் ஆச்சிரமம், வல்லிபுர ஆழ்வார் என முக்கிய ஆன்மீகத் தலங்களை மாத்திரம் இரு நாள்களில் தரிசித்துச் சென்றுள்ள இவர்களைக் காணக்கிடைத் தமைகூட ஒரு தவவாய்ப்பே. இளையோரது சமய உணர்வுகளை அக, புற வழிகளில் ஆற்றுப்படுத்தும் இவர்களின் முயற்சியை எப்படிப் பாராட்டினாலும் தகும்.

## அருள்வாய் பெருமானே!



**போற்றிப் பணிவதெல்லாம் பெருமானுன் பதமலரை!**
**பார்வதியின் பாலகனே! பெரும்பதி தொண்டைமான்**
**ஆற்றங் கரையினிலே அமர்ந்திருக்கும் கந்தவேளே!**
**ஆடலிறை திருக்குமரா! ஆறுமுகப் பெருமானே!**
**ஆற்றல் மிகவுடைய அழகும் வேலைக் கொண்டவனே!**
**ஆருன்னை அன்றியெம் அல்லல் அகற்றிடுவார்?**
**மாற்றும் தாருமையா! மயிலேறும் பெருமானே!**
**மனநிறைவு தனையுன்றன் அடியவர் பெற்றிடவே!**

**-ப. மகேந்திரதாசன்**

**மனம் சுத்தமாக இருந்தால் செயல் நல்ல வழியில் செல்லும்.**

உ



# சந்நிதியான்

திரு அற்புதன் அவர்கள்

மனித வாழ்வில் முதன்மைபெற்று விளங்குவது நம்பிக்கை. அதுவும் கடவுள் மேல் வைக்கும் நம்பிக்கை முதன்மையானது. அதன் அடிப்படையில்தான் மனித சமுதாயம் ஓடிக்கொண்டிருக்கின்றது. அதேபோன்று எம்மால் மேற்கொள்ளப்பட்டுவரும் அனைத்து செயற்பாடுகளுக்கும் இறைநம்பிக்கையோடு கூடிய வழிபாடு மிகவும் அவசியம். அதனை உணர்ந்து போற்றி நடப்பவர்கள் வாழ்வில் மேன்மையடைவார்கள். இவ்வகையான மனப்பக்குவம் உள்ளவர்களின் தேவைகளை இறைவன் முன்நின்று வழிப்படுத்துவான். அவ்வகையான நிகழ்வினை சந்நிதியான் எனும் இப்பகுதியில் நாம் உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

கடந்த பல வருடங்களாக கதிர்காம உற்சவகாலத்தையொட்டி ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து முருகன் அடியார்கள் கால்நடையாகக் கதிர்காமக் கந்தனை தரிசிப்பதற்காக வைகாசி மாதமளவில் செல்வது ஒரு வழமையான செயற்பாடு. அப்படிச் செல்லும் அடியார்கள் வைகாசிப் பூரணையில் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தில் ஒன்றுகூடி அங்கே நடைபெறும் வருடாந்த பொங்கல் வழிபாட்டில் கலந்து அம்மனை வழிபட்டபின் கதிர்காம பாதயாத்திரையை முன்னெடுத்துச் செல்வார்கள்.

நாம் அறியக்கூடிய வகையில் கதிர்காம பாதயாத்திரையானது ஒரு பக்திபூர்வமான நிகழ்வாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. அக்காலப் பகுதியில் ஆனந்தாச்சிரமத்தில் மயில்வாகன சுவாமி அவர்களோடு இருந்த ஜேர்மன்சுவாமி என அழைக்கப்படும் கௌரிபாலா எனும் ஜேர்மன் நாட்டவர் சைவ சமயத்தைத் தழுவி இப் பாதயாத்திரையில் பங்குபற்றி கால்நடையாக கதிர்காமக் கந்தனைத் தரிசிக்கச் செல்வது வழக்கம். அவரோடு பாதயாத்திரைக்கென ஒரு தொகை அடியார்கள் வந்து சேர்வார்கள்.

பாதயாத்திரை புறப்படும் அன்று காலை சந்நிதி வேற்பெருமானுக்கு விஷேட பூசை வழிபாடுகள் இயற்றி பாதயாத்திரையில் பங்குபற்றும் அடியார்களை ஆலய முன்ற லில் இருத்தி அவர்களுக்குரிய காலை உணவினை ஊர்மக்கள் தமது வீடுகளில் புனிதமாகத் தயாரித்து அதனைக் கொண்டு வந்து சிறிய பனை ஓலையினால் செய்யப் பட்ட மூடற் பெட்டியில் வைத்து வழங்கி அவர்களை வழி அனுப்பி வைப்பார்கள்.

உண்மையில் இச்செயற்பாடானது ஒரு புனிதமான கைங்கரியமாகவே கருதப் பட்டது. இதற்கு மூல காரணமாக விளங்கு வது கதிர்காமக்கந்தன்மீது வைத்த நம்பிக்கை. அதன் அடிப்படையில்தான் இப்பாத யாத் திரை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இப்படி நடைப்பயணமாகச் செல்லும் அடியவர்களை அந்தந்தப் பகுதி மக்கள் வரவேற்று, முருகப்பெருமானுக்கு செய்யும் இறை தொண்டாகவே கருதி அவர்களுக் குரிய வசதிகளைச் செய்துகொடுத்து, தத்தமது பகுதிகளிலிருந்து வழியனுப்பி வைப்பார்கள். இவ்வகையான நிகழ்வு வருடா வருடம் இடம்பெற்று வருவது ஒரு சம்பிர தாயமாகக் கருதப்படுகின்றது. ஆனாலும் நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழல் காரணமாக இப்பாத யாத்திரையானது கடந்த காலங்களில் வடபகுதியைத் தவிர்த்து கிழக்கு மாகாணத்திலிருந்து தொடர்ந்து இடம்பெற்று வந்தது.

நாட்டில் ஏற்பட்ட சமாதான சூழல் காரணமாக இப்பாத யாத்திரை மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆரம்ப காலங்களில் ஜேர்மன் சுவாமிகள் கலந்து கொண்ட இந்தப் பாதயாத்திரை யானது சுவாமிகள் இறைபதம் அடைந்தபின் அவரோடு சிறுவயதுமுதல் பாதயாத் திரையில் கலந்து கொண்ட அமெரிக்க நாட்டவரான பற்றிக் சுவாமிகள் தலைமை யில் தொடர்ந்து நடைபெற்று வந்தது. கடந்த மூன்று வருடமாக மீண்டும் ஸ்ரீ செல்வச் சந்நிதியிலிருந்து இந்த யாத்திரையானது ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் கடந்த காலங்களில் இடம்பெற்றது போல் விமரிசையாக நடைபெறுவதில்லை. அதற்குக் காரணம் நாட்டில் இடம்பெற்ற போர்ச்சூழல். அதன் பயனாக யாழ் குடாநாட் டில் ஏற்பட்ட மக்களின் இடப்பெயர்வும் முக்கிய காரணம். அவ்வகையில் அடியார் களது பாதயாத்திரையின்போது, அடியார் களது வரவும் ஊர் மக்களால் வழங்கும் ஆதரவும் குறைவடைந்தது. ஆனாலும் கதிர காம உற்சவகாலம் ஆரம்பமாகும் காலங் களில் ஸ்ரீ செல்வச்சந்நிதியிலிருந்து காலம் காலமாக நடைபெற்று வரும் இச் செயற்பாட் டினை ஒரு சில அடியார்கள் செய்துவருவது முருகப்பெருமான்மீது உள்ள அளவுகடந்த பக்திப்பரவசமேயாகும். ஸ்ரீ செல்வச்சந்நிதி யிலிருந்து குறைந்தளவு அடியார்களோடு ஆரம்பிக்கப்படும் இப் பாதயாத்திரையானது கதிர்காமத்தை அடையும்போது பெரும் எண் ணிக்கையான அடியார்களோடு நிறைவுபெறும்.

கதிர்காமக் கந்தனின் சிந்தனையுடன் நடைபெற்றுவரும் இப் பாதயாத்திரை கடந்த மூன்று வருடமாக பற்றிக் சுவாமிகளின் தலைமையிலும் அவரோடு கூடவருகின்ற சிவாச் சுவாமிகளின் அனுசரனையுடன் ஒரு சில அடியார்கள் செல்வச் சந்நிதியிலிருந்து பாதயாத்திரையை ஆரம்பிப்பார்கள். அப்படி அவர்கள் யாத்திரைக்கென வரும் காலங் களில் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளுக்கு அறிவித்துவிட்டு வருவார்கள். வருபவர்களை ஆச்சிரம சுவாமிகள் வரவேற்று, அடியார்கள் ஒன்றுகூடி யாத்திரை ஆரம்பிக்கும் தினம் வரை அவர்களுக்குரிய அனைத்து வசதி களையும் செய்துகொடுப்பதன்மூலம் மன

நிறைவை அடைவார்கள். சுவாமி அவர்களும் சந்நிதிக் கந்தன் தனக்கு இட்ட பணி என உணர்ந்து யாத்திரையில் ஈடுபடும் அடியவர்களுக்கு எவ்வித குறைபாடுமில்லாது அவர்களை வழியனுப்பும் பணியினை செயலாற்றிக் கொண்டு வருகின்றார்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காமத்துக்கு புறப்படும் தினத்தன்று காலை யாத்திரையில் பங்குபற்றும் முருகன் அடியவர்கள் அனைவரும் காலைப் பூசையின்போது தாம் கையில் கொண்டு செல்லும் வேலினை சந்நிதி ஆலய பூசகரிடம் கொடுத்து, பூசை வழிபாடு இயற்றி அதனை மிகுந்த பக்தி உணர்வுடன் பெற்று ஆலய வீதியை வலம் வந்து சந்நிதியான் ஆச்சிரமத்தினை நாடிவந்து தாம் கொண்டு வரும் வேலினை ஆச்சிரம பூசை அறையில் வைக்கும் வண்ணம் சுவாமிகளிடம் கொடுப்பார்கள். ஆச்சிரம சுவாமிகளும் அதனைப் பெற்று பூசை அறையில் வைத்துவிட்டு, அவர்களுக்குரிய காலை உணவினை வழங்கி மற்றும் வசதிகளையும் செய்து கொடுப்பார். அவர்களது சிரம பரிகாரம் முடிந்ததும், சுவாமி அவர்கள் ஆச்சிரம பூசை அறையில், பூசை வழிபாட்டினை நடாத்தி அவர்களுக்குத் திருநீறு வழங்கி, யாத்திரை போகும் அடியார்கள் அனைவருக்கும், அவர்களின் கைச் செலவுக்கான ஒரு தொகைப் பணத்தினை வழங்கி, அவர்களை ஆசீர்வதித்து, பூசை அறையில் வைத்த வேலினை யாத்திரைக் குழுவுக்கு தலைமை தாங்கும் முருகன் அடியார் கையில் எடுத்துக்கொடுத்து ஆச்சிரம வாசல் வரை வந்து வழியனுப்பி வைப்பார்கள். சுவாமி அவர்கள் யாத்திரைக்கு செல்பவர்களுக்கென கொடுக்கும் பணமானது புதிய நாணயத் தாளாகவே கொடுப்பதை வழக்கமாகக் கைக்கொண்டிருந்தார். அதற்கான பணத்தை சித்திரைப் புதுவருடத்தன்று வங்கி மூலம் பெற்று, யாத்திரை புறப்படும் சமயம் பங்குபற்றும் அடியார்களுக்கு கையளிப்பார்.

இவ்வகையான செயற்பாடுகளுக்கெல்லாம் சந்நிதியானே மூலகாரணம் என்று நம்பிச் செயற்படும் சுவாமிகளோடு சந்நிதியான் நடாத்திய அருளாட்சி மூலம் சுவாமி அவர்கள் பெற்ற அனுபவத்தில் நாமும் பங்கு பற்றுவோம்.

ஆம் கடந்த 07.05.2011 சந்நிதியிலிருந்து பாதயாத்திரை ஆரம்பமாகும் தினத்திற்கு இரு நாளைக்கு முன்பாக யாத்திரையில் பங்குபற்றும் அடியார்கள் ஆச்சிரமத்திற்கு வருகை தந்திருந்தனர். ஆச்சிரம சுவாமிகளும் அவர்களை வரவேற்று ஆச்சிரமத்தில் தங்க வைத்தார். இடையில் ஒரேயொரு நாள்தான் இருந்தது. அதுவும் வெள்ளிக்கிழமை. சுவாமிக்கும் இவர்களது வருகை சந்தோஷத்தை அளித்தாலும், ஒருபுறம் மனதுக்கு கவலையளிக்கக் கூடியதாகவும் இருந்தது. ஏனென்றால் இம்முறை சித்திரைப் புத்தாண்டு தினத்தில் வங்கியில் இருந்து பெற்ற புதிய நாணயத்தாள்கள் சுவாமிகளின் பாவனைக்குப் போதாத வகையில் அமைந்ததனால் யாத்திரிகர்களுக்கு கொடுப்பதற்காகிய புதிய நாணயத்தாள் தன் கைவசம் இல்லையே என்று தன்னைத்தானே நொந்துகொண்டு வெள்ளிக்கிழமைக்குரிய வழமையான அன்னதானச் செயற்பாட்டில் மூழ்கியிருந்தார். அவர் கையில் போதிய பணம் இருந்தும் புதிய நாணயத்தாள் கொடுக்கும் தனது வழமையான காரியம் தடம்புரண்டு விடுமோ என்ற மன வருத்தத்துடன், தனது மன எண்ணத்தை பூசை அறையில், தான் வணங்கி வழிபடும் முருகனது பாதங்களில் சமர்ப்பித்து தனது வழமையான காரியத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

**கொடுக்கக்கூடியவனுக்கு நண்பர்கள் அதிகம்.**

அன்றைய தினம் வெள்ளிக்கிழமை யாக இருந்த வகையில் சுவாமியவர்களுக்கு அன்னதானச் செயற்பாடு, வாராந்த நிகழ்வு, அறுபத்துமூவர் குருபூசை எனப் பல பணிகள் இருந்தன. அப்பணிகளைச் செம்மையாக நிகழ்த்துவதில் சுவாமிகள் கண்ணாயிருந்தார். நேரமோ மதியம் 1மணியைத் தாண்டிவிட்டது. அன்னதானச் செயற்பாடு மிக மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. சுவாமி அவர் களும் ஆச்சிரமத் தொண்டர்களோடு தானும் ஒரு தொண்டனாக நின்று பணிகளை நிறை வேற்றிக் கொண்டிருந்தார். ஆச்சிரம மண்டபத் தில் ஒரு பகுதி அடியார்களை இருத்தி அன்னப்பணி இடம்பெற மேலும் பல அடியார் கள் ஆச்சிரம முன் மண்டபத்தில் அடுத்த அமர்வுக்காக காத்திருந்தார்கள்.

அன்னதானச் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சுவாமிகளிடம் உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை யகத்தில் கடமையாற்றும் திரு இளங்கோ எனும் அன்பர் சுவாமி அவர்களை அணுகி இதற்குள் இருக்கும் பணத்தை ஆச்சிரமத் தினால் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறியதுடன் கடதாசியினால் சுற்றப்பட்ட ஒரு பொதியினை சுவாமிகளிடம் கையளித்தார். சூழ்நிலை காரணமாக சுவாமிகளும் அதனைப்பெற்று ஒருபுறம் வைத்துவிட்டு தனது பணியில் ஈடுபட்டுவிட்டார். நேரமோ 3மணியைத் தாண்டி விட்டது. அன்னதானம் வழங்கும் நிகழ்வின் இறுதிச் செயற்பாட்டில் ஆச்சிரமத் தொண்டர் கள் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். சுவாமி அவர்களும் தான் வழக்கமாக அமரும் மேசையடியில் வந்து அமர்ந்திருந்தார். அன்னப்பணி காரணமாக அதே சிந்தனை யுடன் இருந்த சுவாமிகள் அந்த நேரத்தில் தான் திரு இளங்கோ தன்னிடம் கையளித்த பணம் பற்றிய எண்ணம் எழுந்தது. உடனே எழுந்துசென்று கடதாசியால் சுற்றப்பட்டு இருந்த பொதியைப் பிரித்துப் பார்த்தார். அதற்குள் ஒருதொகைப் பணம் இருந்தது. இந்நிகழ்வு சுவாமிகளுக்கு பெரிதாகத் தெரிவ தில்லை. ஏனெனில் ஆச்சிரமத்திற்கு வரும் அடியவர்கள் இவ்வகைச் செயற்பாட்டினை மனமுவந்து செய்வது வழமை. அதனைக் கூட சுவாமிகள் "சந்நிதியானது வேலை" என்றே கூறுவார்கள்

திரு இளங்கோ அளித்த பணத்தைப் பார்த்ததும் சுவாமிகளின் மனநிலையில் பெரிய மாற்றம் நிகழ்ந்தது. ஏனெனில் இளங்கோ கொடுத்த பணக்கட்டில் பழைய நாணயத் தாளோடு நூறு ரூபாவிற்குரிய புதிய நாண யத்தாள் 1 கட்டு இருந்தது. சுமார் பத்தாயிரம் ரூபாவுக்கான புதிய நாணயத்தாள். ஆச்சிரம சுவாமிகளும் அப்பணத்தைக் கண்டதும் உடனே தனது பூசை அறையினுள் சென்று முருகனை வணங்கி, "கதிர்காம பாதயாத் திரைக்கு செல்லும் அடியார்களுக்கு கொடுப் பதற்காகவே இப்பணத்தைத் தந்திருக் கின்றாய், என் மனச் சஞ்சலத்தையும் தீர்த்து விட்டாய்" என்று கூறியதுடன் மறுநாட் காலை யாத்திரைக்குப் புறப்படும் அடியார் கையில் அப்பணத்தைக் கையளித்து விட்டார்.

இவ்வகையான அற்புத அனுபவங் கள் ஆச்சிரமத்தில் இடம்பெறுவது சுவாமி அவர்களுக்கு ஒரு சாதாரண நிகழ்வு. எமக்கோ ஒரு பெரிய அனுபவம். ஆனாலும் கதிர்காம பாதயாத்திரையின் நிமித்தம் சந்நிதி முருகன் ஆச்சிரமத்தின் செயற்பாட்டில் எவ் வளவு கண்ணுங்கருத்துமாக உள்ளார் என்பது கண்கூடு. இதற்கெல்லாம் மூல காரணம் நம்பிக்கையோடு கூடிய தூய செயற்பாடு. இதனை ஆச்சிரம சுவாமிகள் நன்குணர்ந்து தனது பணிகளை மேற் கொண்டு வருகின்றார்.

ஓம் முருகா!

தன்னலம் கருதுவோரின் கூட்டத்தில் சேராதே.

தமிழகத் திருக்கோயில் வரிசை: ௨

# திருஇரும்பூளை (ஆலங்குடி)

வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்

"இரும்பூளை இடங்கொண்ட ஈசன்" என சம்பந்தர் தேவாரத்தில் குறித்ததிலிருந்து மிகப் பழைய காலத்தில் **"இரும்பூளை"** என்ற பெயரே இத்தலத்திற்கு வழங்கப்பட்டு வந்தபோதும், இடைக் காலத்திலேயே இது **"ஆலங்குடி"** என அழைக்கப்பட்டமை "காளமேகம்" பாடலிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. இன்று சாதாரணமாக "ஆலங்குடி" என்பதே வழமையில் உள்ளது. இந்தத் தலத்திற்கு கிழக்கே "பூளை வள ஆறு" சீறிப் பாய்வதனாலும், "பூளை" என்ற செடியினை ஸ்தல விருட்சமாக இத்தலம் கொண்டிருப்பதனாலும் "இரும்பூளை" என்று பெயர் வந்திருக்க வேண்டும்.

கும்பகோணத்திலிருந்து மன்னார்குடி செல்லும் பாதையில் 17 கி.மீ தூரத்திலும், இடையே நீடாமங்கலம் சந்தியிலிருந்து 7 கி.மீ தூரத்திலும் ஆலங்குடி அமைந்துள்ளது. கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் வயலும் வயல்சார்ந்த இடமுமாக அந்தப் பாதை அமைந்துள்ளதால், நீடாமங்கலம் சந்திப்பில் திரும்பியவுடனேயே தூரத்தே..... மிகத் தூரத்தே வானுயர உள்ள ஆலங்குடி ஐயனின் கோபுரம் கண்ணெதிரே தெரிகிறது.

அகில உலகமும் ஆலகால விஷத்தால் அடையவிருந்த பேராபத்திலிருந்து காக்க இறைவன் ஆலகால விடத்தினை உண்ட திருத்தலம் இது. தேவர்களையும் உலக உயிர்களையும் ஆபத்திலிருந்து காத்த பிரான் என்பதனால் ஈசன் **"ஆபத்சகாயேசுவரர்"** எனப்படுகிறார். ஆலங்குடி அண்ணலை வியந்து, தனது வழமையான நையாண்டிப் பாணியிலேயே காளமேகப் புலவர் பாடிய பாடல் இது.

"ஆலங்குடியானை ஆலாலம் உண்டானை
ஆலங் குடியான் என்று ஆர் சொன்னார்- ஆலம்
குடியானேயாகில் குவலயத்தோரெல்லாம்
மடியாரோ மண் மீதினில்"

"ஆலங்குடி" என முதல் வரும் சொல் ஆலங்குடி என்ற ஊரின் பெயரையும், "ஆலங்குடியான்" என அடுத்து வருவது நஞ்சினை உண்ணாதவன் என்பதனையும், "ஆலங்குடியானேயாயின்" என்பது நஞ்சினை உண்ணாதிருந்தானேயாயின் என அவன் உலகுக்கு அருளிய கருணைச் சிறப்பையும் காட்டுதல் காண்க. இறைவன் விஷமுண்ட தலமாகையால் இங்கு விஷம் தீண்டி யாரும் மரணிப்பதில்லை எனவும் அங்குள்ள மக்கள் கூறுகிறார்கள்.

இங்கு பிரம்ம தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், இந்திர தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம் எனக் கடவுள்களின் பெயரிலேயே 16 தீர்த்தங்கள் உள்ளன. இத்தலத்தின் கிழக்கே பாய்கின்ற "பூளைவள ஆற்று" நீரை எடுத்து ஐப்பசி மாதம் முழுவதும் ஆலங்குடி அப்பனுக்கு அபிஷேகம் செய்கிறார்கள்.

**இறைவன்: ஆபத்சகாயேசுவரர், காசி ஆரண்யேசுவரர்**

**இறைவி: ஏலவார் குழலி**


**தீர்த்தம்: (மேலே கூறப்பட்ட 16 தீர்த்தங்கள்)**

ஐந்து நிலைகளுடன் ராஜகோபுரம் கிழக்குப் பார்த்தபடி கம்பீரமாக காட்சி தருகிறது. அழகிய சுதைச் சிற்பங்களுடனான கோபுரத்தினைத் தரிசனம் செய்து உள்ளே நுழைகிறோம். அருகிலேயே தெற்கு நோக்கிய அம்பிகை "ஏலவார் குழலி"யின் திருச் சந்நிதி. அடுத்த நுழைவாசல் தாண்டி உள்ளே போகிறோம். உட்பிரகாரத்தில் மேற்குப் பார்த்தபடி நால்வர், சூரியர், சோமேசர், குருமோட்சேஸ்வரர், சோமநாதர், சப்தரிஷிநாதர், விஷ்ணு நாதர், பிரமீசர், அகத்தியர் ஆகியோர் உள்ளனர். ஆக்ஞாகணபதி, சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர், சண்டேஸ்வரர் ஆகிய உற்சவ மூர்த்தங்களுடன் சனகாதி நால்வருடன் கூடிய தட்சணாமூர்த்தியும் உற்சவ மூர்த்தமாக உள்ளார். பிரம்மோற்சவ காலத்தின் தேர்த் திருவிழாவன்று இந்த தட்சணாமூர்த்தியே தேரில் கொலுக்கொள்வார்.

கருவறையின் வாசலில்- மகாமண்டபத்தில் கொடிமரம், நந்தி, பலிபீடம் ஆகியன செப்புக் கவசமிட்டுக் காணப்படுகிறது. கருவறையின் வாசலில் இரு மருங்கும் துவார பாலகர்கள் உள்ளனர். கருவறையில் மூலவர் **"ஆபத்சகாயர்"** லிங்க வடிவில் அருள் பாலிக்கிறார். நிறைந்த அலங்காரங்களுடன் காட்சி தருகின்ற ஆபத்சகாயரை கைகூப்பி வணங்குகிறோம்.

கருவறையின் கோஷ்ட மூர்த்தங்களாக தெற்கே தனிச்சந்நிதியில் தட்சணாமூர்த்தியும் (மாடங்களில்) மேற்கில் லிங்கோற்பவரும், வடக்கில் பிரம்மாவும் துர்க்கையும் காணப்படுகின்றனர். சண்டேஸ்வரர் தனிச்சந்நிதியில் உள்ளார். விநாயகர், சுப்பிரமணியர், சுக்கிரவார அம்பாள், சனீஸ்வரர், சப்தமாதர் சந்நிதிகள், வசந்த மண்டபம், யாகசாலை தனித்தனியே உள்ளன. குருப்பெயர்ச்சி ஆராதனை, சித்திரைப் பௌர்ணமி விழா, தைப்பூசம், பங்குனி உத்தரம் முதலான விழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

ஒரு காலத்தில் சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் என்ற நான்கு ரிஷிகளும் சிவபெருமானிடம் தங்களுக்கு யோகம்பற்றி உபதேசம் செய்யுமாறு வேண்டினார்கள். இறைவன் தட்சணாமூர்த்தி வடிவங்கொண்டு ஆணவம்- கன்மம்- மாயை எனும் மும்மலங்களையும் விட்டுப் பசுவாகிய உயிர்கள் பதியாகிய இறைவனை அடைய வேண்டும் என "சின் முத்திரை" காட்டி அதன் தத்துவத்தை உணர்த்தி யருளினார். உயர்த்திய மூன்று விரல்கள் மும்மலங்களையும், சுட்டுவிரல் பசுவையும், பெருவிரல் பதியையும் குறிக்கும். அதாவது ஆணவ மலங்களை ஆன்மா விடுத்து இறைவனை அடைந்து பேரின்பம் எய்தலைக் குறிப்பதாகும்.



கடன்தான் கொடுமையான வறுமை.

தேவர்களுக்கெல்லாம் குருவாக விளங்கும் வியாழ பகவான் பூலோகத்திலுள்ள வர்களுக்கும் பூரண சுகத்தையும், தம்மை வழிபடுவோருக்கு உயர்வான பதவி, பொன்பொருள் சேர்க்கை, புத்திரப்பேறு என்பவற்றையும் வாரிக் கொடுப்பவர். "குருவின் பார்வை கோடி நன்மை தரும்" என்பார்கள். குரு தான் சஞ்சரிக்கும் இடத்திலும் பார்க்க, நோக்குமிடத்து கூடுதல் பலன்களை வாரி வழங்குவார்.

08.05.2011இல் வியாழ மாற்றம் நிகழ்ந்ததை அன்பர்கள் அனைவரும் அறிவர். தமிழ் நாட்டில் வியாழனுக்குரிய பரிகார ஸ்தலமாக உள்ளது ஆலங்குடியேயாகும். திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம் மாவட்டங்களுக்கு அண்மையில் ஆலங்குடி அமைந்திருப்பதனாலும், தமிழ் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் பரிகார நிவர்த்திக்காகப் பலபேர் கூடுவதனாலும் ஒவ்வொரு வருடமும் ஏற்படுகின்ற வியாழ மாற்ற வேளையில் ஆலங்குடிக்கு வந்து சேரும்மக்கள் கூட்டத்தால் ஆலங்குடியில் மக்கள் அலை மோதும். இத்தகையதொரு வியாழ மாற்ற வேளையில் ஆலங்குடியானையும், அக்கோயிலுக்கு அதிபதியான தட்சணா மூர்த்தியையும் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது நமது முன்வினைப் பயனே.




வியாழ மாற்ற வேளையில் கோயில் வளாகத்தில் கூடும் பலலெட்சம் மக்கள் கூட்டத்தினரை சமாளிப்பதற்காக பல விஷேட ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். நடுப்பிரகாரத்தினூடாக மக்கள் நடந்து செல்வதற்காக "வழிப்பாதைகள்" அமைத்துள்ளார்கள். அப்பாதைகளின் இடது பக்கமாக (சுவர் பக்கமாக) பிள்ளையார் சந்நிதி வரை மேடை அமைத்து வரிசையாக படிக்கட்டுகளும் நிரந்தரமாக அமைத்துள்ளார்கள். அந்தப் படி வரிசைகளில் வியாழ தோச நிவர்த்தி செய்யவரும் பக்தர்கள் தட்டத்தில் 24 சிட்டிகளுடனும், கருமை நிறமான பட்டு (அல்லது துண்டு) டனும் வருகிறார்கள். ஒவ்வொரு சுற்றுக்கும் ஒவ்வொரு தீபமென, தீபத்தினை ஏற்றி மேடையில் வைக்கிறார்கள். தீபத்துடன் முதற்சுற்று வருகையிலேயே தட்சணாமூர்த்தி சந்நிதானத்தில் வணங்கி கையில் கொண்டுவரும் கருப்புத் துணியை அவரது சந்நிதானத்தில் வீசி விடுகிறார்கள். தரித்து நின்று- பொறுமை காத்து- வணங்கி வரம்பெற அங்கு அவகாசமே கிடையாது. காரணம் பின்னால்

வருபவர்கள் முன்னால் செல்பவர்களை முட்டித்தள்ளியபடியேயிருப்பர். சுற்றுக்கள் சரியாக வருகிறதா? எனக் கணக்கு வைக்கவே தேவையில்லை. தட்டில் தீபம் இல்லையெனில் "24சுற்று நேர்த்தியை" நிறைவு செய்ததாக அர்த்தப்படும். தோசம், நிவர்த்தி, தீபம், அர்ச்சனை எனச் சாதாரணமாகப் பெண்களே அதிகம் ஈடுபடுவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இங்கே பெண்களுடன் சரிசமமாக ஆண்களும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்வது ஒரு ஆச்சரியமான அம்சமாகும். உட்பிரகாரத்து "வழிப்பாதை"களினூடாக நகரும் மக்கள் கூட்டம் நம்மையும் கூடவே அள்ளிச் சென்று கோபுர வாசலுக்கு வெளியே தள்ளிவிடுகிறது. மக்கள் கூட்டத்தில் முட்டி மோதி மூச்சுத்திணறித் திண்டாடிய நாம் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, ஆபத்சகாயேசுவரையும் தென்முகக் கடவுளையும் மனதிற்கொண்டு அருகே பிரசாதம் வழங்கப்படும் இடம் நோக்கி நகருகிறோம். மீண்டும் சந்திப்போமா?

"நச்சித் தொழுவீர்காள் நமக்கிது சொல்லீர்
கச்சிப் பொலி காமக்கொடியுடன் கூடி
இச்சித்து இரும்பூளை இடங்கொண்ட ஈசன்
உச்சித் தலையில் பலி கொண்டுழல் ஊணே"

(சம்பந்தர்)

# இறைவன் அருளைப் பெற....

நம் ஐம்புலன்களுக்கு எட்டாத அற்புதமான சக்தி ஒன்று உண்டு. அது எங்கும் நிறைந்துள்ளது. எல்லாமாக விளங்குகிறது. எல்லா உயிர்களுக்கும் உயிராய் விளங்குகிறது. இந்த சக்தி ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ் ஜோதி. இது எள்ளில் எண்ணெய் மறைந்திருப்பது போல் எல்லாப் பொருட்களிலும், உயிரிலும் மறைந்து விளங்குகின்றது. இது ஐம்புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாதது. வார்த்தைகளால் விளக்கமுடியாதது இதையே இறைவன் என்கிறோம். தேனைப் பற்றிப் படிப்பதாலோ, அறிவதாலோ என்ன பயன்? சுவைத்துப் பார்க்காவிட்டால் தேனின் சுவையை முழுமையாக அறிய முடியாது அல்லவா? இறைவனும் அப்படிப்பட்டவன்தான்.

இறைவனின் அருள் கிடைத்தால் தான் இறைவனை நாம் அறிய முடியும். "அகம் புகுந்தார் அடியேற்கு அருளாலே" என்கிறார் திருமூலர். "நம் அறிவுக்கு அப்பாற்பட்ட இறைவன், எண்ணத்திற்கும் எட்டாத இறைவன், பக்தி என்னும் வலையை வீசினால் அதில் அகப்படுவான்" என்கிறார் மணிவாசகப் பெருமான். இவ்வாறு இறைவன்மீது அன்புகாட்டும் நெறியே பக்திநெறியாகும். பக்தியால் பரமனை அடைவது என்பது எல்லா மதங்களுக்கும் பொதுவானது. நாம் இறைவன்மீது செலுத்தும் பக்தியின்மூலம் இறைவன் அருளைப் பெறலாம்.

விதண்டாவாதம் செய்வதுதான் முட்டாளுக்குத் தெரிந்த ஒரேகலை.

# ஆனிமாத வாராந்த நிகழ்வுகள்

03.06.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "பக்திப்பாடல்கள்"

வழங்குபவர் :- இளையநிலா கலைஞர்கள்

(பக்கவாத்திய சகிதம்)

10.06.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "இன்னிசை நிகழ்வு"

17.06.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

24.06.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 162ஆவது மாத வெளியீடு

வெளியீட்டுரை :- பிரம்மஸ்ரீ கு. தியாகராஜசர்மா

(நீர்வைமணி) அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு க. நவரெத்தினம் அவர்கள்

[இளைப்பாறிய ஆசிரியர் நெவ்லியடி]

பதிவு இல. QD/14/NEWS/2011

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

